
சுவடி : 44
ஏடு : 4
அக்டோபர் 2019
*
ஆசிரியர்
வே.ஆனைமுத்து
*
ஆசிரியர் குழு
க. முகிலன்
வாலாசா வல்லவன்
வையவன்
சி. பெரியசாமி
கோவிராமலிங்கம்
சி. நடராசன்
மங்கலம் அரசன்
தி.துரைசித்தார்த்தன்
ஆ. முத்தமிழ்ச்செல்வன்
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
'சிந்தனையாளன்'
பெரியார்-நாகம்மை அறக்கட்டளை
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
பெரியார்-நாகம்மை நூலகம்
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொடர்புக்கு :
94448 04980
95975 26990
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
சன் நகலகம், சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
www.keetru.com
*



# இந்தியாவுக்கு - இந்தி மட்டுமா?



தந்தை பெரியார் அவர்கள் 1919 முதல் 1925 வரையில் தமிழ்நாடு காங்கிரசில் இருந்தார். அப்போது 1922-இல் மோதிலால் நேருவை ஈரோட்டுக்கு அழைத்து வந்து, தான் ஈரோட்டில் நடத்திக் கொண்டிருந்த தொடக்கப் பள்ளியில், இந்தி பாட வகுப்பைத் தொடங்கினார். ஏன்? அப்போது ஈ.வெ.இரா. இந்தி தேசியவாதியாக - இந்திய தேசிய வாதியாக இருந்தார்.

தந்தை பெரியார், 26.12.1926-இல் "பார்ப்பன ரல்லாதார் சுயமரியாதை இயக்கத்தைத்" தொடங்கினார். அப்போதுதான் பார்ப்பனரல்லாதார், பார்ப்பனர் ஆதிக்கத்தை எதிர்க்கும் உணர்ச்சி - பார்ப்பனப் புரோகிதத்தை எதிர்க்கும் உணர்ச்சி பார்ப்பனரல்லாதார் எல்லோருக்கும் உண்டாகும் என நம்பினார். அதைத் தமிழ்நாட்டோடு மட்டும் நிறுத்திக் கொண்டார். திராவிட நாட்டுக்குக் கூட விரிவு செய்யவில்லை.

அதேபோல், முதலாவது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் 1938-40 சென்னை கடற்கரையில் 11.9.1938-இல் "தமிழ்நாடு தமிழருக்கே!" என முழக்கமிட்ட பெரியார், மற்ற திராவிட மொழித் தலைவர்கள் பெரியாரைக் கேள்வி கேட்ட உடனே, அது தவறு என உணர்ந்து, உடனே "திராவிட நாடு திராவிடருக்கே!" என முழக்கம் எழுப்பினார்.

அதேபோன்று எல்லா இந்தியப் பார்ப்பனரல்லாதாரையும் பார்ப்பனர் பிடியிலிருந்து விடுவிக்க ஏன் முயற்சிக்கவில்லை? என்பது, என்றும் நிலைத்த ஒரு கேள்வியாகும். நிற்க.

காந்தியாரை 1948 சனவரி 30 அன்று சுட்டுக்கொன்றார்கள் ஆர்.எஸ்.எஸ். காரர்கள். இனி, அடுத்து "கி.பி.2000-க்குள் இந்தியாவில் இராம இராச்சியம் அமைப்பதுதான் தம் ஒரே குறிக்கோள்" என்று 1948 பிப்பிரவரியில் பூனாவில் முடிவெடுத்தனர்.

அவர்களின் ஒரே நோக்கம் இந்திய அரசைக் கைப்பற்றினால்தான் - இந்திய மண்ணில் இராம இராச்சியத்தை அமைக்க முடியும் என்பதுதான். இராம இராச்சியம் அமைக்கப்படுவதைத் தொடக்கம் முதலே பெரியார் எதிர்த்தார். இராம இராச்சியம் அமைப்பதை 2014-இல் மோடி பகுதியளவில் நிறைவேற்றினார்.

2019-இல் பாரதிய சனதாக் கட்சியினர் மக்களவையில் 303 பேரும், கூட்டணிக் கட்சியினர் மேற்கொண்டு 50 பேரும் ஆக 353 பேர் வந்தவுடன், பா.ச.க.வின் அதிகாரப்பூர்வத் தலைவராகச் செயல்பட்ட அமித்ஷாவை உள்துறை அமைச்சராக மோடி அமர்த்தினார்.

**உள்துறை அமைச்சர் எந்தத் துறையிலும் தலையிடலாம். ஏனெனில், உள்நாட்டில் இந்தியா-இந்தி-இந்து என்கிற நிமையை உருவாக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்வதற்கு அவர் துணிகிறார்.**

காட்டாக, 05.08.2019 அன்று ஜம்மு-காஷ்மீருக்குத் தனி அந்தஸ்து வழங்கிய இந்திய அரசமைப்புச் சட்டவிதி விதி 370-யும், எந்தக் குடிமக்களும் ஜம்மு-காஷ்மீரத்தில் சொத்து வாங்கத் தடையாக இருந்த இந்திய அரச மைப்புச்சட்ட விதி 35-A-யும் நீக்கப்படுவதாக உள்துறை அமைச்சர் அமித்ஷா சட்டம் செய்தார்; ஜம்மு-காஷ்மீரை இரண்டாகப் பிரித்தார். லடாக் பகுதியைச் சட்டசபை இல்லாத இந்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள ஒன்றியப் பகுதியாகவும் (Union Territory), ஜம்மு-காஷ்மீர் பகுதியைச் சட்டசபை உள்ள ஒன்றியப் பகுதியாக (Union Territory)-வும் பிரித்தார். (Jammu and Kashmir Re-organisation Bill - 2019).

அதேபோல் அடுத்து "ஒரே மொழி; ஒரே இந்தியா அதாவது இந்தியாவுக்கு என்று ஒரு மொழி மட்டுமே உண்டு; அது இந்தி மட்டுமே" என்று 14.9.2019 அன்று 'இந்தி மொழி நாள்' விழாவின் போது அமித்ஷா அறிவித்தார்.

**இனி நாம், தெருவில் இறங்கிப் போராடிப் பயனில்லை. நம் போராட்டத்தை, வாய்ப்பு இருப்பவர்களைக் கொண்டு நாடாளுமன்றத்தில் நடத்த வேண்டும். அமித்ஷா அவர்கள், 14.9.2019 அன்று அறிவித்ததை எதிர்த்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச வழிகாண வேண்டும். எதை நோக்கி?**

இந்தி கல்வி மொழியாக-அரசு அலுவல் மொழியாக இருப்பதை எதிர்த்து நாடாளுமன்ற மக்களவையிலும், மாநிலங்கள் அவையிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரசுக் கட்சியினரும், இரண்டு பொதுவுடைமைக் கட்சியினரும், முசுலீம் லீக் கட்சியினரும் இணைந்து குறிப்பிட்ட இரண்டு கோரிக்கைகளை முன்வைத்துக் கூக்குரல் எழுப்பச் செய்ய வேண்டும்.

பின்கண்ட கோரிக்கைகளை அனைவரும் ஒருமுகமாக எழுப்ப வேண்டும்.

1. எல்லாத் தேசிய மொழிகளையும் இந்திய அரசின் அலுவல் மொழிகளாக-ஆட்சி மொழிகளாக அறிவிக்க வேண்டும்.
2. அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில், 343 முதல் 351 வரையிலான விதிகளின் கீழ் நடுவண் அரசின் எந்தவொரு அலுவலகத்திலும் நிறுவனத்திலும் இந்தி மட்டுமே ஆட்சி மொழியாக இருப்பதற்கான முழு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தி பேசாத பிற தேசிய இன மக்களின் இனம், மொழி உரிமைகளையும் இது பறிக்கிறது. எனவே, சனநாயகத்துக்கு எதிரான இவ்வரசமைப்புச் சட்ட விதிகள் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

இந்தி மட்டுமே இந்திய அரசின் ஆட்சிமொழி என்பதற்குப் பதிலாக, அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் விதிகள் 344(1), 351 ஆகியவற்றின் கீழ் உள்ள எல்லா மொழிகளையும் இந்திய அரசின் ஆட்சிமொழிகளாக அறிவிக்க வேண்டும்.

பல தேசிய மொழிகளைக் கொண்ட ஒரு கூட்டாட்சியாக இந்தியாவை மறுகட்டமைப்புச் செய்வதற்கான முதல் நடவடிக்கை இதுவேயாகும்.

**மொழி அடிப்படையில் அமைந்துள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் அம்மாநிலத்தின் ஆட்சி மொழியே அம்மாநிலத்தின் எல்லைக்குள் உள்ள நடுவண் அரசு அலுவலகங்களிலும் ஆட்சிமொழியாகக் கட்டாயம் இருக்க வேண்டும்.**

அத்துடன், இதற்கு வழிகோலும் ஒவ்வொரு கட்சியினரும் இதே கோரிக்கையை வலியுறுத்தி - பேரணிகள், மாநாடுகள், பொதுக் கூட்டங்கள் தமிழ் நாடெங்கிலும் விரைந்து நடத்துவது இந்தக் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் என்று நான் மனமார நம்புகிறேன்.

**1.10.2019** **- வே. ஆனைமுத்து**

## 2019 செப்டம்பர் இதழில் பெரும் பிழைகள்

1. செப்டம்பர் இதழ் 2019 தலையங்கத்தில் 4ஆம் பக்கத்தில் அடியில் உள்ள பத்தி "1989-இல் என்பது பெரும் பிழை. அது 1978 என்று இருக்க வேண்டும்." இப்பெரும் பிழைக்கு வருந்துகிறோம்.
2. 2019 செப்டம்பர் இதழில் அட்டை 4-ஆம் பக்கத்தில் தலைப்பில் முதல் வரியில் கடைசியில் "உலகைக் குலக்கிய" என்று உள்ளது பிழை. அது "உலகைக் குலுக்கிய" என்று இருக்க வேண்டும்.

**- ஆசிரியர்**

# வேலூர் - 8.9.2019
# மா.பெ.பொ.க. பொதுக்குழுக் கூட்ட முடிவுகள்

## 05.01.2020இல் "சிந்தனையாளன் 2020 பொங்கல் மலர்" வெளியீடு

## 21.6.2020இல் - வே. ஆனைமுத்து எழுதிய "தந்தை பெரியார் வரலாறு" வெளியீடு

08.09.2019 ஞாயிறு அன்று முற்பகல் 10 மணிக்கு வேலூர் சோலை அரங்கத்தில் பொதுச் செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் தலைமையில், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அனைத்து மாவட்டத் தோழர்கள், பெங்களூர்த் தோழர்கள் உட்பட 37 பேர் கலந்து கொண்டனர்.

பொதுக்குழுவில் கலந்து கொண்டவர்களுள் கீழ்க்காணும் இருபதின்மர் கருத்துரைத்தனர். முதலில் வேலூர் மாவட்டச் செயலாளர் தோழர் மோ.சி. சங்கர் அனைவரையும் வரவேற்றார். பொதுச் செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் தலைமை உரைக்குப்பின், வேலூர் தோழர் சா. குப்பன் கூட்டத்தின் முதன்மை நோக்கம் பற்றிக் கருத்துக் கூறினார். தொடர்ந்து சென்னைத் தோழர் கலச. இராமலிங்கம் மற்றும் கீழ்ப் பெண்ணாத்தூர் க. ஆதிமூலம், தோழர் இரா. பச்சமலை, கீழ்ப்பெண்ணாத்தூர் பொ. சுப்பிரமணி, வேலூர் லோ. இரத்தினக்குமார், கி. இராமநாதன், மீ. டில்லி பாபு, இரா.மாசேதுங், புதுவைத் தோழர் இரா. திருநாவுக்கரசு, தி.ச. குணசேகரன், காஞ்சி சி. நடராசன், சென்னை துரை. கலையரசு, தாம்பரம் மா. சுப்பிரமணியன், வடக்குமாங்குடி பா. மோகன், வாணியம்பாடி நா. மதனகவி, கு.தொல்காப்பியன், முனைவர் ஆ.முத்தமிழ்ச் செல்வன் ஆகிய 20 பேர் கருத்துரைத்தனர்.

இக் கூட்டத்தில் தோழர்கள் விவாதங்களுக்குப் பின் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டன.

**தீர்மானம் 1 (அ) :** தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் உருவாக்கியுள்ள தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இரண்டு தொகுதிகளாக 1200 (ஆயிரத்து இருநூறு) பக்கங்களில் 2020 இறுதிக்குள் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி வெளியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

**(ஆ)** இதில் கிடைக்கும் வருவாயிலிருந்து நூல் ஆசிரியர் தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் குடும்பத்திற்கு மதிப்பூதியமாக நிலைமைக்கேற்றபடி, குறிப்பிட்ட விழுக்காடு அளிக்கவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

பகல் உணவுக்குப் பின் பிற்பகல் 2.30 மணிக்கு கூடிய கூட்டத்தில் பின் காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 2 :** "பெரியார் வரலாற்று நூல்" வெளியீட்டுக்காகத் தனி வங்கிக் கணக்கு, தி.துரை சித்தார்த்தன் மற்றும் இரா. பச்சமலை ஆகியோரின் பெயரில் தனியே கணக்குத் தொடங்கப்படுவது தேவை என்றும், இவர்களுடன் காஞ்சி சி. நடராசன், இரா. பச்சமலை, மோ.சி. சங்கர், தி. துரைசித்தார்த்தன், ஆ. முத்தமிழ்ச் செல்வன் ஆகிய அய்ந்து பேர் கொண்ட குழு, மொத்தக் கணக்குகளை ஆய்வு செய்வதற்கென அமைப்பது எனவும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

**தீர்மானம் 3 :** 05.01.2020 ஞாயிற்றுக்கிழமை சிந்தனையாளன் 2020 பொங்கல் மலர் வழக்கம் போல் வெளியிடுவது எனவும் 2020 சூன் மாதம் 21ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பெரியார் வரலாற்று நூல் இரு தொகுதிகளையும் வெளியிடுவது என்றும் இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.

2020 பிப்பிரவரி, மார்ச்சு மாதங்களில் நூலுக்கு முன்பதிவு தொடங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் 4 :** ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 1000 படிகளுக்குமேல் நூலுக்கு முன்பதிவு செய்ய வேண்டும் எனவும், மொத்தத்தில் 10,000 முதல் 12,000 படிகள் அச்சடிக்கவும் இப்பொதுக் குழு கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 5 :** மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் துணைவியார் சுசீலா அவர்கள் 30.4.2019 அன்று மறைந்தார். மா.பெ.பொ.க.வின் உயிர்நாடியாக விளங்கிய கவிஞர் தமிழேந்தி அவர்கள் 05.05.2019 அன்று மறைவுற்றார். இந்த இரண்டு இழப்புகளாலும் மா.பெ.பொ.க. பேரிழப்புக்கு ஆளாகி இருக்கிறது. அதுபற்றி இப்பொதுக் குழு அவர்கள் குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

தோழர் சா. குப்பன் நன்றி கூறலுடன் கூட்டம் மாலை 4.00 மணிக்கு நிறைவு பெற்றது.

**- வே. ஆனைமுத்து**
பொதுச் செயலாளர்

# 90% ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டைத் திட்டமிட்டுத் தடுத்து வருகிறது இந்திய ஒன்றியப் பார்ப்பனிய சனாதன அரசு

**இரா. பச்சமலை**

உலக நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்ட அய்க்கிய நாடுகள் அவையின் உலகத் தட்பவெப்பப் பருவகால மாற்றம் 23.9.2019 அன்று நடந்த உச்சி மாநாட்டில்

சுவீடன் நாட்டைச் சேர்ந்த 16 அகவை சிறுமி கிரெட்டா தன்பெர்க் உலகையும், உலகின் இளைஞர்களையும் இழிநிலைக்கும் இன்னலுக்குள்ளும் தள்ளுகிறீர்கள்; அழிக்கிறீர்கள் என்றும் இவர்களிடம் உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள் என்று எந்தத் தைரியத்தில் சொல்கிறீர்கள் என்றும் பணம், பொருளாதார வளர்ச்சி எனப் பொய்யுரை பேசுகிறீர்கள் என்றும் தனது கடுமையான எச்சரிக்கைக் கண்டனத்தை வெகுண்டெழுந்து கடும் சினத்துடன் பதிவு செய்தார். அவர் ஆங்கிலத்தில் பேசிய செய்திகளை அப்படியே கீழே தரப்பட்டுள்ளதையும் அடுத்து அதன் தமிழாக்கத்தையும் மனம் கொண்டு ஆழ்ந்து படிக்க வேண்டுகிறேன்.

நியூயார்க்கில் 23.9.2019 அன்று அய்க்கிய நாடுகள் அவையில் சுவீடன் சிறுமி கிரெட்டா தன்பெர்க்கின் உரை, உலகத் தட்பவெப்ப நிலை மாற்றம் உச்சி மாநாட்டில் : "You have stolen my dreams and my childhood with your empty words. We are in the beginning of a mass extinction and all you can talk about is money and fairly tales of eternal economic growth - how dare you? My message is that we will be watching you. I should not be here. I should have been back at school on the otherside of the ocean. Yet you all come to us young people for hope. How dare you?"

இதன் தமிழாக்கம் : "நீங்கள் என் கனவுகளையும், என் மழலைக் குழந்தைப் பருவத்தையும் உங்களின் வெற்றுச் சொற்களால் திருடிக் கொண்டுவிட்டீர்கள். நாம் ஒரு பெரும் அழிவுக்காலத்தின் தொடக்கத்தில் இருக்கிறோம்; நீங்கள் பணம், தொடர் பொருளாதார வளர்ச்சி பற்றிய கற்பனைக் கதைகளைப் பேசிக் கொண்டிருக்கலாம்; உங்களுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்? உங்களை நாங்கள் கவனித்துக் கொண்டிருக்கிறோம் என்பது தான் என் செய்தி. நான் இங்கிருக்கக்கூடாது. நான் பெருங்கடலுக்கு அடுத்த பக்கமுள்ள பள்ளிக்குத் திரும்பியிருந்திருக்க வேண்டும். இருப்பினும் இளைஞர்களாகிய எங்களிடம் உங்களை நம்புமாறு நீங்கள் எல்லோரும் வந்துள்ளீர்கள். என்ன நெஞ்சு அழுத்தம் உங்களுக்கு?" இக்குரல் உலக முதலாளியக் கும்பல்களுக்கு விடப்பட்ட அறைகூவல். திருந்துங்கள், உலக மக்களின் நலனுக்காக. இலாப வேட்டையே உங்கள் வேட்கை வெறி எனில், வீழ்வீர்கள்; அல்லது வீழ்த்தப் படுவீர்கள் விரைவில் என்பதுபோல் எச்சரிக்கை விடுக்கிறார்.

இந்திய ஒன்றியத்தில் தற்போது வெகுமக்களும், குறிப்பாக 50 கோடிக்கு மேலான இளைஞர்களும் அடிப்படைத் தேவைகளான கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்பு மறுக்கப்பட்டு இன்னலுக்கும், துன்பத்திற்கும் உள்ளாக்கப்படும் சூழலில் இவரைப் போன்று இந்திய ஒன்றிய அமைப்பின் மீது இளைஞர்கள் சினம் கொள்ள வேண்டும்.

193 உலக நாடுகளிடையே மனிதவள மேம்பாட்டுக்கான பல்வேறு குறியீடுகளில் எல்லாம் பெரும்பாலும் சுவீடன் நாடுதான் முதல் நிலையில் வெகுகாலமாக இருந்து வருகின்றது. அதனை அடுத்தடுத்து அதன் அண்டை நாடுகளான பின்லாந்து, டென்மார்க், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள்தான் முன்னிலையில் இருந்து வருகின்றன. ஒப்பீட்டளவில் நம் இந்திய ஒன்றியம் எவ்வளவு இழிநிலையில் நிலைத்து தொடர்ந்து 125-150 இடத்தில் கீழ் மட்டத்தில் வைக்கப்பட்டு வருகிறது என்பது பற்றி முன்னைய சிந்தனையாளன் கட்டுரைகளில் விரிவாகப் பேசி பதிவு செய்யப்பட்டுள்ளதையும் தயவு செய்து திரும்பவும் பார்க்கவும்,

இந்தப் பின்னணியில் பார்த்தால் தற்போதைய இந்தப் பாரதிய சனதாக் கட்சி முன்னைய காங்கிரசுக் கட்சி ஆகியவை நடத்திய இந்திய ஒன்றிய அரசு சென்ற 72 ஆண்டுகாலங்களில் நாடு பொருளாதார வளர்ச்சி பெற்று வருகின்றது என்ற அப்பட்டமான பொய்யைத் தொடர்ந்து பரப்பி அவர்கள் மேற்கொண்ட செயல்பாடுகளின் விளைவால் தற்போதுள்ள 100 கோடி மக்களுக்கும் மேலானோர் சமூகக் கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்பு ஆகிய முதன்மையான துறைகளில் மட்டுமல்லாது ஏனைய மக்கள் நலம் சார்ந்த எல்லாத் துறைகளிலும் இரங்கத்தக்க இழிவான நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்தப் பார்ப்பனியச் சனாதனக் காவிக் கும்பலான இராட்டிர சுயம் சேவக் சங்கம் அதன் அத்தனை துணை அமைப்புகள், அதன் அடிவருடிப் பாரதிய சனதாக் கட்சி அரசு இவர்களின் எடுபிடி அடிமைத் தமிழக அரசு எண்ணம், பேச்சு, எழுத்து, செயல் என இவை எதிலும் அறிவு நாணயமற்று முற்றிலும் ஒன்றுக்கொன்று முரண்

பட்ட செயல்கள், நடவடிக்கைகளை மேற்கொண்டு விட்டு மேற்சொன்னவாறு வெகுமக்களை நசுக்கித் துன்புறுத்தி அவர்களின் பிழைப்பையே அழித்துக் கேள்விக்குறியாக்கிவிட்டனர்.

இதற்குமேலும் நாட்டு மக்களில் வளமாக வாழும் மேல் வகுப்பு மக்களுள் நலிவுற்றோர் எனச் சொல்லி 10 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கி அந்த மக்கள்தான் அவர்களைப் பொறுத்தவரை இந்துக்கள் என்பதுபோல் அவர்களின் வாழ்க்கையைக் கொழிக்கச் செய்துவிட்டு தாங்கள் எல்லோருக்குமானவர்கள் என்று மனமறிந்து பொய் பேசி வருவதை கீழே தரப்பட்டுள்ள விவரங்கள் தெளிவாக்கும்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வி வேலை மறுப்பு என்பதற்குப் பலவற்றை விரிவாக எடுத்துரைக்கப்படு வதற்குமுன் உடனடி நிகழ்வு ஒன்றைச் சொல்ல வேண்டும். மேல்சாதி மக்களுள் ரூ.8 இலட்சம் ஆண்டு வருமானமுள்ள நலிந்த பிரிவினரெனச் சொல்லி 10 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்து அதற்காக மக்களுக் கென்று சென்ற 18-19 நிதியாண்டு, கல்வியாண்டில் அரசின் உயர்கல்வி இடங்கள், வேலைகள், பதவிகள், கூடுதலாக உருவாக்குவதற்கென பல ஆயிரம் கோடி ரூபாய்கள் ஒதுக்கீடு செய்ததைத் தொடர்ந்து சென்ற திங்களில் நடப்பு 19-20-ஆம் ஆண்டிற்குமாக இன்னும் பல ஆயிரம் கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுவிட்டது. இவர்கள் 10 விழுக்காடு மக்கள் என்பது அப்பட்டமான பொய். நாட்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்டால் இவர்கள் மொத்த மக்கள் தொகையில் உண்மையில் 2 அல்லது 3 விழுக்காட்டினருக்குமேல் இருக்க வாய்ப்பே இல்லை. ஏற்கெனவே மொத்தத்தில் 10 விழுக்காடு அளவே இருந்துவரும் மேல்சாதிக்காரார்கள் பலப்பல நூறு ஆண்டுகளாகக் கல்வியை முற்றுரிமை கொண்டவர் களாக உயர் கல்வியை ஏறத்தாழ முழுமையாக ஆக்கிர மித்துள்ளனர். இன்னும் கொடுமை இதில் பத்து கல்வி நிறுவனங்கள் சிறப்பானவை என்று சொல்லி, ஒவ் வொன்றுக்கும் ரூ.1000 கோடியைக் கொட்டிக் கொடுக் கின்றது மோடியின் அரசு.

ஆனால் இவர்களில் தகுதி திறமை என்பவை வெற்றுப் பீற்றல் என்பதை உலகளவில் உள்ள 1000 உயர்கல்வி நிறுவனங்கள் சிறப்பியல்புகளை அடிப் படையாகக் கொண்டு வரிசைப்படுத்தப்பட்டுள்ளதில் இந்திய ஒன்றியத்தில் பெருமையாகச் சொல்லப்படு பவையான அய்.எஸ்.சி., அய்.அய்.எம்., அய்.அய்.டி. என எவையும் முதல் 300 இடங்களுக்குள் கூட வரவில்லை என்பதிலிருந்து தெளிவாகின்றது.

இந்த இழிநிலைக்கான காரணம் ஒதுக்கீடுதான் எனக் கூச்சநாச்சமின்றி பார்ப்பனிய அச்சு ஊடகம் தலையங்கம் வெளியிடுகிறது. இந்த மூன்று விழுக்காடு இந்து மக்களுக்கு இவ்வளவு கரிசனத்துடன் செயல் படும் போது 2006-இல் 57-60 விழுக்காடு மக்களான இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கல்வியில் 27 விழுக்காடு அளித்ததாகச் சொல்லி, இந்த 2019-20 கல்வியாண்டு வரையில் மேற்சொன்ன கல்வி நிலை யங்களில் 5-6 விழுக்காடு மட்டும் அளிக்கப்பட்டுள்ளது அந்த இந்து மக்களை மனமறிந்து வஞ்சிப்பதாகாதா?

பொதுவாக தன்மான உணர்வுக்கும், தன் விடு தலை உணர்வுக்கும், மனிதவள மேம்பாட்டுக்கும் ஒவ் வொரு தனிமனிதனுக்கும் அடிப்படையான இடுபொரு ளாகக் கல்வி வழங்கப் பெறவேண்டும். குறுக்கும் நெடுக்குமாக தடுப்புச் சுவர்களுள் சமூகக் குழுக்கள் பிளவுபடுத்தப்பட்டு படிநிலைச் சமூகமாகக் கட்டமைக் கப்பட்டுள்ள இந்திய ஒன்றிய சமூகத்திற்கு மேற்சொன்ன தடைகள் தகர்த்தெறியப்படும் வகையில் சிறப்பான கல்வி முறை வகுக்கப்பட்டு அதை மக்களுக்கு வழங்க வேண்டும். ஆனால் இதுகாலம் வரை இங்கு அளிக்கப் பட்டு வருவது சமூகப் பொதுப் பண்புநலன்களை உள்ளடக்கிய அவ்வகையான கல்வி அல்ல, ஆனால் இதுபோன்ற உள்ளீடில்லாத போலியான பிழைப்புக்கு அடிகோலும் வெறும் படிப்புத்தான். இதுவே காலம் காலமாகச் சமயம், கடவுள், பார்ப்பனியம் சனாதனம் என்பதின் பேரில் பார்ப்பனர், சில மேல் வகுப்பினரின்றி ஏனைய 90 விழுக்காட்டுக்கும் மேற்பட்டோருக்கு அண்மைக்காலம் வரை முற்றிலும் மறுக்கப்பட்டு வந்தது மட்டுமல்ல, இதை மீறுபவர்கள் கடுமையான தண்டனைக்கும் உள்ளாக்கப்பட்டு உடைமைக்கே உரிமை அற்றவர்களாக வைக்கப்பட்டு இதுதான் தம் வாழ்முறை என்று அவர்களையே நம்பும்படி செய்து இழிவாழ் நிலையில் வைக்கப்பட்டு வந்தனர்.

1835-இலிருந்து எல்லோரும் கல்வி அறிவு பெற லாம் என்று அரசு பொதுக் கல்வி அளித்திட முன் வந்தது. இது படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் போதுமான உயர்கல்வியும், வேலைக்கான வாய்ப்பும் இந்திய ஒன்றியத்தில் கிடைக்கப் பெறவில்லை. இதைக் கருத்திற் கொண்டு நாட்டிலிருந்த சில மன்னராட்சிகள் இம்மக் களுக்குக் கல்வியில் வேலையில் இடஒதுக்கீடு அளித்தனர்.

தமிழ் மக்கள் உள்ளிட்ட தென்மொழி மக்களைக் கொண்ட சென்னை மாகாணத்தில் முதன்முதலாக அனைத்து அரசுக் கல்வி இடங்களும் பணிகளும் 100 விழுக்காடு மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு 1921-இல் ஆட்சியிலிருந்த நீதிக்கட்சி அரசு வகுப்புவாரி பங்கீட்டு அரசாணை வெளியிட்டது. ஆனால் நடைமுறைக்கு வந்துவிடாதவாறு 1927 வரை பார்ப்பனியம் எல்லா வகையிலும் முட்டுக்கட்டை போட்டு தடுத்து வந்தது.

ஆனால் அந்தத் தடை உடைத்தெறியப்பட்டு 1928-லிருந்து வகுப்புவாரி பங்கீட்டு அரசாணை செயல் பாட்டுக்கு வந்தது. அடுத்தடுத்து வெகுமக்களுக்குக் கல்வி, பணி வாய்ப்புகள் கிடைக்காதவாறு பல வடிவத்தில் இதற்குத் தடைகள் வந்து கொண்டே இருந்தன. அவை உடைக்கப்பட்டு இடஒதுக்கீட்டுப் பயன்கள் தொடர்ந்தன. விவரங்கள் கீழே :

அ. 1932-இல் இருந்த இராசாசி அரசு பல நூறு பள்ளிகளை மூடியது. இந்தத் தடை அடுத்து நீக்கப்பட்டது.

ஆ. நாடு விடுதலை அடைந்த 1947-ஆம் ஆண்டில் வகுப்புவாரி பங்கீட்டு ஆணை விலக்கிக் கொள்ளப் பட்டது. அதுவரை சென்னை மாகாண எல்லைக்குள் இருந்த மய்ய அரசு கல்வி, பணிகளில் இருந்த இடஒதுக்கீடும் நிறுத்தப்பட்டது.

இ. மறுபடியும், 1950 அரசமைப்புச் சட்டம் நடை முறைக்கு வந்து, அதில் கல்விக்கு இடஒதுக்கீடு அளிக்கும் விதிகள் இல்லையென்று கல்விக்கான இடஒதுக்கீடு முடக்கப்பட்டது. ஆனால் இதனை எதிர்த்துப் பெரியார் பெரும் போராட்டம் நடத்தி அரசமைப்புச் சட்டத்திற்கு முதல் திருத்தம் கொண்டுவர செய்து கல்விக்கான இடஒதுக்கீட்டுக்கு வழிவகை செய்து அரசமைப்புச் சட்டத்தில் 15(4)ஆம் விதி சேர்க்கப்பட்டது.

(இவையெல்லாம் தமிழ்நாட்டில் மட்டும்தான் நடைமுறையில் இருந்தன. அரசமைப்புச் சட்டம் பிற்படுத்தப்பட்டோருக்காக கல்வியில் பணிகளில் இடஒதுக்கீட்டுக்கு உரிமை வழங்கியிருந்தும் மகாராட் டிரம் தவிர்த்த வடமாநிலங்கள் எதிலும் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை).

ஈ. 1952-இல் சென்னை மாகாணத்தில் இராசாசி ஆட்சியில் 7000 பள்ளிகள் மூடப்பட்டு, பொதுக்கல்வி மறுக்கப்பட்டது. பெரியாரின் கடும் போராட்டத்தின் தொடர்ச்சியால் காமராசர் முதலமைச்சராய் வந்ததும் மூடிய பள்ளிகள் திறக்கப்பட்டு, மேலும் பத்தாயிரத் திற்கும் மேற்பட்ட புதிய பள்ளிகளும் தொடங்கப்பட்டன.

உ. தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு 25% பின் 31% அதன்பின் 50% எனவும் பட்டியல் வகுப்பினருக்கு 15% அடுத்து 16% பின் 18% அளிக்கப்படுகிறது எனவும் பழங்குடியினருக்குத் தனியே 1% எனவும் மொத்தத்தில் 69 விழுக்காடு அளிக்கப்படு கிறது. இந்திய ஒன்றியத்தில் முதல் மாநிலமாகத் திகழ் கிறது. இன்னும் சிறப்பு போதுமான அளவில் பிரதி நிதித்துவம் பெறாத தொகுப்புகள் கண்டறியப்பட்டு அவர்களின் மேம்பாட்டுக்கெனத் தனித்தனியே உள்ஒதுக் கீடாக இசுலாமியர்க்கு 3.5%, அருந்ததியருக்கு 3%, பெண்களுக்கு 33% (விதிவிலக்காக தென்கிழக்கு மாநிலங் களில் 90% மேலும்) ஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகின் றது.

ஊ. இந்திய ஒன்றிய அரசில் அரசமைப்புச் சட்டம் வழங்கிய இதர பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி, பணிகளில் ஒதுக்கீட்டு உரிமை 1950 முதலே மறுக்கப்பட்டு வந்ததற்கு எதிராக வெகுண்டெழுந்து 1976-இல் முகிழ்ந்தது முதல் (பெரியார் சமஉரிமைக் கழகம்) மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, அதன் பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து இந்திய ஒன்றியத் தலைநகரான தில்லி முதல் உ.பி., பீகார், ம.பி. என அனைத்து மாநிலங்களின் தொடர் போராட்டங்கள், ஊர்வலங்கள், மாநாடுகள், பொதுக் கூட்டங்கள் நிகழ்த்தி பிற்படுத்தப்பட்டோரின் இடஒதுக் கீட்டுக்கு உரிமை உணர்த்தப்பட்டது. அதன் துணை விளைவாக 1978 முதல் பீகார், ம.பி., இராசத்தான், குசராத் எனப் பல மாநிலங்களில் அதுவரை இடஒதுக் கீடு பெறப்பட்டது.

எ. மேற்சொன்ன போராட்டங்களின் நேரடி விளை வாக ஒன்றிய அரசையும் மண்டல் குழு அமைக்க வைத்து, கல்வியிலும் பணிகளிலும் 27 விழுக்காடு ஒதுக்கீடு இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கிட வேண்டுமென தந்த பரிந்துரைத்தது. ஆனால் அடிப் படையில் அரசமைப்புச் சட்ட 16(4) விதி வழங்கிய இடஒதுக்கீட்டு உரிமை மட்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. வி.பி. அரசால் - 27 விழுக்காடு இடஒதுக் கீடு இதர பிற்படுத்தப்பட்டோருக்கு அளித்து 1990இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஏ. ஆனால் உச்ச அறமன்றம் இதற்கு இடைக்காலத் தடைவிதித்து ஆணையை நிறுத்தி வைத்தது. மேலும் பார்ப்பனிய சங் பரிவார பாரதிய சனதாக் கட்சியின் சதிகளால் பல்வேறு தடைகள் குறுக்கிட்டன. இறுதியில் 1994-இலிருந்துதான் இதர பிற்படுத்தப்பட்டோருக் கான 27 விழுக்காடு ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப் பட்டது. இது விரிவாகக் கீழே விளக்கப்பட்டுள்ளது.

ஐ. அரசமைப்புச் சட்டம் விதி 15(4) வழங்கிய இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக கல்விக்கான ஒதுக்கீட்டு உரிமை 2006 வரை மறுக்கப்பட்டு வந்ததையும் மா.பெ.பொ.க.வின் தொடர் போராட்டங்கள் வாயிலாய் பிற அமைப்புகள், இயக்கங்கள், அரசியல் கட்சிகளின் கூட்டு முயற்சியால் 2007-இல் ஒன்றிய அரசுக் கல்வி யில் 27% இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது. அந்த ஆணை யிலேயே அது செயல்பாட்டுக்கு வருவதை முடக்கும் வகையில் நிதிமுடை, கல்வி நிலையங்களில் அடிப் படை கட்டமைப்பு போதுமானதாக இல்லை. பயிற்று விக்க வேண்டிய அளவு ஆசிரியர்கள் இல்லை என்ற பல்வேறு காரணங்களைச் சொல்லி ஆண்டுக்கு 9% ஒதுக்கீடு அளவுக்கு மட்டும் வழங்கி மூன்றாண்டுகளில் 27% இடஒதுக்கீட்டு அளவை எட்டலாம் என்று ஒன்றிய அரசு நயவஞ்சகம் செய்தது. உண்மையில் முதல்

தவணை 9% ஒதுக்கீடு கூட மேற்சொன்ன காரணங்களைக் காட்டி மேலும் பல ஆண்டுகளுக்குத் தள்ளிப் போடப்பட்டது. இதன் விளைவால் இந்த 2019ஆம் ஆண்டு வரையில் முழுமையாகச் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்படவில்லை.

வெகுமக்களுக்கெதிராக அவர்களின் மேம்பாட்டுக்கு எதிராகத் திட்டமிட்டு எவ்வாறெல்லாம் வஞ்சகமாகவும், கயமை எண்ணத்துடனும் இந்திய ஒன்றியப் பார்ப்பனிய சனாதன அரசு அடுக்கடுக்காக தடைகளை ஏற்படுத்தி இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அரசமைப்புச் சட்டம் கல்வியில் வேலையில் உரிமையாக வழங்கிய ஒதுக்கீட்டை சிதைத்து வந்துள்ளது மட்டுமல்ல. இந்த மக்கள் பற்றற்ற ஆளும் பார்ப்பனக் கும்பல், மண்டல் குழு ஒட்டுமொத்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கான விடுதலைக்காகவும் மேம்பாட்டுக்காகவும் கல்வி, வேலையில் மட்டுமின்றி, நாட்டின் பொருளாதாரத்தின் பல்வேறு தளங்களான வணிகம், தொழில்கள், நாட்டின் அடிப்படை கட்டுமானம் அமைக்கும் பணிகள் என அனைத்திலும் இடஒதுக்கீடாக அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரைகளைக் கருதவே இல்லை என்பதல்ல கொடுமை; நாட்டின் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையமோ, இவர்கள் நலன் பேசும் எந்த அமைப்பும் கட்சியும் பேசவே இல்லை என்பது வன் கொடுமை.

மேற்சொன்ன தன்மையில் உழைக்கும் ஒடுக்கப்பட்ட வெகுமக்கள் எவ்வாறெல்லாம் மனித உரிமை நேரடியாக மறுக்கப்பட்டவர்களானார்கள் என்பதுடன் இவர்கள் மறைமுகமாகவும் முன்னைய இதழ்களில் விரிவாக விவாதித்துள்ளோம். தற்போது 10% இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வந்துள்ளதை மேலும் விளக்க வேண்டியுள்ளது. எனினும் அதற்கு முன்பாக கற்பனைக் காவிய கதாநாயகனான கண்ணனின் திறனும் ஆற்றல்களும் பல்வகைச் சூழ்ச்சிகளால் முடுக்கப்பட்டு கையறு நிலைக்குத் தள்ளப்பட்டு வீழ்த்தப்படுவது போன்று இவர்கள் காலம் நெடுகிலும் சிதைக்கப்பட்டார்கள் என்பதைக் காட்டிலும் அறநெறி மன்றங்களாலும் அநீதி இழைக்கப்பட்டவர்களாகின்றனர் என்பதையும் இங்குக் காண வேண்டும்.

1992 நவம்பர் 16-இல் உச்ச அற மன்றம் ஒன்றிய அரசு இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பணிகளில் 27% இடஒதுக்கீடு அளித்து வெளியிட்ட ஆணையைச் சட்டப்படி செல்லும் என்றது. ஆனால் அதன் ஊடாகவே எதிர்விளைவைத் தந்து அவர்களின் நலனை முடக்கியும் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராகவே ஆணையும் இட்டுவிட்டது.

1. எந்த நேர்விலும் ஒதுக்கீடு அளவு ஒதுபோதும் 50 விழுக்காட்டுக்கு மிகக்கூடாது. இது விதி 16(4)-இல் எந்த ஏற்பாட்டையும் என்றிருப்பதற்கு எதிரானது. மேலும் அரசின் பார்வையில், வேலை பணிகளிலும் பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதித்துவம் போதுமானதாக இல்லை என்றிருப்பின் இடஒதுக்கீடு அளிக்கலாம். அந்தக் காலக்கட்டத்தில் இவர்களில் பங்கு வெறும் நான்கு விழுக்காடு மட்டுமே இருந்தது. உள்ளங்கை நெல்லிக்கனி போலான பொருண்மையான உண்மை நிலை. ஆனால், அதனைச் சற்றும் கருத்தில் கொள்ளாமல் 50 விழுக்காடு மக்கள் தொகையுள்ள அவர்களுக்குப் போதுமான அளவு இடஒதுக்கீடு வேண்டுமென விதி சொல்லியுள்ளதை நிறைவேற்றும் வகை 4 விழுக்காடு அளவில் மட்டும் பணியில் உள்ளனர் என்பதால் அதனை ஈடுகட்டும் வகையில் 50 விழுக்காட்டுக்கு அதிகமாக அளித்திருக்க வேண்டும். இதற்கு மண்டல் குழு பரிந்துரையே தேவையில்லை. இது உச்ச, அற மன்றம் இழைத்த பெரும் அநீதி.

2. அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 40 ஆண்டுகள் கடந்த நிலையில் 1990-இல் அதிலுள்ள 16(4) விதிப்படி இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் பணிகளில் பதவி உயர்வில் ஒதுக்கீடு அளிக்கப்பட்டிருந்தால்தான் அதில் சொல்லப்பட்டவாறு (முன்பே விளக்கியதுபோல்) போதுமான பங்கு கிடைக்க வாய்ப்புக் கிட்டியிருக்கும். ஆனால் உச்ச அற மன்றம் இங்கும் நெறிதவறித்தான் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக ஆணை பிறப்பித்து பிற்படுத்தப்பட்டவர்களின் மேம்பாட்டை முடக்கி அநீதி இழைத்துவிட்டது.

3. இவையெல்லாம் (arbitrary) தன் மனப்போக்கில் அரசமைப்புச்சட்டத்திற்கு எதிராக ஆணையிட்டவை என்பதைக் காட்டிலும், பிற்படுத்தப்பட்டுள்ளோருள் ஆறு வகையினரை எந்த அடிப்படையுமின்றி வளமான பிரிவினர் (creamy layer) என்று கோடிட்டுக் காட்டிவிட்டு, அதை அப்படியே அரசின் குழுவின் பரிந்துரையாகப் பெற்றுக்கொண்டு அவர்கள் கல்வி, சமூகத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டு விளிம்புக்கு வெளியுள்ளவர்கள் எனச் சொல்லி அவர்கள் இடஒதுக்கீட்டுக்குத் தகுதியற்றவர்கள் என்று ஆணையிட்டது பார்த்தமாத்திரத்திலேயே அடிப்படை இயற்கை நியதிக்கு முரணானது மட்டுமல்ல; அரசமைப்புச் சட்டத்திற்கு முற்றிலும் எதிரானது. இது கீழ்க்காணும் காரணங்களால் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட மிகப் பெரும் அநீதி.

அ) மண்டல் குழுவின் ஆய்வு முழுமையானதல்ல; போதுமான மாதிரி அளவு (sample size) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. உண்மையில் 1881 ஆண்டு முதல் 1981ஆம் ஆண்டு வரையிலான மக்கள் தொகையை அடிப்படையாகவும், அறிவியற்படியான இணைவுருபருண்மை (Projection)

முன்வைக்கப்பட்டு அதன் அடிப்படையிலும் சமூகம், கல்வியிலும் பிற்படுத்தப்பட்டவர்கள் என ஒரு பிரிவினைக் கருதுவதற்கு அப்பிரிவின் படிப்பறிவு, பொருளாதார நிலைமை, சமூக நிலை, வாழ்கின்ற சூழல், குடிநீர் பெறச் செல்ல வேண்டிய தூரம் எனப் பல அளவுகோல்களை முறையாக வகுத்து, அவற்றை நிறைவு செய்யும் பிரிவினர் மட்டும் என வரையறை வகுத்திருந்தார் மண்டல். உண்மையில் மண்டல் எதிர்கொண்ட ஆய்வுக்கான மிகப்பெரிய விரிந்த இந்திய ஒன்றியப் பரப்பு, 7000-8000 சாதி-அமைப்புகளைக் கொண்ட மிகப் பெரும் படிநிலைச் சமூகம், இன்னும் எண்ணிலடங்கா இடையூறுகளையும் இன்னல்களையும் எதிர்ொகண்டு இரண்டு ஆண்டுகள்-நாடெங்கும் விரிவாக பயணித்து ஆழ் ஆய்வு மேற்கொண்டு அதன் அடிப்படையிலான முடிவுகளின் துணைகொண்டு பரிந்துரைகள் வடித்தெடுக்கப்பட்டவை. ஆனால், உச்ச அறமன்றம் சமூகம் கல்வியில் பிற்படுத்தப்பட்டோருள் வளமான பிரிவினர் என்று அடையாளங் காணப் பலவகைப் பதவி, பணிகளின் உயர்தன்மைகளைக் கணக்கில் கொள்ளப்பட்டு அவர்கள் இடஒதுக்கீட்டுக்கு விளிம்புக்கு வெளியில் வருவோர் என வரையறுக்கப்பட்டது. இதற்காக எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. உண்மையில் இவையெல்லாம் இரண்டாம் நிலை விவரங்களின் அடிப்படையில் மிகப்பெரும் அரச எந்திரம் எளிதில் ஆய்வு செய்திருக்க முடியும். ஆனால் அப்படி எந்த ஆய்வுமின்றி உச்ச அறமன்றம் கோடிட்டுக் காட்டிய பிரிவினரை வளமானவர்கள் என்று வரையறுத்து விட்டது.

உச்ச அறமன்றம் இடஒதுக்கீட்டு உரிமையுள்ள சமூகக் கல்வியில் பிற்படுத்தப்பட்டவர்களுள் ஆறு வகைப் பிரிவினரை வளமான பிரிவினர் என இட ஒதுக்கீட்டு வளையத்திலிருந்து நீக்கிட வேண்டும் என்கிறது. ஆறாவது பிரிவினர் அவர்களின் பொருளாதார அடிப்படையில் வளமானவர் என்றால் இடஒதுக்கீட்டு தகுதியற்றவர் ஆகிறார். வளமானவர் என்பதற்கு அளவுகோலாக ஒருவரின் ஆண்டு வருமானம் 1993-இல் (அப்போது) ரூ.ஒரு இலக்கத்திற்கு அதிகமாக உடையவர் என வரையறுக்கப்பட்டது. அதாவது இந்த வருமான வரம்பு எந்த ஆய்வின் அடிப்படையிலும் முடிவு செய்யப்படவில்லை. எனினும் இந்த வருமான வரம்பை எட்டிய பிற்படுத்தப்பட்ட பிரிவினர் சமூக நிலையில் உயர்ந்து விடுகின்றனர். மற்றும் இந்த அளவு வருமானம் உடையவர் கல்வி பெறுவதிலும் இன்னல் இருக்காது. எனவே இந்த அளவு வருமான உடையவர் சமூக அளவிலும், கல்வியிலும் பின் தங்கிய நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு வந்து விடுவதால் இவர்கள் முன்னேறிய வளமான (Creamy Layer) பிரிவுக்குள் வந்து விடுகின்றனர். அடிவேளை ரூ. ஒரு இலக்கத்திற்குக் குறைவான ஆண்டு வருமானம் உள்ளவர் வளமான பிரிவுக்குள் வரமாட்டார். ஆனால் அவர்கள் வறியவர் என்றோ, நலிந்தோர் என்றோ கொள்ளப்படாமல் அவர்கள் சமூக நிலையிலும் கல்வியிலும் பிற்படுத்தப்பட்டோராகக் கருதப்பட்டு இடஒதுக்கீட்டுக்கு உரிமை உரியவராகின்றார் என உச்ச அறநீதிமன்றம் ஆணையிட்டுவிட்டது. இந்த வகையில் உச்சநீதிமன்றம், ஒரு பிற்படுத்தப்பட்டவர் இடஒதுக்கீடு பெறுவதற்கு அவர் சமூக நிலையிலும், கல்வியிலும் மட்டுமின்றி பொருளாதார நிலையிலும் என மூன்று வகையிலும் பிற்படுத்தப்பட்டோராக இருக்க வேண்டுமென வரையறுத்துவிட்டது.

இப்போது 10% இடஒதுக்கீடு சட்டத்தைப் பார்ப்போம் அதாவது மேல்சாதி மக்களுள் ஒருவரின் குடும்ப ஆண்டுக்கு ரூ.8 இலக்கத்திற்குக் குறைவாக இருப்பின் அவரை நலிந்த பிரிவினர் எனச் சொல்லி அவருக்கு இடஒதுக்கீடு வழுங்கிடலாம் என்று அந்தப் பிரிவினருக்கு என கல்வியிலும், வேலை, பணிகளிலும் தனியே பத்து விழுக்காடு வழங்கி சட்டம் இயற்றப்பட்டு சென்ற நிதி கல்வியாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அரசமைப்புச் சட்ட விதிகள் 14, 15, 16, 19, 21, 335-ன்படி இந்தப் பத்து விழுக்காட்டுச் சட்டம் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக இயற்றப்பட்டது என்பதுடன் இந்தச் சட்டம் இயற்றப்பட விதி 46-ஐ ஆதாரமாகக் கொள்ளப்பட்டு அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது. அரசமைப்புச் சட்டத்தின்மீது நிகழ்த்தப்பட்ட மோசடி என நாம் விரிவாகப் பேசியுள்ளோம். காரணம், விதி 46, பொதுவாக ஒடுக்கப்பட்ட மக்கள் உள்ளிட்ட நாட்டிலுள்ள அனைத்து மக்களுள் நலிந்த பிரிவினர்களைக் கல்வி, பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெறச் செய்து சமூக அநீதியிலிருந்து அரசு காப்பாற்ற வேண்டுமென்றுதான் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் கல்வியிலும், சமூகத்திலும் மேல்சாதி நலிந்தவர் என்ற பிரிவினர் இந்திய ஒன்றிய வரலாற்றில் ஒருபோதும் வேறுபடுத்தப்பட்டவர் (discriminate) எனப் பின்தங்கிய நிலையில் இருந்தவரே அல்ல. எனவே இந்த 10% இடஒதுக்கீடுச் சட்டத்திற்காக மேற்கொண்ட அரசமைப்புச் சட்டத் திருத்தம் அடிப்படையிலேயே பிழையானது (inherently error sticken) எனவே இது ஒரு அரசமைப்புச் சட்ட மோசடி.

மேலும் இந்த 10% ஒதுக்கீட்டுச் சட்டம் உச்ச அறமன்றம் விதித்துள்ள இடஒதுக்கீட்டுக்கான 50% உச்ச வரம்பை மீறுவதாக உள்ளது. இது போன்ற 50% வரம்பு மீறிய இடஒதுக்கீடு பற்றிய வழக்குகளில் நாட்டின் உச்ச அற மன்றங்கள் 1990-லிருந்து காலம் நெடுகிலும் அந்த ஒதுக்கீட்டு ஆணைகளைச் சட்டத்திற்கு ஒப்பான உச்ச அறமன்றத் தீர்ப்புக்கு எதிரானது எனச் சொல்லி தள்ளுபடி செய்துள்ளன. எனவே இந்தப்

10% சட்டம் செல்லத்தக்கதல்ல எனத் தள்ளுபடி செய்யப் படவேண்டும்.

இந்த 10% இடஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி மேல்சாதி யைச் சேர்ந்த ஒருவரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.8 இலக்கத்திற்குள்ளாக இருந்தால் அவர் 'நலிந்தவர்' என இடஒதுக்கீடு பெறமுடியும். ஆனால் 1992 நவம்பர் 16-இல் உச்ச அனறமன்றம் வருமான உச்சவரம்பு விதித்து அந்த அளவுக்கு மேல் உள்ள பிற்படுத்தப்பட்ட வர்களை வளமானவர்கள் (creamy layer) என்றும் அவர்கள் இடஒதுக்கீடு பெறும் தகுதியற்றவர் என்றும் தீர்ப்பு அளித்தது. அதன்படி அந்த வருமான உச்ச வரம்புக்குள் வருபவர்கள் வளமான பிரிவினர் அல்லர் என்பதாகச் சொல்ல முடியும். இதுவன்றி அவர்கள் சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கியவர்கள் என்ப தால் இடஒதுக்கீடு பெறலாம் என்றுதான் எடுத்துக்கொள்ள முடியும். அதேபோன்று இந்த மேல் சாதி சார்ந்த நலிந்தோரை வளமான பிரிவினர் அல்ல என்றுதான் கொள்ள முடியும். பின் எப்படி அவர்களை நலிந்த பிரிவினர்கள் என்று சொல்வது? அதாவது மேல்சாதி சேர்ந்த ஒருவரின் ஆண்டு வருமான அளவும் அதே வருமானமுடைய பிற்படுத்தப்பட்டவரும் வருமானத் தின் அடிப்படையில் முன்னவர் வளமானவர் அல்ல என்றும் பின்னவர் நலிந்தவர் என்றும் இரு வகை யினராகக் கொள்வது எப்படி? அப்படியெனில் மேல்சாதி யினர் என்பதாலேயே அந்த வருமானமுடையவரை நலிந்தவர் என்று சொல்வதாகாதா? இது மிகவும் அடிப்படையான முரண். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டால் 10% இடஒதுக்கீடு சட்டம் இயற்கை அறனுக்கு முற்றும் முரணானது. எனவே தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

இதில் நாம் ஒன்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். அடிப்படையில் இவையெல்லாம் ஒட்டுமொத்த ஒடுக்கப் பட்ட மக்களையெல்லாம் மேம்பாடடையப் போதுமான தல்ல. ஆனால் அரசமைப்புச் சட்டத்தில் இவர்களுக் கென்று வழங்கப்பட்ட கல்வி, பணிகளில் இடஒதுக்கீட்டு உரிமையைப் பார்ப்பனிய சனாதன போக்கைக் கொண்ட இந்திய ஒன்றியத்தின் அனைத்து அலுகுகளும் அச்சு ஊடகங்களும் 10% ஒதுக்கீடு சட்டம் மூலம் மறைமுக மாக குறுக்குவழியில் தொடர்ச்சியாக முற்றிலுமாக முடக்கி இவர்களைக் காலமும் சிதைத்துக் கொண்டே தான் இருக்கும். இதனை இந்த ஒடுக்கப்பட்ட மக்கள் எதிர்கொள்வதற்கு ஒத்த கருத்துடைய அனைத்து சமூக, அரசியல் சக்திகளும் மிகப்பெரும் அளவில் ஒருங்கிணைந்து செயல்திட்டங்கள் வகுத்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டும் அனைத்து வகைப் போராட்ட வடிவங்களையும் கையாண்டும் இந்திய ஒன்றிய அரசைப் பணிய வைத்து அரசமைப்புச் சட்டம் ஒடுக்கப்பட்டோருக்கு வழங்கியுள்ள உரிமைகளை வென்றெடுத்துப் பாதுகாப்போம்.

# எப்பக்கம் புகுந்துவிடும் இந்தி?

கவிஞர். **முத்தரசன்**
பெரம்பலூர்

கருவாடு மீனாகித் துள்ளிடவும் கூடும்
காகிதப்பூ மல்லிகையாய் மணந்திடவும் கூடும்
கருங்கல்லில் நெற்பயிர்கள் விளைந்திடவும் கூடும்
குறிஞ்சிமலர் அன்றாடம் மலர்ந்திடவும் கூடும்
திருநங்கை குழந்தைகளைப் பெற்றிடவும் கூடும்
தேன்முருங்கை மூங்கிலிலே காய்த்திடவும் கூடும்
ஒருதமிழன் உயிரோடு இருக்கும்வரை இந்தி
ஓடிவந்து எப்பக்கம் புகுந்துவிடக்கூடும் ?

கொழுக்கட்டை வெடிகுண்டாய் மாறிடவும் கூடும்
குயில்கூட மயிலாக மாறிடவும் கூடும்
மெழுகாக இமயமலை உருகிடவும் கூடும்
மேலநோக்கி காவிரியும் பாய்ந்திடவும் கூடும்
முழுநிலவாய் முப்பதுநாள் தோன்றிடவும் கூடும்
முழுவானில் விண்மீனை எண்ணிடவும் கூடும்
முழுமானத் தமிழன்தான் இருக்கும்வரை இந்தி
முன்னேறி எப்பக்கம் புதுந்துவிடக் கூடும்?

முடவனுந்தான் கொம்பேறித் தேன்எடுக்கக் கூடும்
முயலுக்கே கொம்புகூட முளைத்திடவும் கூடும்
வடக்கொருநாள் தெற்காக மாறிடவும் கூடும்
வானத்தில் மக்களெல்லாம் நடந்திடவும் கூடும்
கடல்கூட வற்றினாலும் வற்றிடவும் கூடும்
கற்சிலையோ வாய்விட்டுப் பேசிடவும் கூடும்
மடலேறும் தமிழன்தான் இருக்கும்வரை இந்தி
மறுபடியும் எப்பக்கம் புகுந்துவிடக் கூடும் ?

கற்றாழை கசக்காமல் இனித்திடவும் கூடும்
கறந்தபால் மீண்டும்மடிப் புகுந்திடவும் கூடும்
ஒற்றுமையாய்ப் பாம்புடனே கீரிவாழக் கூடும்
உச்சிஇடி விழுந்தாலும் உயிர்பிழைக்கக் கூடும்
முற்றல்பலா முழுக்கசப்பாய் மாறிடவும் கூடும்
முக்கடலும் மேடாகி மலையாகக் கூடும்
கொற்றவன்தான் என்தமிழன் இருக்கும்வரை இந்தி
குறுக்கேதான் எப்பக்கம் புகுந்துவிடக் கூடும் ?

புலிமடியில் மான்குட்டி பால்குடிக்கக் கூடும்
பகற்பொழுதும் இரவாக மாறிடவும் கூடும்
புளியமரக் கிளைதனிலே புடல்காய்க்கக் கூடும்
பூவரசில் பூசணிக்காய் காய்த்திடவும் கூடும்
கிளிகூட ஏடெடுத்துக் கவியெழுதக் கூடும்
கேழ்வரகு மீதிருந்து நெய்வடியக் கூடும்
புலிபோன்ற தமிழன்தான் இருக்கும்வரை இந்தி
புறப்பட்டு எப்பக்கம் புகுந்துவிடக்கூடும்?

# முத்தலாக் தடைச் சட்டத்தின் பின்புலம் என்ன?

- க. முகிலன்

ஜம்மு-காஷ்மீருக்குச் சிறப்பு உரிமைகள் வழங்கும் அரசமைப்புச் சட்டத்தின் 370-ஆவது பிரிவை நீக்குவது, பொது சிவில் சட்டம் கொண்டு வருவது, அயோத்தியில் இராமன் கோயில் கட்டுவது ஆகிய மூன்றும் பாரதிய சனதா கட்சியின் முதன்மையான அரசியல் முழக்கங்களாக நீண்டகாலமாக முன்னிறுத்தப்பட்டு வந்தன.

ஆயினும் 1999-இல் இம்மூன்று கொள்கைகளையும் ஒதுக்கி வைப்பதாக உறுதிமொழி அளித்து, தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, வாஜ்பாய் தலைமையில் பா.ச.க. நடுவண் அரசில் அய்ந்து ஆண்டுகள் ஆட்சி செய்தது.

2019-இல் நரேந்திர மோடி தலைமையில் நாடாளுமன்றத்தில் இன்னும் கூடுதலாக இடங்களுடன் இரண்டாவது தடவையாக நடுவண் அரசில் ஆட்சியில் அமர்ந்த பின், பா.ச.க. தன்னுடைய கொள்கைகளை விரைந்து செயல்படுத்தி வருகிறது. முத்தலாக் தடைச் சட்டத்தை 25.7.19 அன்று மக்களவையிலும், 30.7.19 அன்று மாநிலங்கள் அவையிலும் நிறைவேற்றியது. 5.8.2019 அன்று ஜம்மு-காஷ்மீருக்குச் சிறப்பு உரிமைகள் வழங்கும் 370ஆவது பிரிவின் கூறுகளை நீக்கியதுடன், மாநிலம் என்கிற தகுதியையும் பறித்து, லடாக், ஜம்மு-காஷ்மீர் எனும் இரண்டு ஒன்றிய ஆட்சிப் பகுதிகளாகப் பிரித்தது.

தொடர்ந்து சொல்லப்படும் பொய், காலப்போக்கில் மெய் போன்ற தோற்றம் பெறுவதுண்டு. இந்த உளவியலை பா.ச.க. திறம்படக் கையாண்டு வருகிறது. கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக - அயோத்தியில் பாபர் மசூதி இடத்தில் இராமனுக்குக் கோயில் கட்டுதல் என்பதை முன்வைத்து-இந்துக்களிடையே பரப்பி வந்த முசுலீம் வெறுப்பு உளவியலை பா.ச.க. இப்போது அறுவடை செய்கிறது. அதனால் முத்தலாக், காஷ்மீர் சிக்கல் ஆகியன முசுலீம்கள் தொடர்பானவை எனக் கருதி, இந்துக்கள் இதில் அக்கறை காட்டவில்லை என்பதுடன் பா.ச.க. அரசின் நிலைப்பாட்டை ஆதரிக்கும் மனநிலையில் இருக்கின்றனர். மதம் சார்ந்த பெரும்பான்மைவாத அரசியல், சனநாயகத்தின் ஆணி வேரையே அரித்துத் தின்றுவிடும். எனவே உண்மை நிலையை அறிவதும், மக்களிடம் பரப்புவதும் மதச் சார்பற்ற, சனநாயக ஆற்றல்களின் கடமையாகும். அத்தன்மையில் முத்தலாக் தடைச் சட்டம் குறித்த உண்மை நிலையைக் காண்போம்.

திருமணம், மணவிலக்கு, வாரிசு உரிமை, சொத்துரிமை போன்ற குடும்பம் சார்ந்த உரிமைகளும் நடைமுறைகளும் ஷரியத் (Shariat) என்று அழைக்கப்படும்



இசுலாமியத் தனிச் சட்டத்தின்படி முசுலீம்களால் பின்பற்றப்படுகின்றன. 1937-இல் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஷரியத்திற்கு அரசு ஏற்பிசைவு வழங்கியது. இந்த ஷரியத் முத்தலாக் முறையை அனுமதிக்கிறது. இதன்படி, ஒரு முசுலீம் ஆண் தன் மனைவியிடம் ஒரே சமயத்தில் தலாக், தலாக், தலாக் என்று மூன்று முறை சொன்னாலே, அவளை மணவிலக்கு செய்து விட்டதாக ஆகும். மேலும், மணவிலக்குச் செய்யப்பட்ட மனைவிக்கு வாழக்கைச் செலவுத் தொகையைக் (ஜீவனாம்சம்) கணவன் வழங்கும் நடைமுறை இல்லை. அதனால் முத்தலாக்கினால் எண்ணற்ற முசுலீம் பெண்கள் பெருந்துன்பத்திற்கு உள்ளாயினர்.

இங்கு ஒரு செய்தியை நாம் மனங்கொள்ள வேண்டும். 1956-இல் இந்துச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்குமுன் ஒரு இந்து ஆண் பல பெண்களை மணக்கலாம். திருமணம் "புனிதமானது" என்பதால் பெண்ணுக்கு மணவிலக்கு உரிமை இல்லை; சொத்துரிமை இல்லை. இந்தியாவுக்கான அரசமைப்புச் சட்டம் எழுதப்பட்ட போது, இந்துச் சட்டத்தில் சீர்திருத்தங்கள் செய்வதற்காக அம்பேத்கர் தலைமையில் 9.4.1948 அன்று ஒரு குழு அமைக்கப்பட்டது. அம்பேத்கர் உருவாக்கிய இந்துச் சட்டத் தொகுப்பு வரைவில் மனைவி உயிருடன் இருக்கும் போது இன்னொரு பெண்ணை மணப்பது தண்டனைக்குரிய குற்றம், மனைவிக்கு மணவிலக்கு உரிமை உண்டு, மறுமணம் செய்யும் உரிமை, சொத்துரிமை முதலானவை இடம்பெற்றிருந்தன. மேலும் அம்பேத்கர் பார்ப்பன ஆதிக்கத்தையும், சாதி ஆதிக்கத்தையும் ஒழிக்கும் வகையில் பழக்கச் சட்டம், வழக்கச் சட்டம் என்கிற பெயரில் இருந்த நடைமுறைகள் இனி செல்லாது என்று அதில் கூறியிருந்தார். இந்துமதப் பழமையாளரான - அரசமைப்புச் சட்ட அவையின் தலைவராக இருந்த இராசேந்திர பிரசாத்தும் சனாதன

வாதிகளும் 5.2.1951 அன்று அம்பேத்கர் முன்மொழிந்த இந்துச் சட்டத் தொகுப்பு வரைவைக் கடுமையாக எதிர்த் தனர். 1948 முதல் இதில் அம்பேத்கருக்கு ஆதரவாக இருந்த நேரு இறுதியில் பின்வாங்கினார். இந்துச் சட்டத்தை நிறைவேற்றாததைக் கண்டித்து அம்பேத்கர் 11.10.1951 அன்று தன்னுடைய சட்ட அமைச்சர் பதவி யைத் துறந்தார். அதன்பின் 1956-இல் நாடாளு மன்றம் மூலம் இந்துச் சட்டத்தில் ஒருதார மணம், பெண்களுக்கு மணவிலக்கு உரிமை, மறுமண உரிமை, சொத்துரிமை முதலானவை சேர்க்கப்பட்டன.

ஆனால் 1400 ஆண்டுகளுக்குமுன் முகமது நபி எழுதிய குர்-ஆனில் திருமணம் என்பது ஒரு ஒப்பந்தம்; மணவிலக்கு உரிமை பெண்ணுக்கும் உண்டு; பெண் ணுக்குச் சொத்துரிமை உண்டு என்கிற முற்போக்கான கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. முகமது நபி பெண் கல்வியை ஆதரித்தார்; பெண் சிசுக் கொலையைக் கண்டித்தார். ஆனால் நபிகள் காலத்தில் நடந்த பல் வேறு போர்களில் திரளான ஆண்கள் மடிய நேரிட்டு விட்டது. அதன் விளைவால் பெண் மக்கள் தொகை ஆண்களைக் காட்டிலும் மிகவும் அதிகமாகிவிட்டது. அந்தச் சமூகச் சூழலைக் கருத்தில் கொண்டு நான்கு மனைவியரைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்பது அனுமதிக்கப்பட்டது. இப்போது முசுலீம்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணக்கலாம்; இந்துக் கள் ஒரு மனைவிக்கு மேல் மணந்தால் தண்டனை என்றுள்ள போதிலும், இந்தியாவில் முசுலீம்களைவிட இந்துக்கள்தாம் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியருடன் வாழ்கின்றனர் என்று பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 2011-ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பும் இதை உறுதி செய்கிறது.

1948-இல் இந்துச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள முயற்சி எடுத்ததுபோல் ஷரியத் சட்டத்தில் அத்தகைய முயற்சிக்கு முனையவில்லை. இந்தியா-பாக்கித்தான் நாட்டுப் பிரிவினையால் நடந்த மதப்படுகொலைளால் குருதி ஆறாகப் பெருக்கெடுத்திருந்தது. அச்சூழலில் முசுலீம் தனிச் சட்டத்தில் மாற்றம் செய்தால் நிலைமை மேலும் கொந்தளிப்பாகும் என்று காங்கிரசுக் கட்சியின் தலைமை - குறிப்பாக நேரு கருதியிருப்பார் என்று ஆய்வாளர்கள் எழுதுகின்றனர். ஆனால் இசுலாமிய நாடுகளில் ஷரியத் சட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டன.

நமது அண்டை நாடுகளான பாக்கித்தான், வங்க தேசம், ஆப்கானிதான் மற்றும் ஈரான், ஈராக், சவூதி அரேபியா, சிரியா உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட இசுலாமிய நாடுகளில் முத்தலாக் நடைமுறை இல்லை. 1961-இல் பாக்கித்தான் அரசு இயற்றிய முசுலீம் குடும்பச் சட்டத்தின் 7ஆவது பிரிவின்படி, தன் மனைவியை மணவிலக்கு செய்ய விரும்பும் கணவன், தன் மனைவி யிடம் ஒருமுறை தலாக் சொன்ன பிறகு, அது குறித்து அரசு அமைத்துள்ள குழுவின் தலைவருக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். அம்மடலின் படியைத் தன் மனைவிக்கு அனுப்ப வேண்டும். அம்மடல் பெற்றதும் அக்குழுவின் தலைவர் முப்பது நாள்களுக்குள் கணவன் குடும்பத்தின் சார்பில் ஒருவரையும், மனைவியின் குடும்பத்தின் சார்பில் ஒருவரையும் அழைத்து சமரசம் பேசுவார். எனவே பாக்கித்தானில் கூட ஒரே நேரத்தில் மூன்று தடவை தலாக் சொல்லி உடனடியாக மனைவி யை மணவிலக்கு செய்யும் நடைமுறை இல்லை. மேலும் மனைவியிடம் தலாக் கூறியது பற்றி உரிய குழுவின் தலைவருக்கு எழுத்து மூலம் தெரிவிக்காத கணவனுக்கு ஓராண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப் படும்.

இந்தியாவில் முசுலீம் சமுதாயத்தின் பிரதிநிதி என்று தன்னைத் தானே அறிவித்துக் கொண்ட அகில இந்திய முசுலீம் தனிச்சட்ட வாரியம் (All India Muslim Personal Law Board) என்கிற ஒன்று இருக்கிறது. ஷரியத் மீதான முழு அதிகாரம் கொண்ட அமைப்பாகக் கருதப்படுகிறது. முத்தலாக் நடைமுறையால் பாதிக்கப் பட்ட பெண்கள் முசுலீம் தனிச்சட்ட வாரியத்திடம் முறை யீடு செய்தனர். முசுலீம் சமுதாயத்தின் அறிஞர்கள் சிலரும் முத்தலாக் நடைமுறையை மாற்ற வேண்டும் என்று கருத்துரைத்தனர். ஆனால் முசுலீம் தனிச்சட்ட வாரியம் அசைந்து கொடுக்கவில்லை.

இந்நிலையில் 1985 ஏப்பிரல் 23 அன்று உச்சநீதி மன்றத்தின் அய்ந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு முகமது அகமத்கான் எதிர் ஷாபானு பேகம் வழக்கில் வரலாற் றுச் சிறப்பு வாய்ந்த ஒரு தீர்ப்பை வழங்கியது. முகமது அகமத்கானும் ஷாபானுவும் கணவன் மனைவி ஆவர். முகமது அகமத்கான் மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரைச் சேர்ந்த வழக்குரைஞர்; பணக்காரர். ஷாபானுவை மணந்த பின் 14 ஆண்டுகள் கழித்து இளம்பெண் ஒரு வரை இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். அதன்பின் ஷாபானுவை முத்தலாக் கூறி மணவிலக்கு செய்தார். ஷாபானுக்கு அய்ந்து குழந்தைகள். குற்ற வியல் நடைமுறைச் சட்டம் 125ஆவது பிரிவின்படி தனக்கு வாழ்க்கைச் செலவுத் தொகை அளிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

இத்தீர்ப்பை முசுலீம் தனிச்சட்ட வாரியமும், இசுலாமிய மதத் தலைவர்கள் பலரும் கண்டித்தனர். முசுலீம் களின் வாக்கு வங்கியை இழக்க நேரிடுமோ என்று அஞ்சிய பிரதமர் இராசிவ் காந்தி 1986-இல் ‘‘முசுலீம் பெண்கள் மணவிலக்கு உரிமைச் சட்டம்’’ என்பதைக் கொண்டு வந்தார். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை இச்சட்டம் செயலற்றதாக்கியது. இதை பா.ச.க.வும் இந்துத்துவச்




சக்திகளும் கடுமையாகக் கண்டித்தன. இவர்களை மகிழ்விப்பதற்காக அதே ஆண்டில் பாபர் மசூதியின் நுழைவாயில் பூட்டைத் திறக்கச் செய்தார் இராசிவ் காந்தி. இதுவே பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு வழிவகுத்தது.

2016-ஆம் ஆண்டு முத்தலாக் நடைமுறையால் பாதிக்கப்பட்ட சாயிரா பானு, இஷ்ரத் ஜகான் உள்ளிட்ட அய்ந்து பெண்கள் தனித்தனியாக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். அதில் முத்தலாக், நிக்காஹ லாலா, பலதார முறை ஆகியவற்றைச் செல்லாது என்று அறிவிக்கக் கோரியிருந்தனர். இந்த அய்ந்து பெண்களும் முப்பது அகவையைத் தாண்டிய இளம் மனைவியர். சாயிராபானு, கணவருடன் 13 ஆண்டுகள் திருமண இல்வாழ்க்கை நடத்தியவர்; இரண்டு குழந்தைகளின் தாய். அலகாபாத்தில் வணிகம் செய்து கொண்டிருந்த கணவன் 2015 அக்டோபரில் ஒரு நாளில் தலாக், தலாக், தலாக் என்று எழுதி விரைவு அஞ்சல் மூலம் அனுப்பி மணவிலக்குச் செய்தார். இஷ்ரத் ஜகான் கணவர் 2014-இல் துபாயிலிருந்து தொலைப்பேசியில் முத்தலாக் சொல்லி மணவிலக்குச் செய்தார். இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். இவ்வாறு, கணவர் எப்போது முத்தலாக் சொல்லி மணவிலக்குச் செய்வாரோ என்கிற அச்ச உணர்வுடனே வாழும் நிலையில் முசுலீம் பெண்கள் வைக்கப்பட்டிருந்தனர்.

அய்ந்து முசுலீம் பெண்கள் தொடுத்த வழக்கை விசாரிக்க உச்சநீதிமன்றத்தின் அய்ந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு அமைக்கப்பட்டது. இந்த அமர்வு பலதார மணம், நிக்கா ஹலாலா ஆகியவை குறித்து விசாரிக்கமாட்டோம்; முத்தலாக் பற்றி மட்டுமே விசாரிப்போம் என்று அறிவித்தது. நிக்கா ஹலாலா என்பது மூன்று தடவைகள் கணவனால் மணவிலக்குச் செய்யப்பட்ட பெண் மீண்டும் கணவனுடன் சேர்ந்து வாழ விரும்பினால், வேறு ஒருவரைத் திருமணம் செய்து, மணவிலக்குப் பெற்றிட வேண்டும் என்பதாகும்.

இந்த வழக்கில் 2017 ஆகத்து 22 அன்று 395 பக்கங்கள் கொண்ட தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதிபதிகள் ரோகின்டன் பாலிநாரிமன். யு.யு. லலித், குரியன் ஜோசப் ஆகிய மூவரும் முத்தலாக் நடைமுறை ஷரியத்துக்கும், குர்-ஆனுக்கும், அரசியல் சட்டத்துக்கும் எதிரானது என்பதால் செல்லாது என்று தீர்ப்பு அளித்தனர். தலைமை நீதிபதி ஜே.எஸ். கேகரும், அப்துல் நசீரும் இணைந்து எழுதிய தீர்ப்பில், ‘‘முத்தலாக் நடைமுறை தவறாக இருந்தபோதிலும் இந்தச் தனிச் சட்டத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது. ஆறு மாதங்களுக்கு இந்த முத்தலாக் நடைமுறையை நிறுத்தி வைக்க வேண்டும். அரசியல் கட்சிகள் தங்கள் வேறுபாடுகளை மறந்து முத்தலாக் நடைமுறையில் சீர்திருத்தங்கள் கொண்டுவரும் வகையில் நாடாளுமன்றத்தில் இந்திய அரசு சட்டம் இயற்ற வேண்டும்’’ என்று கூறினர். மேலும், ‘‘உடன்கட்டை ஏறுதல், பெண் குழந்தைகளைக் கொல்லுதல், தேவதாசி முறை ஆகிய சமூகத் தீமைகள் சட்டத்தின் மூலம் ஒழிக்கப்பட்டன. அதுபோல் முத்தலாக் முறையை நீக்குவது என்பது நீதிமன்றத்தின் மூலம் அல்லாமல் சட்டம் இயற்றுவதன் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்’’ என்று கருத்துரைத்திருந்தனர்.

அய்ந்து நீதிபதிகளில் மூவர் முத்தலாக் செல்லாது என்று கூறிவிட்டனர். இத்தீர்ப்பே சட்டத்திற்குரிய தகுதியைக் கொண்டதாகும். முத்தலாக் முறையைத் தடை செய்யத் தனியாகச் சட்டம் இயற்ற வேண்டும் என்று இரண்டு நீதிபதிகள் கூறியது சிறுபான்மைத் தீர்ப்பு என்பதால் நடுவண் அரசு அதைப் புறக்கணித்திருக்கலாம். ஆனால் மோடி தலைமையிலான பா.ச.க. ஆட்சி, முசுலீம் பெண்களின் பாதுகாவலனாகக் காட்டிக் கொள்ளவும், அதேசமயம், முசுலீம் ஆண்களை அச்சுறுத்தவும் இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தது.

2017 திசம்பர் 28 அன்று மக்களவையில் ‘‘முசுலீம் பெண்கள் திருமண உரிமைப் பாதுகாப்புச் சட்டம்’’ என்பதைக் கொண்டு வந்து ஒரே நாளில் நிறைவேற்றியது. ‘‘முசுலீம் சகோதரிகளின்’’ இன்னல்களைத் துடைப்பதற்காகவே இச்சட்டம் கொண்டுவரப்பட்டதாக பிரதமர் நரேந்திர மோடி கூறினார். இச்சட்டம் ‘‘முத்தலாக் சட்டம்’’ என்று குறிப்பிடப்படுகிறது. இச்சட்டத்தின்படி முத்தலாக் சொன்ன கணவன் பிணையில் வெளியில் வர இயலாத வகையில் சிறையில் அடைக்கப்படுவார். மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்படும். ஆனால் மாநிலங்கள் அவையில் பா.ச.க.வுக்குப் பெரும்பான்மை இல்லாததால் முத்தலாக் சட்டம் நிறைவேறவில்லை.

அதனால் அது சட்டமாகவில்லை. மணவிலக்கு என்பது குடிமையியல் சார்ந்தது. அதைக் குற்றவியல் போல் கருதி சிறைத் தண்டனை அளிப்பது தவறு என்று எதிர்ப்புகள் எழுந்தன. எல்லா மதங்களிலும் மனைவியைக் கைவிட்ட கணவன்கள் அனைவருக்கும் பொருந்துவ தாக இல்லாமல், முசுலீம் ஆண்களுக்கு மட்டும் சிறைத் தண்டனை என்பது வஞ்சகமான பழிதீர்க்கும் செயலாகும்.



எந்தவொரு சட்டமும் நாடாளுமன்றத் தின் இரு அவைகளிலும் ஆறு மாதங்களுக் குள் நிறைவேற்றப்பட வேண்டும்; இல்லா விட்டால் அது தன் இருப்பை இழந்துவிடும். அதனால் 2018 செப்டம்பரில் மோடி ஆட்சி அவசரச் சட்டம் மூலம் முத்தலாக் தடைச் சட்டத் திற்கு உயிரூட்டியது.

2018 திசம்பரில் முத்தலாக் சட்டத்தை இரண்டாவது தடவையாக மக்கள் அவையில் நிறைவேற்றியது பா.ச.க. ஆட்சி. 2017-இல் கொண்டுவந்த சட்டத்தில் இப்போது சில மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. முத்தலாக் சொன்ன முசுலீம் ஆண் மீது யார் புகார் அளிப்பது என்று திட்ட வட்டமாகக் குறிப்பிடாமல் முன்பு இருந்தது. இப்போது, பாதிக்கப்பட்ட மனைவி அல்லது அவரின் குருதி உறவினர் புகார் அளிக்கலாம் என்பது இடம்பெற்றது. அதேபோல் குற்றம் சாட்டப்பட்ட கணவன் பிணையில் வெளிவருவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், பிணை அளிப்பதற்கு முன் நீதிபதி மனை வியின் கருத்தைக் கேட்க வேண்டும் என்கிற நிபந்த னையும் விதிக்கப்பட்டுள்ளது. முத்தலாக் சொன்ன கணவன் தன் மனைவி, குழந்தைகளுக்கு வாழ்க்கைச் செலவுத் தொகை அளிக்க வேண்டும். குழந்தைகளை மனைவி தன் பொறுப்பில் வைத்துக் கொள்ள உரிமை உண்டு.

மேலும் குற்றம் சாட்டப்பட்ட கணவனைச் சிறையில் அடைத்த பின்னும், கணவனும் மனைவியும் சமரச மாகப் போக விரும்பினால் அதற்கும் இச்சட்டம் அனுமதி அளிக்கிறது. ஆனால் முத்தலாக் சொன்னால் மூன்று ஆண்டுகள் தண்டனை மற்றும் அபராதம் என்பதில் மாற்றம் இல்லை. இரண்டாவது தடவையும் மாநிலங்கள் அவையில் முத்தலாக் சட்டத்தை நிறைவேற்ற முடிய வில்லை. எனவே நரேந்திர மோடி ஆட்சி 2019 பிப்பிர வரியில் இரண்டாவது தடவையாக அவசரச் சட்டம் கொண்டு வந்தது.

2019 மே மாதம் பா.ச.க. நரேந்திர மோடி தலை மையில் மக்களவையில் மூன்றில் இரண்டு பங்கு இடங்களுக்குமேல் பெரும்பான்மைப் பெற்று ஆட்சி அமைத்தது. காங்கிரசுக் கட்சியும், சமாஜ்வாதிக் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி போன்ற கட்சிகளும் தேர்தலில் படுதோல்வியடைந்தன. இந்தச் சூழலில் மூன்றாவது முறையாக முத்தலாக் சட்டத்தை மோடி ஆட்சி 25.7.19 அன்று மக்களவையில் நிறைவேற்றியது. எதிர்க்கட்சி களிடையே ஒருங்கிணைவு இல்லாததைப் பயன் படுத்தி-மாநிலங்கள் அவையில் தனக்குப் பெரும்பான்மை இல்லாத நிலையிலும், 30.7.2019 அன்று நிறைவேற்றி யது. இச்சட்டத்தின் ஆதரவாக 99 உறுப்பினர்களும் எதிராக 84 பேரும் வாக்களித்தனர். எதிர்க்கட்சி உறுப்பி னர்கள் இருபது பேர் அன்று அவைக்கு வரவில்லை. சில கட்சிகள் வெளிநடப்பு செய்தன. பிரித்தாளும் சூழ்ச்சி மூலம் முத்தலாக் சட்டம் மாநிலங்கள் அவையில் நிறைவேறியது. குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் வழங்கப்பட்டுவிட்டது.

“முசுலீம் பெண்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்றுத் தவறு மோடி ஆட்சியில் சரிசெய்யப்பட்டு விட்டது. சமூக சீர்திருத்தவாதிகளான இராசாராம் மோகன் ராய், ஈசுவர வித்யா சாகர் போன்றோர் வரிசையில் நரேந்திர மோடியை வைத்து போற்ற வேண்டும்” என்று உள் துறை அமைச்சர் அமித்ஷா அறிக்கை வெளியிட்டார்.

முத்தலாக் சட்டத்தை 2019 சூன் 21 அன்று மக்களவையின் சட்ட அமைச்சர் முன்மொழிந்து பேசிய போது, “இச்சட்டம் மதம் தொடர்பானது அன்று. பாலின சமத்துவத்தையும் நீதியையும் நிலைநாட்டு வதும், பெண்களின் உரிமைகளையும் சுயமரியாதை யையும் காப்பதும் இதன் நோக்கம்” என்று கூறினார்.

இவ்வாறு கூறுகின்ற பா.ச.க. சபரிமலை கோயிலில் பெண்கள் வழிபடுவதற்கான உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராகக் கடுமையாகப் போராடியது. மோடி ஆட்சி இதற்கு ஆதரவாக நின்றது. வழக்கு நடந்தபோது பெண்கள் கோவில் நுழைவு ஆதரவுநிலை கொண்டிருந்த

பா.ச.க. உச்சநீதிமன்ற தீர்ப்புக்குப் பிறகு எதிர் நிலை எடுத்தது. 2014 முதல் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியில் இருக்கும் பா.ச.க. நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்கிற நீண்ட நாள் கோரிக்கையை நிறை வேற்றுவதற்கான சிறு முயற்சியையும் மேற்கொள் ளாதது ஏன்? எனவே முத்தலாக் சட்டம் தொடர்பாக பா.ச.க. பேசும் பாலின சமத்துவம் போலியானது ஆகும்.

முத்தலாக் சட்டப்படி, முத்தலாக் செல்லாது; மண விலக்கு செய்ததாகாது; அப்படியெனில் திருமண உறவு நீடிப்பதாகப் பொருள்; அப்படியிருக்க, வாழ்க்கைச் செலவுத் தொகையை மனைவி எப்படிக் கோர முடியும்? மேலும் சிறையில் உள்ள கணவனால் பணம் எப்படித் தரமுடி யும்? எனவே முத்தலாக் செல்லாது என்று 2017இல் உச்சநீதிமன்றம் கூறியதை ஏற்று, சிறைத் தண்டனை என்பது இல்லாமல், வாழ்க்கைச் செலவுத் தொகை அளிக்க வேண்டும் என்பதாக மட்டுமே இச்சட்டம் இயற்றப்பட்டிருக்க வேண்டும். முசுலீம் பெண்களின் காவலனாகத் தன்னைக் காட்டிக் கொண்டு, அவர்களின் வாக்குகளை ஈர்க்க வேண்டும் என் நோக்கத்துடனும், முசுலீம் ஆண்களை அச்சுறுத்தி வைக்க வேண்டும் என்கிற இந்துத்துவ மனப்போக்குடனும் முத்தலாக் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

1985-இல் உச்சநீதிமன்றம் ஷாபானு வழக்கில் அவருக்கு வாழ்க்கைச் செலவுத் தொகையை அளிக்க வேண்டும் என்று தீர்ப்பு கூறிய போதே முசுலீம் தனிச் சட்ட வாரியம் அதை வரவேற்று இருக்க வேண்டும். பாக்கித்தான் உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட நாடு களில் முத்தலாக் நடைமுறையை ஒழித்திருப்பது போல் இந்தியாவிலும் செய்திருக்க வேண்டும். இவ்வாறு செய்யத் தவறியது தன் சொந்த மதத்துப் பெண் களுக்கு இழைத்த அநீதியாகும். இதை நல்வாய்ப்பாகப் பயன்படுத்தி பா.ச.க. முத்தலாக் சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டது.

1980 முதல் தீவிரமடைந்துவரும் இந்துத்துவத்தை எதிர்கொள்வது என்கிற எண்ணத்தில் பழமைவாத இசுலாமிய நடைமுறைகளை மேலும் இறுக்கம் பெறச் செய்வது தீர்வாகாது என்பதை முசுலீம் தனிச்சட்ட வாரியம் உணர வேண்டும். எது எப்படியிருப்பினும் முத்தலாக் சட்டத்தில் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை என்பதை நீக்க வேண்டும்.

உலகில் எல்லா மதங்களும் பெண்களை இழிந்த பிறவியாகவும் ஆணின் அடிமைகளாகவுமே கருது கின்றன. இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே மதச்சடங்குகளும் வாழ்வியல் நெறிகளும் வகுக்கப்பட் டுள்ளன. இத்தகைய மத நம்பிக்கைகள், சடங்குகளி லிருந்து விடுபடுவதே பெண்களின் விடுதலைக்கான வழியாகும்.

## பாட்டாற்று வெள்ளம் - பாவேந்தன்

பாட்டாற்று வெள்ளமாய்ப் பாவேந்தன் பாய்ந்தான்
பாவாற்றில் தமிழ்ச்சுவைக் கடல் கரைத்தான்
ஏட்டாற்றை எழுதுகோலில் பிறக்கவிட்டு
எழுத்தாற்றல் விசையினிலே வான்இழுத்தான்.
நாட்டாற்றில் பூணூல் முதலைவாய் புய்த்தான்
'நடை'யாற்றில் சாதிவேங்கை மூழ்க்கடித்தான்
கூட்டாற்று வெள்ளச் சீற்றப் பெருக்காய்க்
குமுகாயக் கொடுமைகளின் வேர்கிழித்தான்.

மண்பெற்று மதர்ப்புற்ற பாண்டியன்தன்
பரிசுக்கு வான்பரிசும் ஈடே இல்லை.
பெண்பெற்று மதிப்புற்ற 'குடும்ப வெற்றிப்
பொன் விளக்கிற்கு' மின்சுடரும் இணையே இல்லை.
கண்மயக்கி உயிர்மலர்த்தும் 'எதிர்பாராத
கனி முத்தக்' காதலுக்குத் தமிழோஃடு
பண்மிழற்றும் நெஞ்சிழுக்கும் 'இசைஅமிழ்தம்'
பல் தொழிலோர் மனவுணர்வின் யாழின் ஊற்று!

"விழித்தெழுடா தமிழாநீ! உறக்கம் போதும்
விரைந்தெழுடா தமிழியக்கக் களப்போர் காண
அழித்தொழிடா மூடத்தன முட்டாள் முள்ளை
அறுத்தெறிடா பழங்கட்டுப் பாட்டின் கட்டை
வழித்தெறிடா ஆரியத்தின் வேர்வை நீசம்
வகுத்தெழுடா பகுத்தறிவுக் கொள்கைப் பாடம்.
மழித்தொழிடா மயக்கும் பொய்மதக் கோட்பாட்டை
மதித்தெழுடா பெரியார் சீர்திருத்தக் கோட்டை."

வெட்டுதற்கும் வண்டமிழின் வாளெடுத்தான்
வெல்லுதற்கும் தமிழ் உலையில் வேல்வடித்தான்
திட்டுதற்கும் தீந்தமிழில் கனலெடுத்தான்.
தீட்டுதற்கும் துறை அனைத்தும் உச்சம் தொட்டான்.
கொட்டுதற்கும் தமிழ்மழையை வான்வழித்தான்.
கொஞ்சுதற்கும் தமிழ்க்காதல் அமுதெடுத்தான்.
எட்டுதற்கும் விண்ணடுக்கைத் தமிழால் எய்தான்
ஏவுதற்கும் தமிழ்த்தலைமை வீறெடுத்தான்.

தமிழுக்கும் அமுதென்று பெயரை வைத்தான்.
தழலுக்கும் தண்மைக்கும் தமிழ்குடித்தான்
இமைக்குங் கண்ணுக்குள்ளும் தமிழ்வரைந்தான்.
இடைவிடாது தமிழ்ப்பற்றுக்குருதி வார்த்தான்.
குமிழிக்கும் குன்றுதாங்கும் உரத்தைச் சேர்த்தான்.
குயிலுக்கும் அரிமாவின் குரல் கொடுத்தான்.
திமிருக்கும் எதிர்ப்புக்கும் போர்தொடுத்தான்
திசையெங்கும் தமிழ்ஒளிர உயிர்விதைத்தான்.

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

# மாபெரும் மனிதநேயர் தந்தை பெரியார்

*(செப்டம்பர் 17 2019 அன்று தந்தை பெரியார் அவர்களின் 141ஆம் பிறந்தநாள் விழா ஒன்றிய அரசின் பெட்ரோலிய எரிவாயுத் துறை அமைப்பின் (ONGC) சார்பாக அதன் எழும்பூர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் ஆற்றிய ஆங்கில உரையின் சுருக்கம்)*

**- குட்டுவன்**

தந்தை பெரியார் அவர்களின் 141ஆம் பிறந்தநாள் விழா ஊரெங்கும் நாடெங்கும் உலகெங்கும் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. இந்த விழாவை ஒன்றிய அரசின் பெட்ரோலிய எரிவாயுத் துறை அமைப்பு (ONGC) அதன் அனைத்து கிளைகளின் தலைமை அலுவலகங்களில் கொண்டாடுவது பெருமைக்குரிய நிகழ்வாகும். இதற்கென்று இந்த நிதியாண்டில் 38 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் நிதியை ஒதுக்கிக் கொண்டாடுவது பாராட்டுக்குரியதாகும்.

தந்தை பெரியார் உலகச் சிந்தனையாளர்களில் தனித்தன்மையோடு விளங்குகிறார். பெரியார் நான்காம் வகுப்பு வரையே படித்தாலும் வாழ்க்கை முழுவதும் ஒரு மாபெரும் அறிஞராகவே அவர் வலம் வந்தார். 94 ஆண்டுகள் 97 நாள்கள் வாழ்ந்தார். ஏறக்குறைய 70 ஆண்டுகள் பொதுவாழ்விற்கென்றே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். பெரியாரின் பன்முக ஆளுமை வியக்கத்தக்கதாகும். எந்தப் பணியை எடுத்துக்கொண்டாலும் அந்தப் பணியை மேற்கொள்வதற்கு 100 விழுக்காடு தன்னை அர்ப்பணித்துக் கொள்வதில்தான் அவரின் தனித்த ஆளுமை ஒளிர்கிறது.

1920ஆம் ஆண்டில் இந்திய விடுதலை இயக்கத்தில் காந்தியாரின் தலைமையேற்றுப் பணியாற்றிய போது பெரியாரின் ஆளுமையைக் கண்டு எவ்வாறு பிரித்தானிய ஏகாதிபத்தியம் அஞ்சியது என்பதற்கான ஒரு சான்று நம்மை வியக்க வைக்கிறது. 4.2.1924இல் பெரியார் கோவை மாவட்டத்தின் உத்தமபாளையம் என்ற ஊரில் முகமது மீரான் ராவுத்தர் என்பவரின் தலைமையில் கதர் ஆடையை மக்கள் விலை கொடுத்து வாங்கி அணிந்து பிரித்தானியாவின் ஆதிக்கத்தை வணிகத்தைத் தடுக்க வேண்டும் என ஓர் உரையை ஆற்றியுள்ளார். கதர் ஆடைகளைத் தன் தோளில் சுமந்து ஊர்ஊராகச் சுற்றி விற்பனை செய்துள்ளார். இது காங்கிரசுக் கட்சிக்கு எழுச்சியையும் பிரித்தானிய அரசிற்கு ஒரு மிரட்சியையும் உருவாக்கியது என்பதை நாம் அறிய முடிகிறது.

பெரியாரின் கதர் பற்றிய உரை முதன்முதலாகத் தமிழில் காவல் துறையால் சுருக்கெழுத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. சிங்கப்பூரின் தேசியப் பல்கலைக்கழகத்தில் ஆய்வாளராகப் பணியாற்றிய பெர்னாட் பார்ட் விடுதலைப் போராட்டக் காலத்தில் நடந்த தற்சார்புப் பொருளாதாரத்தை வலியுறுத்தி தாய்மொழியில் ஆற்றிய உரைகளை ஆய்வு செய்துள்ளார். அந்த ஆய்வில் தமிழ் மொழியில் சுருக்கெழுத்துக் கண்டுபிடித்ததைப் பற்றி ஒரு கருத்தையும் பேராசிரியர் பார்ட் பதிவு செய்துள்ளார். அவரின் கருத்தின்படி தற்சார்பு பொருளாதாரக் கொள்கையைச் சாதாரண விவசாயி தொழிலாளர்கள் ஆகியோரிடம் தமிழ் மொழியில் உரையாற்றி அரசியல் கருத்தினைப் பதிவு செய்தார் பெரியார். இதன் தொடர்பாக முதன்முதலில் 60 பக்கங்களுக்குப் பெரியாரின் உரை கமுக்கமான முறையில் சுருக்கெழுத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று எடுத்துரைத்துள்ளார். எனவே சுருக்கெழுத்து தமிழில் நடைமுறைக்கு வந்ததற்குப் பெரியார் காரணமாக அமைகிறார் என்பதை நோக்கும் போது அக்காலக்கட்டத்தில் அவருக்கான மக்கள் செல்வாக்கும் ஆளுமையும் வெளிப்படுகிறது.

1924ஆம் ஆண்டு கேரள காங்கிரசு அமைப்பின் சார்பில் வைக்கம் மகாதேவ் கோயிலைச் சுற்றியுள்ள சாலைகளிலும் கோயிலுக்குள்ளும் பின்தங்கிய சமுதாய மக்களும் தாழ்த்தப்பட்டோரும் செல்ல முடியாத ஒரு பெரும் சமூகத் தடை இருந்தது. அந்தத் தடையை உடைப்பதற்றாகக் களம் அமைத்த குழுவினர் தந்தை பெரியாரை அழைத்தனர். தந்தை பெரியார். மனைவி நாகம்மை சகோதரி, கண்ணம்மாள் மற்றும் இரு நண்பர்களுடன் இணைந்து வைக்கம் போராட்டத்திற்கு ஆதரவாகக் களம் இறங்கினார். அனைவரும் கைது செய்யப்பட்டனர். மக்கள் தலைவராக அவர் வலம் வந்ததன் காரணமாக இப்போராட்டம் வெற்றியில் முடிந்தது. பொதுச் சாலையிலும் கோயிலுக்குள் நுழைவதற்கும் அனைவருக்கும் உரிமை அளிக்கப்பட்டது. இந்த அரிய நினைவைப் போற்றும் வகையில் கேரளாவில் உள்ள வைக்கத்தில் அரசால் ஒரு நினைவு இல்லம் அமைக்கப்பட்டுள்ளது என்பது பெரியாரின் ஆளுமைக்கும் மனித நேயத்திற்கும் மற்றொரு எடுத்துக்காட்டாகும்.

1927இல் அண்ணல் அம்பேத்கர் தீண்டாமையை எதிர்த்துக் களம் காண்பதற்கு முன்பே இந்தத் தீண்டாமை எதிர்ப்புக் களத்தை அமைத்து வெற்றி கண்டவர் தந்தை பெரியார் என்று பல ஆய்வாளர்கள் சுட்டுகின்றன. 1929ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் செங்கல்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாடு பெரியாரின் பரந்த விரிந்த மனித நேயத்தைப் போற்றும் உயரிய கருத்துகளை வெளி உலகிற்குக் கொண்டு வந்தது என்றால் அது மிகையாகாது. இம்மாநாட்டில் 34 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பல எழுத்தாளர்கள், தமிழ் அறிஞர்கள் கவிஞர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர். தீண்டாமை ஒழிப்பு, சாதி மத பிறப்பு அடிப்படையில் வேறுபாடின்றி அனைவரையும் சமமாக நடத்துவது, பெண்களுக்குச் சம சொத்துரிமை வழங்குவது. பெண்களின் திருமண வயதை உயர்த்துவது, பெண்களுக்கு கல்வி வேலைவாய்ப்புகளில் உரிமை வழங்குவது மணமுறிவு உரிமையைப் பெண்களுக்கு அளிப்பது, விதவைகள் திருமணத்தை வரவேற்பது, இலவசக் கல்வியைத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு வழங்குவது போன்ற முற்போக்கான சமுதாய முன்னேற்றக் கொள்கைகள் இம்மாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டன. இத்தீர்மானங்களில் இடம் பெற்றுள்ள கருத்துகளை சமூக சீர்த்திருத்தத்தின் உரிமைப் பட்டையம் என்றே அழைக்கலாம்.

தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் தமிழர் விடுதலைக்காகவும் தமிழர்களின் சமுதாய பொருளாதார விடுதலைக்காகவும்

பெரியார் அரசியல் களத்தில் அடிப்படை மாற்றத்தை உருவாக்கு வதற்குத் தொடர்ந்து களம் அமைத்தார். பொது வாழ்வில் சுயநலமற்ற முறையிலும் குற்றமற்ற முறையிலும் செயல்பட்டு மக்களைப் பாதிக்கின்ற ஒவ்வொரு பிரச்சினையையும் தோய்ந்து ஆய்ந்து அதற்குத் தீர்வு காண களம் அமைத்த தீரர் பெரியார் என்றால் அது மிகையாகாது. ஆங்கில மொழியில் கூறுவது போல இந்தக் கருத்துகள் சமுதாயத்தில் வெற்றி பெறுவதற்காக அவர் நகர்த்தாத கல் கிடையாது. அவரின் தாக்குதலில் இருந்து தப்பித்தவரும் எவருமில்லை. சான்றாகப் பெரியார் 1930களில் 1940களில் சமூக பொருளாதாரத் தளங்களில் ஆற்றிய களப் பணிகளைப் பல உலகப் பேரறிஞர்கள் 1968க்கு பிறகே உணர்ந்து எழுதியுள்ளனர் என்பதை நோக்கும்போது பெரியார் ஒரு தொலைநோக்குச் சிந்தனையாளர் என்பது உறுதிப்படு கிறது. சுவீடன் நாட்டின் பொருளாதாரப் பேரறிஞர் நோபல் பரிசு பெற்ற குன்னர் மிர்தல் 1968இல் இந்தியாவின் சமுதாயப் பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றி ஆசிய நாடகம் (Asian Drama – 2 volumes) என்ற தலைப்பில் நூலினை வெளியிட்டார். அந்நூலில் அறிஞர் மிர்தல் இந்தியாவினுடைய பழமைக் கூறுகளில் சாதி ஆழமாக வேரூன்றியுள்ளது. இதை அழிக்க வேண்டுமென்றால் ஒரு தீவிர அறுவைச் சிகிச்சை தேவை. இதற்கான போதிய அரசியல் அழுத்தம் இந்தியாவில் இதுவரை காணப்படவில்லை (Caste is so deeply entrenched in India's traditions that it cannot be eradicated except by drastic surgery; and for this there has been no serious political pressure) என்று துல்லியமாகக் கணித்தார். ஆனால் பெரியார் ஒருவர்தான் தொடர்ந்து இதற்காக 60 ஆண்டுகள் களம் அமைத்துப் போராடினார். இந்தியச் சமூகத்தில் மனிதநேயத்தை பிற்போக்குத்தனமும் மதம் சார்ந்த மூடநம்பிக்கைகளும் தடை செய்கின்றன என்பதை அறிஞர் காரல் மார்க்சு அவர்கள் மூலதனம் நூலின் இரண்டாம் தொகுதியில் இயலில் பக்கம் 142இல்-

விவசாயிகள் பட்டினியால் வாடும் போது

அவனுடைய மாடுகள் நன்றாக வாழ்கின்றன.

நாட்டில் மழை மீண்டும் மீண்டும் பெய்தது.

கால்நடைகளின் உணவு பெருமளவில் இருந்தது .

கொழுத்த மாடுகள் ஒரு புறமிருக்க
இந்து விவசாயி பசியால் இறந்து போவான்.

உழைக்கும் கால்நடைகள் பாதுகாப்புடன் உள்ளன.

அவை விவசாயத்திற்கு வலிமையையும்
எதிர்கால வாழ்க்கை மற்றும் வருமானத்திற்கு
ஆதாரங்களையும் பெற்றுத் தருகிறது.

இத்தகைய சுழலில் தனிமனிதனுக்கு
மதம் வழங்கும் அறிவுரை கொடுமையானது.

சமுதாயத்தைப் பிற்போக்குதனமாக மாற்றுகிறது.

இந்தியாவில் ஒரு மாட்டைவிட மனிதனைச் சாகடிப்பது எளிது.

இதைச் சொல்வதற்கே கொடுமையாக உள்ளது.

என்றாலும் சொல்லியாக வேண்டும் என்று குறிப்பிட்டார்.

(While the peasant farmer starves, his cattle thrive. Repeated showers had fallen in the country, and the forage was abundant.The Hindoo peasant will perish by hunger besides a fat bullock. The prescriptions of superstition, which appear cruel to the individual, are conservative for the community; and the preservation of the labouring cattle secures the power of cultivation, and the sources of future life and wealth.It may sound harsh and sad to say so, but in India, it is more easy to replace a man than an OX. -Das Capital Volume II. -chapter X11, page 142)

தமிழ்நாட்டில் உணவை உண்பதில் மத அடிப்படையில் சாதி அடிப்படையில் நடைபெறும் சண்டைகளோ சச்சரவுகளோ பெருமளவில் இல்லாமல் இருப்பதற்கு பெரியார் ஆற்றிய மானுடப் பணி என்றால் அது மிகையாகாது. சான்றாக 1970 களில் பெரியார் திடலில் அனைத்துச் சமூகத்தினரும் மதத்தினரும் ஆடு மாடு பன்றி ஆகியவற்றின் மாமிசத்தைச் சமைத்து ஒற்று மையாக உண்பதற்கு ஒரு பெரும் விருந்தை ஒரு விழாகவே அமைத்தார். இவ்விழாவில் ஆந்திராவின் காந்திய நாத்திகர் கோராவும் கலந்து கொண்டார். பெரியார் கண்ட களங்கள் பல. பெரியார் மறைந்த பிறகும் அவர் எடுத்து வைத்த கருத்துகள் அரசு சட்டங்களாக மாறுகிற ஒரு போக்கு தமிழ்நாட்டிலும் மற்ற மாநிலங்களிலும் இன்று உள்ளது. சான்றாக 1976ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படைக் கடமைகள் என்ற பிரிவு இணைக்கப்பட்டது. அப்பிரிவின் 51 ஏ(எச்) சீர்த்திருத்தம், ஆய்வுமனப்பான்மை மனிதநேயம், அறிவியல் உணர்வு ஆகியன போற்றி வளர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டது. அரசமைப்புச் சட்டத்தின் இப்பிரிவில் சொல்லப்பட்ட நான்கு கருத்தியல்களையும் முன்மொழிந்தவர் தந்தை பெரியார் என்பதை அவரின் வரலாறும் வாழக்கையும் போராட்டங்களாக எடுத்துரைக்கின்றன.

இந்தியாவினுடைய முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் ஓர் உரையாடலில் தனது தனிச்செயலராகப் பணியாற்றிய கோபாலகிருட்டிண காந்தியிடம் ஒரு கருத்தை வலியுறுத்தியிருந்தார். இடதுசொல் பதிப்பகம் மார்க்சினுடைய கம்யூனிஸ்ட் அறிக்கையை வெளியிட்ட போது அதைப் படித்த அறிஞர் கே.ஆர். நாராயணன் வர்க்கப் போராட்டம் வெற்றி பெறாமல் இருப்பதற்குச் சாதியம் ஒரு காரணியாக அமைகிறது என்று பெரியார் குறிப்பிட்டது மிகவும் சரியான செயல் என்று குறிப்பிட்டார்.

2010ஆம் ஆண்டில் புதுமை இந்தியாவின் சிற்பிகள் என்ற தலைப்பில் வரலாற்று ஆசிரியர் இராமச்சந்திர குகா இந்தியாவின் 19 தலைசிறந்த தலைவர்கள், சிந்தனையாளர்கள், சமூக சீர்த்திருத்தவாதிகள் பற்றி நூலாக வெளியிட்டார். அந்நூலில் பெரியாரினுடைய சமூக சீர்த்திருத்தத்தின் தனித்தன்மையை விளக்கியுள்ளார். இராமச்சந்திர குகா அந்நூலில் ஆசிய சமுதாயத்தில் அடிப்படை புரட்சியில்லாமல் மானுடம் தனது பயணத்தில் வெற்றி பெறுமா என்ற ஒரு கேள்வியை எழுப்பி இதற்கு எளிதாக விடை காண இயலாது என்றும் குறிப்பிட்டுள் ளார். சீனாவும் வியட்நாமும் 1940 1970களில் வெற்றிகரமான புரட்சியைக் கண்டன. இருப்பினும் இந்த இரு நாடுகளில் அண்மை ஆண்டுகளில் சோசலிச பொருளாதார தளத்தில்

பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. இருப்பினும் இந்த இருநாடுகளிலும் மத வெறியையும் அடிப்படைவாதத்தையும் மூடக் கருத்துகளையும் காண முடியாது. சீன நாடு இன்றைக்கு உலகிலேயே அதிக வளர்ச்சியை எட்டியுள்ள நாடாக உள்ளது. வியட்நாம் கல்வி பொதுச் சுகாதாரத் துறைகளில் வெற்றி பெற்று ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மானுடக் குறியீடுகள் பட்டியலில் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

பெரியார் செய்த சீர்த்திருத்தத்தின் காரணமாக தமிழ்நாடு இன்று இந்தியாவின் வளர்ந்த மாநிலங்களில் முதன்மையாக உள்ளது என்று குகா குறிப்பிட்டுள்ளார். நோபல் பரிசு பெற்ற அமர்தியா சென்னும் ஜீன் ட்ரெஸ்சும் 2013இல் ஒரு நிலையற்ற வெற்றி - இந்தியாவும் அதனுடைய முரண்பாடுகளும் (An Uncertain Glory : India and Its Contradictions) என்ற நூலினை எழுதியுள்ளனர். இந்நூலில் குறைந்த காலக்கட்டத்தில் விரைந்த வளர்ச்சியைப் பெற்று கொடுமையான வறுமையும் ஏற்றத் தாழ்வும் இல்லாமல் தமிழ்நாடு உள்ளது என்று குறித்துள்ளனர். அனைத்துச் சாதிப் பிரிவினரும் பள்ளிக்குச் செல்லும் வண்ணம் சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படுகிறது. உறுதியான சமூக அடித்தளம் இதற்கு காரணமாக அமைகிறது. சமூக உணர்வைத் தூண்டும் பெரியாரின் சமூகச் சீர்த்திருத்த இயக்கம் ஒரு காரணமாக அமைந்தது (The social reform movement initiated by Periyar is responsible for socially engineered economic growth) என்று இந்நூலில் இந்த இரு ஆய்வாளர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

2001ஆம் ஆண்டு வாஜ்பாய் பிரதமராக இருந்த போது ஒன்றிய அரசின் முதல் மானுட மேம்பாட்டு அறிக்கையைத் திட்டக்குழு வெளியிட்டது. அவ்வறிக்கையில் சமூக விழிப்புணர்வு பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகிறது. அந்த சமூக விழிப்புணர்வைப் பெரியார் ஏற்படுத்தினார் அதன் காரணமாகத் தமிழ்நாடு கல்வி குடும்பக் கட்டுப்பாடு மற்றும் சமூக நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் முன்னிலை மாநிலமாக திகழ்கிறது (The demographic transition in Tamil Nadu has been largely a result of cumulation of gradual improvement over time in the driving variables of population growth, literacy rates along with the process of social mobilisation. The State has, historically, been a hot bed of social reform movements, often precipitating political action in the desired direction. Social consciousness inspired by leaders such as Ramasami 'Periyar' has influenced the people to become responsible parents, among other things, to adopt family planning as a means to bridge the gap between increasing aspirations and availability of resources to meet these aspirations) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது போன்று தமிழ்நாட்டில் காணப்படக்கூடிய மாற்றங்களைப் பல அறிஞர்கள் குறிப்பிட்டு பெரியாரின் சமூகத் தொண்டினை போற்றியுள்ளனர். 1967இல் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியமைந்த போது பெரியார் வலியுறுத்திய சமூக சீர்த்திருத்தக் கொள்கையின் அடிப்படையில் சுயமரியாதைத் திருமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இது பெரியார் தன் வாழ்நாளிலேயே கண்ட வெற்றி என்று அறிஞர் அண்ணாவே குறிப்பிட்டுள்ளார். உடல் நலிவுற்று அமெரிக்காவில் இருந்து பெரியாருக்கு எழுதிய கடிதத்தில் நீங்கள் செய்த பணி பெருமளவில் சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. நான் அறிந்த வரையில் உங்களைப் போன்று எந்தச் சமூக சீர்த்திருத்தவாதியும் இவ்வளவு பெரிய வெற்றியைப் பெற்றதில்லை. அதுவும் நமது நாட்டில் என்று குறிப்பிட்டார். மானுட நெறிகளைப் போற்றும் பெரியாரின் கருத்துகள்தான் இன்றைக்கு எழுகின்ற சமுதாயப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் என்று பல அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். தந்தை பெரியார் ஒரு சிறந்த மனிதநேயர் என்பதை மேற்குறிப்பிட்ட சான்றுகள் அறிஞர்களின் கூற்றுகள் மெய்ப்பிக்கினறன. தந்தை பெரியாரின் கருத்துகள் வெல்க!

பகுத்தறிவு ஓங்குக.

## புலவர் கி.த.ப. முலாண்டு நினைவு நாள் நினைவேந்தல் படத்திறப்பு கூட்டம்



கொள்கை உறவு, போராட்ட வீரர், அன்பின் ஊற்று தமிழ்த்தேசிய பெரும்புலவர் புலவர் கிதப முலாண்டு நினைவு நாள் நினைவேந்தல் படத்திறப்பு கூட்டம்"தமிழ் உரிமைக் கூட்டமைப்பு"காஞ்சியில் நடத்தியது. கூட்டத்திற்கு காஞ்சிஅமுதன் செயலாளர், தமிழ் உரிமைக் கூட்டமைப்பு தலைமை ஏற்க சி.நடராசன் மாவட்டச் செயலாளர், "மார்க்சிய பெரியாரியப பொதுவுடைமைக் கட்சி" அனை வரையும் வரவேற்க புலவர் கிதப வுக்கு புகழ் ஒலி முழகத்தி னூடே புலவர் இரத்தினவேலன் ஒருங்கிணைப்பாளர் தமிழ் உரிமைக் கூட்டமைப்பு"புலவர் கிதப படத்தை திறந்து வைத்தார்.

காஞ்சி கலைக்குழுத் தோழர் உலக ஒளி ஐயா குறித்து நினைவுப்பாடல் பாட"ஐந்திணை கலை பண்பாட்டு இணையத்தின் இணை நெறியாளர் கவிஞர் அமுதகீதன் எழுச்சிக் கவிதை பாடி உணரவூட்டினார். கா.இரவிபாரதி, திராவிடர் விடுதலைக் கழகம், பூ.கா.பொன்னப்பன், பேரறிவாளன் கல்வி பாசறை, குறளமிழ்தன், திருக்குறள் பேரவை, து.ரா. பாரதிவிசயன், புதிய பாசறை, வி.இறையழகன் மறைமலையடிகள் மன்றம், அ.சி.சின்னப்பாத் தமிழர், தமிழ் வழிக் கல்வி இயக்கம், வே.தாண்டவமூர்த்தி, தன்னாட்சித் தமிழகம், செந்தமிழ்க்குமரன், பொதுச்செயலாளர், தமிழர் கட்சி, க.அருண பாரதி, தலைமைச் செயற்குழு, தமிழ்த் தேசியப் பேரியக்கம் புலவர் படத்தைதிறந்த இரத்தினவேலன் ஐயா ஆகியோர் உரை நிகழ்த்த நிறைவு உணர்வுரை, வாலாசாவல்லவன், பொருளாளர் தமிழ் உரிமைக்கூட்டமைப்பு ஆற்றினார். நிகழ்வு கொள்கை விவாதமாகவும் அமைந்தது, இறுதியில் மூத்த தோழர் சம்பந்த சிவக்குமார் மா.பெ.பொ.க நன்றி கூறினார்.

# சிறியதாகத் தோன்றும் பிரச்சினைகள்

இராமியா

சோசலிசத் தத்துவங்களை எளிமையாகவும், சுருக்கமாக வும் விளக்க வந்த தோழர் ப.ஜீவானந்தம், ஒரு சிறிய ஊரின் இருண்ட சந்து பொந்துகளில் இருந்து ஏழைக் குடும்பங்கள் வெளியேறுவதில் மக்களின் வாழ்வுப் போராட்டத்தின் பிரச்சினை பொதிந்து கிடக்கிறது என்று தொடங்கி மக்களுக் கான சோசலிசத் தத்துவங்களை விளக்கி இருப்பார்.

ஆம். ஒரு ஏழைக் குடும்பம், தான் வாழும் ஊரில் வாழ முடியாமல் வெளியேறுகிறது என்றால், அச்சமூகம் மக்களின் நல்வாழ்வுக்கு எதிரான சமூக நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்றுதான் பொருள். இதுபோன்ற நோய்கள் பல நம் கண்முன்னே தெளிவாகத் தெரிந்தும் அவை நோய் என்று உணராமலேயே காலம் கடத்திக்கொண்டு இருக்கிறோம். ஒற்றைப் பயன்பாட்டு நெகிழியை இந்த ஆண்டுத் தொடக்கத்தில் அரசு தடை செய்தது. காரணம் அதுசுற்றுச் சூழலை மாசுபடுத்துகிறது. சரி! சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் அனைத்து ஒற்றைப் பயன்பாட்டு நெகிழிகளும் தடைசெய்யப் பட்டுவிட்டனவா?

ஒற்றைப் பயன்பாட்டு நெகிழியைத் தடை செய்து ஒன்பது மாதங்கள் ஆகிவிட்டன. தடைசெய்யப்பட்ட நெகிழிப் பட்டியலில் தண்ணீர்ப்புட்டி சேர்க்கப்படவில்லை. ஆனால் சுற்றுப்புறத்தை மாசுபடுத்துவதில் இதற்குப் பெரும்பங்கு உண்டு. இதைச் சில சூழலியலாளர்கள் எடுத்துக் காட்டினார்கள். ஆனால் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சூழலியலாளர்களின் அழுத்தத்திற்கு அரசு செவிசாய்த்து விடக் கூடாது என்று எச்சரிக்கையாகத் தண்ணீர்ப் புட்டிக்குத் தடை விதிக்கக்கூடாது என்று அதன் உற்பத்தியாளர்கள் 17.9.2019 அன்று அரசிடம் முறையிட்டு இருக்கின்றனர்.

இவர்கள் பரவாயில்லை; தங்களுககு விலக்கு அளிக்கும்படி கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். ஆனால் தூதஞ்சலில் பொட்டலம் கட்டப் பயன்படுத்தப்படும் ஒற்றைப் பயன்பாட்டு நெகிழியைப் பயன்படுத்துபவர்கள் எந்த விதக் கலக்கமும் இன்றி அதைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொண்டு இருக் கிறார்கள். இதைத்தடை செய்யவேண்டும் என்ற விவாதம் கூடப் பொதுவெளியில் வரவில்லை. ஏன்?

அரசு தடைவிதித்து இருக்கும் நெகிழியைப் பயன்படுத்து பவர்கள் அனைவரும் சிறுதொழில் செய்பவர்கள். இன்றைய முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டம் இவர்களை எல்லாம் கூலிப் பட்டாளத்தில் சேர்த்துவிட்டு மூலதனப் பயணத்தில் ஏற்படும் உராய்வுகளை மிருதுவாக்கிக் கொள்ளப்பார்க்கிறது. ஆகவே பெருமுதலாளிகளின் அடிமையான அரசு உடனே அதற்குத் தடை விதித்துவிட்டது.

தண்ணீர்ப் புட்டிகளும் ஒற்றைப் பயன்பாட்டு நெகிழிதான். ஆனால் குடிநீர்த் தொழிலில் முதலாளிகளின் மூலதனம் பெருமளவு ஈடுபடுத்தப்பட்டு உள்ளது. இந்த நெகிழிக்குத் தடைவிதித்தால் மூலதனப் பயணத்தில் மேலும் உராய்வு ஏற்படும். ஆகவே அதற்குத் தடைவிதிக்கவில்லை. சூழலிய லாளர்களின் பேச்சை எல்லாம் கேட்டுத் தடை ஏதும் விதித்து விடக் கூடாது என்று அத்தொழிலில் உள்ள முதலாளிகள் கோரிக்கை (எச்சரிக்கை) விடுத்து உள்ளனர்.

தூதஞ்சல் தொழில் அரசின் அஞ்சல் துறைக்குப் போட்டி யாக / எதிராக முதலாளிகளால் தோற்றுவிக்கப்பட்டது ஆகும். இது உலகளாவிய தொழிலாகப் பரிணமித்தும்விட்டது. இதில் கைவைத்தால் பெருமுதலாளிகளுக்குக் கடும் கோபம்வரும். இத்தொழிலில் பொட்டலம் கட்டப் பயன்படும் பொருள் ஒற்றைப் பயன்பாட்டு நெகிழியே. இருந்தாலும் இதைத் தடைசெய்வது பற்றிய விவாதமே எழவில்லை. இதனால் எல்லாம் சுற்றுச் சூழல் மாசுபடாதா என்றால் நிச்சயம் படத்தான் செய்யும். ஆனால் மூலதனப் பயணத்தில் உராய்வும், தடங்கலும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது முக்கியமா அல்லது சுற்றுச்சூழல் கெடாமல் பார்த்துக் கொள்வது முக்கியமா?

முதலாளித்துவ அரசைப் பொறுத்தவரை சுற்றுச்சூழல் கெட்டுப் போவதைப் பற்றிய கவலை இல்லை. உலகில் உயிரினங்கள் அனைத்தும் புவிவெப்ப உயர்வினால் அழிந்து போவதைப் பற்றியும் கவலை இல்லை. மூலதனப் பயணத் திற்கு உராய்வு ஏற்படாமல் பார்த்துக் கெள்வதுதான் அதன் ஒரே வேலை. மற்ற எதைப் பற்றியும் அது கவலைப்படாது.

ஆனால் உழைக்கும் மக்கள் அப்படி இருக்கமுடியுமா? ஒரு சிறிய ஊரின் இருண்ட சந்து பொந்துகளில் இருந்து ஏழை மக்கள் வெளியேறுவது முதல் ஒற்றைப் பயன்பாட்டு நெகிழி யைத் தடை செய்வதில் பாரபட்சம் காட்டுவது தொடர்ச்சியாக, விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிகழ்வுகள் வரையிலும் ஆராய்ந்து பார்த்தால் மூலதனத்திற்கும் உழைப் புக்கும் இடையேயான போராட்டமே என்று தெளிவாகத் தெரிகிறது. இப்போராட்டத்தில் மூலதனத்தை உழைப்பு வென் றால் ஒழிய அதாவது முதலாளித்துவத்தை ஒழித்து சோசலிச அமைப்பு ஏற்பட்டால் ஒழிய மக்கள் அமைதியாக வாழ முடியாது என்பதும், உலகில் உயிரினங்கள் அழிந்துவிடும் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

பிரச்சினைகள் சிறியதாகத் தானே தெரிகிறது என்று சும்மாவே இருக்கப்போகிறோமா அல்லது விளைவுகள் மோசமாக இருக்கிறதே என்று செயலில் இறங்கப் போகி றோமா? நாம் என்ன செய்யப்போகிறோம்?

# திருக்குறளும் சுயமரியாதை இயக்கமும்

- வாலாசா வல்லவன்

*சென்ற இதழ் தொடர்ச்சி...*

திருக்குறளைப் பதிப்பித்த காஞ்சிபுரம் கே.குப்புசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்தவர் 1928-29 கால கட்டத்திலேயே திருக்குறளை 10,000 படிகள் அச்சிட்டு பரப்பியுள்ளார்.

20.1.1929 குடிஅரசு இதழில் 'திருவள்ளுவரின் பெண் ணுரிமை' என்ற தலைப்பில் பெரியார் எழுதிய கட்டுரையில் திருவள்ளுவர்-வாசுகியின் அடிமைச் செயல் களைக் கற்பனையாக இருக்கலாம் என்று கூறுகிறார்.

1935 செப்டம்பர் பகுத்தறிவு மாத இதழில் 'திரு வள்ளுவர் நாத்திகர்' என்ற தலைப்பில் பெரியார் எழுதிய கட்டுரையில்,

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக இவ்வுலகி யற்றியான்''

என்ற குறளை மேற்கோள்காட்டி திருவள்ளுவரை நாத்திகராகக் காண்கிறார்.

7.5.1944 குடிஅரசு இதழில் 'குறள் பற்றிப் பெரியார்' என்ற கட்டுரையில் திருக்குறளைப் பற்றிய பெரியாரின் அகன்ற ஆய்வு புலப்படுகிறது. அதே கட்டுரை 30.4.1949 குடி அரசு இதழில் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.

எனக்குக் குறளில் ருசியை உண்டாக்கியவர் நண்பர் காலஞ்சென்ற பா.வே. மாணிக்க நாயக்கரவர்கள்தான். அவர் என்னிடம் நகைச்சுவையாகப் பேசுவதற்கும்கூட குறளையே கையாளுவார். பார்ப்பனர்களை-ஆரியத்தைக் கிண்டல் செய்வதற்கும் குறளையே பயன்படுத்தவார். அச்சமயங்களில், நானும் குறளைச் சிறிது உணர ஆரம்பித்தேன். அதுமட்டுமல்ல, அந்த நாளிலிருந்தே நான் மற்ற ஆரியப் புராண இதிகாசங்களில்-சைவ வைணவங்களில் உள்ள குற்றங்குறைகளை எடுத்துக் கூறி வருவது போல, குறளிலும் பல குற்றங்களைக் கூறி வந்துள்ளேன். நண்பர் மாணிக்க நாயக்கர் அவர்களிடமும், நான் அடிக்கடி குறை கூறி தர்க்கிப்பதுண்டு. காரணம் அப்போது நான், குறளுக்கு ஆரியரும், ஆரிய உணர்ச்சி யுள்ள மதவாதிகளும் செய்த உரைகளை மெய்யென்று எண்ணியதேயாகும்.

இந்த இயற்கையை ஒட்டியே அந்த இடத்திற்குக் குறளை வைக்குமாறு இப்போது நான் கூறுகின்றேன். எல்லாத் துறைகளைப் பற்றியும் நல்வழிகாட்டக்கூடிய-அறிவு வழியைக் காட்டக்கூடிய நீதி நூல் நம் மக்களுக்கு இன்று குறள் ஒன்றைத் தவிர வேறில்லை. இதற்கு மேம்பட்ட ஒரு நீதி நூலை இன்று காண்பது அரிது.

நம் மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான உயர்ந்த நெறியையும் வழிவகுக்கக் குறளுக்கு மேலான ஒரு நீதி நூல் வேறு கிடையாது என்பதே எனது எண்ண மாகும். நாகரிகம் என்பவை எல்லாம் மனிதனிடம் மனிதன் நடந்துகொள்ள வேண்டியதையே அடிப்படை யாகக் கொண்டதாகும். அதற்கான நெறிகள்-வழிகள் குறளில் காணலாம். சுலபமாகக் கூற வேண்டுமென்றால், குறள் ஒரு பகுத்தறிவு நூல்! மற்றவை நம்பிக்கை நூல்! அதாவது சரியோ, தவறோ நம்பிக்கை கொள்ள வேண்டிய நூல்!

திராவிட இயக்கத்தினராகிய நாங்கள் பல கடவுள் - அவை பற்றிய பல மதம் - புராணம் ஆகியவற்றை எதிர்த்து வருகிறோம். அவைகளை எதிர்க்கும் போது அவற்றை வளர்த்து - அவற்றால் பயனடைந்து வரும் கூட்டத்தினரோ, பொது மக்கள் எங்களைத் தவறாகக் கருதிக் கொள்ளுமாறு தந்திரம் செய்கின்றனர். பின்னர் தெளிவு பெற்று, ''இப்படி எதிர்க்க, உனக்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா?'' என்று நம்மைக் கேட்கும் நிலையை மக்கள் அடைகின்றார்கள். இந்த நிலையில் தான், அந்த ஆதாரத்திற்கு நாங்கள் குறளையே எடுத்துக்காட்டுகிறோம்.

ஏனெனில் குறளுக்குள் ''கடவுள்'', ''மதம்'', ''சாதி'', ''மோட்சம்'', ''முன்ஜென்மம்'' என்பவை போன்ற சொற்கள் இல்லவே இல்லை. இவ்வாறு நான் கூறு வதைக் கேட்கச் சிலர் ஆச்சரியப்படக் கூடும். ஆனால் உறுதியாகக் கூறுகிறேன். குறள் என்கிற நூலில், கடவுள் என்ற சொல்லோ, கடவுள் என்ற ஒரு வஸ்துத் தன்மையோ அறவே இல்லை. கடவுளே இல்லையானால் மேற் சொன்ன மற்றவற்றை எப்படி அதில் காணமுடியும்?

ஆரியத்தை-மூடநம்பிக்கையை எதிர்த்துப் போராட, வள்ளுவரின் குறள் நமக்குக் கேடயமாக இருக்கின்றது. மேலும் வள்ளுவர், பொதுநலத் தொண்டு ஆற்றுவதின் மேன்மையை மிக மிகச் சிறப்பித்து வலியுறுத்திக் கூறுகிறார்.

குறளில், மக்களின் நல்வாழ்க்கைக்கும், நல்லாட் சிக்கும் மக்கள் பூரண மனிதத் தன்மையடை வதற்கும் ஏற்ற வழிவகைகள் குவிந்து கிடக்கின்றன. உலகக் கேடுகள் ஒழிவதற்கும் வழிவகை குறளில் இருக்கின்றன. ஆரிய மத நூல்களில், அவர்களது கடவுள் தன்மை எனக் கூறப்படும் புராண இதிகாசங் களில் இவைகளுக்கு மாறுபாடான கருத்துகளே மலிந்து கிடக்கின்றன. ஆதலால்தான் குறளைப் படி யுங்கள். ஆரிய நீதி நூல்களை - கோட்பாடுகளை அறவே விலக்குங்கள் என்று வற்புறுத்திக் கூறிவருகிறோம்.

**எனது பணிவான வேண்டுகோள்!**

அவ்வாறு வற்புறுத்திவரும் நான், இன்றையப் பேரறிஞர்களைக் கேட்டு கொள்வதென்னவெனில், இடைக்காலத்தில் வாழ்ந்த சில புலவர்களால், குறளில் கற்பிக்கப்பட்டுள்ள கற்பனைகளை – மாறுபாடுகளை நீக்க, நீங்கள் முன்வர வேண்டும் என்பதுதான். அந்த மாசுகளை நீக்கிவிட்டால், குற்ற உரை நீங்கிய குறளை, நம் மக்கள் அனைவரும் துணையாகக் கொண்டு, அவ்வழியே நடப்பார்களேயானால், குறைந்தது அய்ந்தே அய்ந்து ஆண்டுகளில் ஆரிய நீதி நூல்கள் எனப்படுபவைகளால் இந்த நாள் மக்கள் சமுதா யத்தில் ஏற்பட்டுள்ள பெரும் சீர்கேடுகள், ஒழுக்கக் குறைவு கள், காட்டுமிராண்டித் தன்மைகள் எல்லாம் அறவே ஒழிந்து போகும் என்கிற நம்பிக்கை எனக்கு உறுதியாக உண்டு. அந்த நம்பிக்கையை அடிப்படை யாகக் கொண்டேதான் திராவிடர் கழகமும் தொண்டாற்றி வருகிறது. திராவிடர் கழகக் கொள்கைக்குப் பெரிதும் ஆதாரம், வள்ளுவரின் குறளிலேயேயிருப்பதனால் தான் நாங்கள் அதை நாடெங்கும் எடுத்துக்கூற முற் பட்டிருக்கிறோம். அதற்கான உதவிகளைச் செய்ய புலவர் பெருமக்கள் முன்வர வேண்டும். 7.5.44 குடி அரசு இதழில் பெரியார் திருக்குறளைப் பற்றிய தம் மதிப் பீட்டை தெளிவாக விளக்கியுள்ளார்.

பெரியார் பற்றாளரும் மாவட்ட நீதிமன்ற நடுவராக இருந்து ஓய்வுபெற்றவருமான ஆ. கசபதி நாயகர் அவர்கள் 1946இல் கடலூரில் திருக்குறள் ஆர்வலர் களின் துணைக் கொண்டு பங்குத்தொகை தண்டல் செய்து திருக்குறள் அச்சகத்தைத் தொடங்கினார். திருக்குறளார் வீ. முனுசாமி அவர்களைக் கடலூருக்கு வரவழைத்து அதில் பொறுப்பாள ராக நியமித்தார். 1953-இல் உழைப்பாளர் கட்சியினரால் சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் பேசும் போதெல்லாம் திருக்குறளை உதாரணமாகக் காட்டுவார்; திருவள்ளுவர் பிறந்த நாளுக்கு அரசு விடுமுறையளிக்க வேண்டினார்.

கசபதியார் ஒவ்வொரு ஆண்டும் திருக்குறள் மாநாடு களைத் தொடர்ந்து நடத்தி வந்தார். 14.3.1948-இல் சென்னையில் மயிலாப்பூரில் இலட்சுமிரதன் பாரதி தலை மையில் நடைபெற்ற 3-ஆவது திருக்குறள் மாநாட்டில் பெரியார் கலந்துகொண்டு உரையாற்றினார். மனுதர்மத்துக்கு மாற்றாக, ஆரியக் கொள்கைகளை மறுக்க, அவைகளை மடியச் செய்ய, அக்கொள்கைகளி லிருந்து மக்களைத் திருப்ப எழுதப்பட்ட நூல் திருக்குறள் என்று பெரியார் பேசினார்.

மேலும் பெரியார் கூறுகையில்,

என்னைப் பொறுத்தவரையில் திருக்குறளைச் சிறிதாவது ஆராய்ச்சி செய்தவன் என்று என்னால் கூறிக்கொள்ள முடியாவிட்டாலும், அதன் பெருமையை நான் ஓர் அளவுக் காவது உணர்ந்திருக்கிறேனென் பதையும், அதன்மீது எனக்கு அளவற்ற பற்றுண்டு என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படு கிறேன்.

திருக்குறளின் பெருமையைச் சுமார் 45 ஆண்டு களுக்கு முன்பே எனக்கு எடுத்துக்காட்டியவர் காலஞ் சென்ற தோழர் என்ஜினியர் பா.வே. மாணிக்க நாயக்கர் ஆவார். அவரும் நானும் அடிக்கடி வேடிக்கையாகவும் விதண்டாவாதமாகவும் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். அந்தச் சமயங்களிலெல்லாம் அவர் திருக்குறள் கருத்து களைத்தான் மேற்கோளாக எடுத்துக்கூறி என்னை மடக்குவார். அவருடைய விளக்க உரைகளால் திருக்குறளில் அடங்கியிருக்கும் பல அற்புத அதிசயக் கருத்துகளை என்னால் அன்று அறிய முடிந்தது.

**(விடுதலை 31.12.1948)**

**- தொடரும்**

## காந்தியின் வருணாசிரமக் கொள்கையை எதிர்க்கும் பெரியார்

தோழர் காந்தியார், பார்ப்பனரல்லாதாரைப் பார்த்து நீங்கள் பாடுபட்டு மற்ற மக்களுக்கு உழைத்துப் போட வேண்டுமேயொழிய, உங்கள் பெட்டிகளில் சிறிய வெள்ளி நாணயம் கூட இருக்கக்கூடாது என்று சொல்லி வருவதும், பழைய வருணாசிரம முறையை அமைக்கவே சுயராஜ்யம் கேட்கிறோம் என்று சொல்லுவதும், வருண முறைப்படி அவனவன் தகப்பன் செய்த தொழிலைத்தான் அவனவன் மகன் செய்ய வேண்டும் என்று சொல்லுவதும்; அதற்காகவே தான் வார்தா திட்டம் வகுத்திருக்கிறேன் என்று கூறுவதும் - அதை அனுசரித்தே இன்று மதுவிலக்கு என்கின்ற சாக்கை வைத்துக் கிராமப் பள்ளிக்கூடங்களை மூடிவிட்டு, ஊர்ச் சாவடியில், கிணற்று மேட்டில், நத்தத்தில் - அட்டையில் வாசகம் எழுதிக் கட்டச்செய்து, அதைத் தெருவில் வருகிறவர் போகிறவர்களைக் கொண்டு கேட்டுத் தெரிந்து கொள்வதன் மூலம் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்று சொல்லுவதும் ஆகும். **(குடிஅரசு, தலையங்கம், 7.8.1938)**


## வேண்டுகோள்

**சிந்தனையாளன் இதழுக்காக அனுப்பப்படும் கட்டுரை, செய்தி, கவிதை, படங்கள் ஆகியவற்றை கீழ்க்காணும் மின்னஞ்சலுக்கு மட்டும் அனுப்பவும்.**

**sinthanaiyalantamilmonthly@gmail.com**

# இராவண காவியம் படைத்த புலவர் குழந்தை

**- தொ. எழில்நிலவன், களமருதூர்**

“தென் திசையைப் பார்க்கின்றேன்;
என் சொல்வேன் – என்றன்
சிந்தையெல்லாம், தோள்களெல்லாம்
பூரிக்குது அடடா!”

புதைக்கப்பட்ட இராவணத் தமிழ் மாவீரத்தை, தமிழர்கள் இனம் கண்டு கொண்டால், தமிழர் ஏற்றம் பெறுவர் என்ற எண்ணத்திலேதான், தன்னுடைய சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் பூரிப்பதாகச் சொற்களிலே முறுக்கேற்றி முழக்கமிட்டார் புரட்சிக்கவிஞர்.

மாற்றானின் மனைவியை விரும்பியவன் எனப் பொய்க்கவிதை புனைந்து இராவணனுடைய உற்றார் உறவினர்களையே அவனுக்கு எதிராகப் போராடுபவர்களாக முன் நிறுத்தியது ஆரியப் பார்ப்பனியம்.

ஆரிய மாயைக்கு ஆட்பட்டு, நாட்டைக் கெடுக்கும் ஊற்றைச் சடலங்களுக்கு ஊக்கமளித்துவரும் தீய சக்தியாய், கோடாரிக் காம்பாய்த் தமிழினத்தை ஆரியத்துக்கு, ஆரியர்க்கு அடிமையாக்கத் தமது தமிழ் கவித் திறனைக் கருவியாகக் கொண்டார் கம்பர்.

தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தொடங்கப்படுவதற்கு முன்பே கம்ப இராமாயணம் குறித்துக் கருத்துப் போர் தொடங்கியது. 1908-ல் வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இக்கருத்துப் போர் பா.வே. மாணிக்க நாயக்கர், ஜே.எம். நல்லசாமி பிள்ளை, மறைமலை அடிகள், எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை அவர்களின் ஆய்வுகளால் தொடர்ந்து விரிவாக்கப்பட்டது.

சுயமரியாதை இயக்கத் தொடக்கக் காலத்தில் தந்தை பெரியார் அவர்கள் தம்பேச்சு, எழுத்து மூலமாக நடத்திய கருத்துப் போர், மக்கள் மனதில் நல்ல தெளிவை உண்டாக்கியது.

1944-ல் கம்பராமாயணம் குறித்து அறிஞர் அண்ணாவுக்கும், நாவலர் சோமசுந்தர பாரதியார், இரா.பி. சேதுப்பிள்ளை ஆகியோருக்கும் நடந்த சொற்போரும், அதனைத் தொடர்ந்து அப்பேச்சுகளின் தொகுப்பாக வெளிவந்த “தீ பரவட்டும்” எனும் நூலும் தமிழ் மக்களிடையே பரப்பரப்பை ஏற்படுத்தியது.

1946-ல் “செந்தமிழ்க் குழந்தை செப்பினான் அறிவுல கொப்பு மாறே” என்று புரட்சிக் கவிஞர் வழங்கிய சிறப்புப் பாயிரத்தோடு, இராவண காவியம் வெளிவந்தது.

கம்பனின் இராமாயணத்தை இராவண காவியமாக மாற்றியமைத்ததின் மூலம் செந்மிழ்ப் பெருமக்களின் சிந்தனைத் தீயை நெய்யூற்றி வளர்த்திட்டார் புலவர் குழந்தை அவர்கள்.

**தமிழகத்தில், கம்பருக்குப்பின் எட்டு நூற்றாண்டுகளுக்குப் பின், வெளிவந்த இராவண காவியம் தேனாற்று வெள்ளம் - கற்கண்டுக் கட்டி.**

ஐந்து காண்டங்கள் - 57 பாடல்கள், 3100 பாடல்கள் உள்ளடக்கம் கொண்ட இராவண காவியம் ‘தமிழ்’ ‘தமிழ்’ என்றே முழங்குகின்றது.

இக்காவியம் இயற்றத் துணிவைத் தந்தது யார்?

கம்பர் திருநாளும், பெருநாளும் கம்பர் மாநாடும், கம்பராமாயணக் கருத்தரங்கும், பாராட்டரங்கும், பட்டி மன்றமும், விரிவுரையும், விளக்கவுரையும் நடத்தப் பெறும் அத்தகு சூழ்நிலையில், ‘இராவண காவியம்’ என்னும் பெயரில் ஒரு பெருங்காவியம் செய்யும் அத்தகு உணர்ச்சியினையும் உள்ளத் துணிவினையும் உண்டாக்கியவர் தன்மான இயக்கத் தந்தை பெரியார் அவர்களே!

1948-ல் காங்கிரசு ஆட்சியில் இப்பெருங்காவியத்திற்கு அளித்த பரிசு என்ன?

**ஆம்! இராவண காவியம் எனும் இயல் நூலுக்கு விதிக்கப்பட்ட தடை தான்! கலைஞர் முதல்வராக இருந்த போது 17.5.1971-ல் இத் தடை நீக்கப்பட்டது.**

புலவர் குழந்தை அவர்களின் சொந்த ஊர் கொங்கு நாட்டுக் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஓலவலசு என்னும் சிற்றூராகும். ஓலவலசுப் பண்ணையக்காரர் எனும் பழங்குடியில் முத்துசாமிக் கவுண்டருக்கும், சின்னம்மையாருக்கும் 1.7.1906 அன்று பிறந்தார். இவர் பள்ளியில் படித்தது எட்டு மாதங்களே! பத்து வயது சிறுவனாக இருக்கும் போதே ஒரு பாட்டைப் பிறர் பாடக் கேட்டால் உடனே இவர் அப்பாட்டின் ஓசையில் புதுப்பாட்டினைப் பாடிடும் திறனை இயற்கையாகப் பெற்றிருந்தார்.

இவர் ஊரின் சுற்றுப்புறங்களில் தமிழ்ப் புலவர் எவருமில்லாத நிலையில், தாமாகவே முயன்று, கற்று தமிழில் புலமை பெற்றார். தாமாகவே படித்து 1934-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்றார்.

1926-ல் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து பெரியாரின் அணுக்கத் தொண்டரானார். பெரியார் சீடர், கருப்புச் சட்டைக்காரர் என்று கூறுமளவுக்கு கட்சிப் பற்றுள்ளவராக இருந்தார். 1930-ல் ஞான சூரியன் ஆசிரியரான சாமி சிவானந்த சரசுவதி என்பவருடன் கடவுள் இல்லை என நான்கு நாள்கள் சொற்போர் நடத்தி, வெற்றி வாகை சூடினார்.

1938-1948 ஆண்டுகளில் நடந்த இந்த எதிர்ப்புப் போர்களில் பெரும் பங்காற்றினார்.

1965-ல் கோவையில் காங்கிரசு மாநாடு நடந்தது. இந்தியால் தமிழர்க்கு ஏற்படும் கேடுகளை விளக்கி, 'இந்தி ஆட்சி மொழி ஆனால்' எனும் நூலை இயற்றி கோவை மாநாட்டில் வழங்கினார்.

1946 முதல் 1950 வரை "வேளாண்" எனும் மாத இதழை நடத்தினார். விதவை மணம், கலப்பு மணம், சீர்திருத்த மணம் செய்யுமளவுக்கு கொங்கு வேளாள இனத்தாரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்.

பெரியார் அவர்கள் 1949-ல் புலவர்கள் மத்தியிலிருந்த திருக்குறளை, மக்களிடையே பரப்பிட வேண்டி, பிராட்வே திரையரங்கு அருகில் திருக்குறள் மாநாட்டினை நடத்தினார். பகுத்தறிவுக்கேற்ப, தமிழ்மொழி பிறழாமல் - திருக்குறளுக்கு உரை எழுத பெரியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட குழுவில் நாவலர் சோமசுந்தர பாரதியார் முதலிய அவ்வருள் புலவர் குழந்தையும் ஒருவர்.

புலவர் குழந்தை அவர்கள் தனித்து "திருக்குறள் குழந்தையுரை" என்னும் உரையை - இருபத்தைந்து நாள்களில் எழுதி முடித்து, பெரியார் இட்ட பணியை நிறைவு செய்தார்.

பவானி நாட்டாண்மைக்கழக உயர்நிலைப் பள்ளியில் முப்பத்தெட்டு ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார். புலவர் குழந்தையின் வாழ்க்கைத் துணைவியார் முத்தம்மையார் ஆவார். இவர்கட்கு சமத்துவம், சமரசம் என்னும் இரு பெண்மக்கள் பிறந்தனர்.

பெரியார் நூலக வாசக வட்டத்தினர் - சிலம்பொலி சொல்லப்பனாரைக் கொண்டு "இராவண காவியத் தொடர் சொற்பொழிவை" நடத்தினர். தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்பனவற்றை முன்னோடியாகக் கொண்டு தமிழ்ப் பெருங்காவியமாம் "இராவண காவியத்"தை அளித்த புலவர் குழந்தை 22.9.1972-ல் மறைந்தார்.

**வளர்க அவர் தொண்டு! வாழ்க அவர் புகழ்!**

## மு.இளங்கோவன் - செ.கனிமொழி
## இல்லற வாழ்க்கை ஏற்பு விழா



*விழுப்புரம், வ.பரந்தாமன் - பூங்கோதை இணையரால் பெரும் பேற்றுக்குரியராய் வளர்க்கப்பட்டவரும், பிடாகம் முருகேசன் - செந்தில் அம்மாள் இணையரின் இனிய மகனுமாகிய பொறிஞர் மு. இளங்கோவன் அவர்களுக்கும், சிதம்பரம் அண்ணாமலை நகர் சு.செங்குட்டுவன் - அமுதவல்லி இணையரின் இனிய மகள் பொறிஞர் செ . கனிமொழி அவர்களுக்கும் இல்லற வாழ்க்கை ஏற்பு விழா, விழுப்புரம் மீனாட்சி ஆறுமுகம் திருமண மண்டபத்தில் 01.09.2019 ஞாயிறு காலை 9.00 மணியளவில் நடைபெற்றது. சிறுமியர் ஓவியா பூங்குன்றன், அ.இ. வளர்மொழி, த.அ.எழில் ஆகியோரின் மொழி வாழ்த்துடன், மருத்துவர் ப.பூங்குன்றன் வரவேற்புரை வழங்க, திருக்குறள் ஓத சான்றோர்கள் பேராசிரியர் த. பழமலை, நல்லாசிரியர் செ.வே. சஞ்சீவிராயன், மருத்துவர் சி.மா.பாலதண்டாயுதம், மணமகனின் தாத்தா ந. அரியபுத்திரி மா.பெ.பொ கட்சியின் விழுப்புரம் மாவட்டச் செயலர் ஆ.கு. ஆறுமுகம் வாழ்த்துரைக்க, பெரியாரியல் பேரறிஞர் தோழர் திருச்சி வே. ஆனைமுத்து அவர்களால் நடத்திவைக்கப் பெறவேண்டிய திருமண விழா அவரின் உடல் நிலை சரியின்மையால் பங்கேற்க வியலா சூழலில், புதுச்சேரி, தனித்தமிழ்க் கழகச் செயலர் சீனு.அரிமாப்பாண்டியன் விழாவைச் சிறப்புற நடத்திவைக்க, பொறிஞர் ப.அறவாழி நன்றிகூற திருமண விழா இனிது நிறைவுற்றது. மணவிழா மகிழ்வாகச் 'சிந்தனையாளன்' வளர்ச்சிக்கு உருவா 1000 வ.பரந்தாமன் அவர்களால் வழங்கப் பட்டது.*

# காசுமீரத்தின் உண்மைக் கதை

- தியாகு

*சென்ற இதழ்த் தொடர்ச்சி...*

**இணைப்புக்கு பின்**

இந்தியாவுடன் காசுமீரத்தை இணைக்கும் ஒப்பந்தத்தில் மன்னர் அரிசிங் ஒப்பமிட்டவுடனேயே, இந்த இணைப்பு இறுதியானதல்ல என்றும், பொது வக்கெடுப்பு நடத்தி காசுமீர் மக்களின் விருப்பமறிந்தே இறுதி முடிவெடுக்கப்படும் என்றும் இந்திய அரசு அம்மக்களுக்கு உறுதியளித்தது மட்டுமல்ல, 1948 ஜனவரி முதல் நாள் காசுமீரம் தொடர்பான இந்தியா-பாகிஸ்தான் பூசலை ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு இந்தியாவே எடுத்துச் சென்றது. ''காசுமீரம் இந்தியாவின் உள்நாட்டுச் சிக்கல் என்றும் இதில் மற்ற நாடுகள் தலையிட முடியாது என்றும் இப்போதெல்லாம் இந்திய அரசு அடிக்கடி அறிவிக்கக் காண்கிறோம். ஆனால் இந்தச் சிக்கலை முதன்முதலாக இந்தியாதான் ஐநாவுக்கு எடுத்துச் சென்று பன்னாட்டுலகில் அரங்கேற்றியது. ஐநாவில் நேருவின் சார்பாக இந்தியத் தூதுக் குழுவின் தலைவராகச் சென்று காசுமீர் சிக்கலை விளக்கியவர் திவான் பகதூர் கோபால்சாமி ஐயங்கார். அதே கோபால்சாமி ஐயங்கார்தான் அண்ணல் அம்பேத்கர் தலைமையிலான இந்திய அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவில் உறுப்பினராக இருந்தவர். இப்போது சர்ச்சைக்குரிய தாகியுள்ள 370ஆம் உறுப்பை எழுதியவரும் அவரே. இன்னொரு கருத்துக்குரிய தகவல்: இதே கோபல்சாமி ஐயங்கார் 1937-43 காலத்தில் மன்னர் அரிசிங்கின் தலை மையமைச்சராகப் பணியாற்றியவர்.

ஐநாவில் காசுமீர் சிக்கலை இந்தியாவின் சார்பில் தொடர்ந்து கையாண்டவர் திருவாட்டி விஜயலட்சுமி பண்டிட். ஜவகர்லால் நேருவின் மூத்த உடன் பிறப்பாகிய இவர்தான் 1946 முதல் 1968 வரை ஐநாவில் இந்தியத் தூதுக் குழுவின் தலைவராக இருந்தார்.

ஐநா பாதுகாப்பு மன்றம் காசுமீர் தொடர்பாக 1948 ஜனவரி 20ஆம் நாள் இயற்றிய தீர்மானம் (எண் 39) உடனடி யாகப் போர்நிறுத்தம் செய்யவும், துருப்புகளை விலக்கிக் கொள்ளவும், காசுமீரத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் பொதுவாக்கெடுப்பு நடத்தவும் கட்டளையிட்டது. பொதுவாக் கெடுப்பு நடத்த மூன்று உறுப்பினர் ஆணையம் ஒன்றையும் அறிவித்தது. இந்த ஆனையத்தில் இந்தியாவைச் சேர்ந்த ஒருவரும் பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவரும் இந்த இருவரும் சேர்ந்து தேர்ந்தெடுக்கும் மூன்றாமவரும் இடம்பெற வேண்டும்.

ஐநா தீர்மானப்படி போர்நிறுத்தம் மட்டும் ஏற்பட்டது. கட்டுப்பாட்டுக் கோடு என்னும் போர்நிறுத்தக் கோடு காசுமீரத் தேசத்தை இரண்டாகப் பிரித்து விட்டது. இந்தக் கோட்டினை இந்தியா-பாகிஸ்தான் எல்லை என்று அழைப்பது தவறு. ஐநா தீர்மானப்படி படை விலக்கம் நடைபெறவில்லை. இரு நாடு களும் காசுமீரத்திலிருந்து தங்கள் படைகளை விலக்கிக் கொள்ள வில்லை. பொதுவாக்கெடுப்பும் இதுவரை நடைபெறவில்லை.

ஆனால் இதற்கிடையில் வாக்கெடுப்பு இல்லாமலே ஜம்மு-காசுமீரத்தை இந்தியாவுடன் நிரந்தரமாக இணைத்துக் கொள்ளும் முயற்சிகளில் இந்திய அரசு ஈடுபட்டது. இந்த நோக்கத்துடனேயே இந்திய அரசமைப்புப் பேரவையில் ஜம்மு-காஷ்மீர் பேராளர்கள் (பிரதிநிதிகள்) சேர்க்கப்பட்டனர். ஜம்மு-காசுமீரத்துக்கென்று உறுப்பு 370 சேர்க்கப்பட்டது.

ஆனால் இந்தியக் குடியரசில் நீடிப்பதா இல்லையா என்பதைத் தீர்வு செய்யும் வாய்ப்பு காசுமீர் மக்களுக்கு வழங்கப்படும் என்று இந்திய அரசு தொடர்ந்து உறுதியளித்துக் கொண்டிருந்தது. பொதுவாக்கெடுப்பு நடக்காமல் தவிர்ப்பதே இந்திய அரசின் நோக்கமாய் இருந்தது. ஆனால் ஷேக் அப்துல்லா வாக்கெடுப்பு நடத்துமாறு கேட்கவில்லை. ஏனென் றால் இந்தியாவுடனோ பாகிஸ்தானுடனோ சேர்வதற்குத்தான் வாக்கெடுப்பு வாய்ப்பளிக்குமே தவிர, சுதந்திர காசுமீரம் என்ற வாய்ப்பே அதில் இடம்பெறவில்லை.

காசுமீரம் இந்தியாவுக்கா? பாகிஸ்தானுக்கா? என்ற விவாதம் நடந்து கொண்டிருந்த போதே 1949 ஏப்ரல் 14ஆம் நாள் வெளிவந்த ஒரு பேட்டியில் ஷேக் சொன்னார்:

காசுமீரத்தின் சுதந்திரத்தை இந்தியாவும் பாகிஸ்தானும் மட்டுமின்றி, வல்லரசுகளும் ஏற்று உறுதியளிக்க வேண்டும் என்பதே என் முன்மொழிவு.''''ஷேக் அப்துல்லாவைப் பொறுத்த வரை பாகிஸ்தானுடன் இணைப்பு என்ற எண்ணத்துக்கே இடமில்லை. சுதந்திர காசுமீரம் இல்லையென்றால் இந்தியா விலேயே தன்னாட்சியுரிமையுடன் இருந்து விட்டுப் போவோம் எனக் கருதினார்.

ஜவகர்லால் நேரு ஷேக் அப்துல்லாவிடமே சொன்னார்: ஐநா ஆணையத்தின் வாக்கெடுப்பு முன்மொழிவுகளை நான் ஏற்றுக் கொண்டிருந்தாலும் அது ஒன்றும் நெருக்கத்தில் நடைபெறப் போவதில்லை என்பதை அறிவீர்கள். அது ஒரு போதும் நடைபெறாமலே போகிற வாய்ப்பும் உண்டு இதை நாம் வெளிப்படையாகச் சொல்லக் கூடாதுதான்.

ஜம்மு-காசுமீர் அரசமைப்புப் பேரவை 1951 அக்டோபர் 31ஆம் நாள் கூடியது. நவம்பர் 15ஆம் நாள் அது ஜம்மு-காசு மீரத்துக்கான அரசமைப்பை எழுதி முடித்தது. ஜம்மு-காசுமீரத்துக்கான தனி அரசமைப்பு, இந்திய அரசமைப்பின் உறுப்பு 370 எல்லாமே காசுமீர மக்களைப் பையப் பைய ஆற்றுப்படுத்தி, காசுமீரத்தின் பிரிக்கவொண்ணாப் பகுதியாக் கும் திட்டத்தின் பாற்பட்டவையே. ஆனால் இந்த மென்மையான அணுகுமுறை இந்துதுவ ஆற்றல்களுக்குப் பிடிக்க வில்லை.

இந்தியாவில் பாரதிய ஜனசங்கம் என்ற புதிய அரசியல் கட்சி 1951 அக்டோபர் 21ஆம் நாள் பிறந்தது. இதன் முதல்

தலைவர் சியாம் பிரசாத் முகர்ஜி. இவர் இந்து மகாசபையின் முன்னாள் தலைவர். வி.டி. சாவர்க்கரின் கூட்டாளி. ஜவகர் லால் நேரு அமைச்சரவையில் அமைச்சராக இருந்து, 1950இல் பதவி விலகியவர். பாரதிய ஜனசங்கத்தின் முதல் மாநாடு 1952 திசம்பர் 31ஆம் நாள் கான்பூரில் கூடி, ஜம்மு-காசுமீரத்தை இந்தியாவுடன் இரண்டற இணைக்கக் கோரிக் கிளர்ச்சி தொடங்கத் தீர்மானித்தது.

காசுமீரப் பண்டிதராகிய நேரு மற்றவர்களைக் காட்டிலும் காசுமீரத்தை நன்கறிந்தவர். காசுமீர மக்களின் விருப்பங் களை மதிப்பது போல் காட்டிக் கொள்ள வேண்டிய தேவை அவருக்கிருந்தது. 1952 புத்தாண்டு நாளில் கொல்கத்தாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நேரு பேசினார்:

காசுமீரத்து மக்களை நம் பால் ஈர்த்துள்ளோம் என்பது நம் மதச் சார்பின்மைக் கொள்கைகளும் நம் அரசமைப்பும் சரியானவை என்பதற்கு ஆகப் பெரும் சான்றாகும். ஜன சங்கமோ வேறு ஏதேனும் வகுப்புவாதக் கட்சியோ ஆட்சியில் இருந்திருந்தால் காசுமீரத்தில் என்ன நடந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். காசுமீர மக்கள் இந்த வகுப்பு வாதம் தங்களைச் சலிப்புறச் செய்வதாகச் சொல்கிறார்கள். ஜனசங்கமும் ஆர்எஸ்எஸ்-உம் எங்களைச் சுற்றி வளைத்துத் தாக்கும் நாட்டில் நாங்கள் ஏன் வாழ வேண்டும்? என்று கேட்கிறார்கள். அவர்கள் வேறிடம் சென்று விடுவார்கள். நம்மோடு இருக்க மாட்டார்கள்.

காசுமீரத்து மக்கள் இந்தியாவுடன் இருக்க விரும்ப வில்லை என்றால் என்ன செய்வது? நேரு சொன்னார்:

‘‘காசுமீர மக்கள் நம்மை வெளியேறச் சொன்னால் வெளியேறி விடுவோம்.

வெளியில் இப்படிப் பேசிக்கொண்டே வெளியேறச் சொல்லும் வாய்ப்பையே இல்லாமலடிக்க எல்லா வழிகளிலும் காய்நகர்த்திக் கொண்டிருந்தார் பண்டித நேரு. கொல்கத்தா உரையில் ஷேக் அப்துல்லா பற்றியும் பேசினார்:

இப்போது ஜனசங்கம், ஆர்எஸ்எஸ் போன்ற வகுப்பு வாதக் கட்சிகளும் ஜம்முவில் பிரஜா பரிசத் கட்சியும் ஷேக் அப்துல்லாவின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தொடங்கியுள்ளன. இவர்கள் அவரைத் திட்டுகிறார்கள். பழைய மகாராஜாவே திரும்பி வர வேண்டும் என்கிறார்கள். இதன் பொருள் என்னவென்று எண்ணிப் பாருங்கள். இத்தருணத்தில் பாகிஸ்தானை அறவே எதிர்ப்பவர் ஷேக் அப்துல்லாதான். அவரே காசுமீர மக்களின் மாபெரும் தலைவர். நாளையே ஷேக் அப்துல்லா காசுமீரம் பாகித்தானில் இணைய வேண்டும் என விரும்பினால் அதைத் தடுத்து நிறுத்த என்னாலும் முடியாது. இந்தியாவின் ஆற்றல்கள் அனைத்தும் சேர்ந்தாலும் முடியாது.

காசுமீரத்தை எப்படி விழுங்கலாம் என்று இந்திய அரசு யோசித்துக் கொண்டிருந்த போதே காசுமீரத்தின் குரலை ஷேக் அப்துல்லா ஒலித்துக் கொண்டிருந்தார். 1952 ஏப்ரல் 10ஆம் நாள் ரன்பீர்சிங்புரத்தில் அவர் ஆற்றிய உரை வரலாற்றுப் புகழ்மிக்கது:

காசுமீரத்தைப் பொறுத்த வரை சமயச் சார்பற்ற ஜனநாயகம் என்ற குறிக்கோளை இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் கற்றுத்தர விரும்புகிறது.

காசுமீரம் குறித்து நேருவின் நிலைப்பாடு பையப்பைய ஐயத்துக்குரியதாயிற்று. 1952 ஆகஸ்டு 25 நாளிட்ட நேருவின் கொள்கைக் குறிப்பு அவரின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியது:

1948 இறுதிவாக்கில் எனக்கு ஒன்று தெளிவாகத் தெரிந்து விட்டது. பொதுவாக்கெடுப்பு நடத்துவதற்குத் தேவையான நிலைமைகள் ஒருநாளும் ஏற்படப் போவதில்லை. ஆகவே வாக்கெடுப்பு நடத்துவதில்லை என்று செயலளவில் முடி வெடுத்து விட்டேன்.

நேரு குறிப்பிடும் அதே 1948 இறுதியில் ஐநா ஆணையம் அளித்த வாக்கெடுப்பு முன்மொழிவுகளை நேரு ஏற்றது ஏன்? என்பதற்கு என்ன விளக்கம் தர முடியும்? அரசதந்திரம் என்றா?

1952 ஜூலை 24ஆம் நாள் ஜவகர்லால் நேருவும் ஷேக் அப்துல்லாவும் தில்லி உடன்பாட்டில் ஒப்பமிட்டனர். மைய அரசு நிறுவனங்களை ஜம்மு-காசுமீருக்கு விரிவாக்குவது பற்றிய உடன்பாடு இது. இதன் வழி காசுமீர இணைப்பை இறுதியாக்க நேரு நினைத்தார். ஷேக் அப்துல்லாவோ இதை ஓர் இடைக்கால ஏற்பாடாகக் கருதினார்.

உடன்பாட்டுக்கான பேச்சுவார்த்தையின் போது இரு தலைவர்களுக்குமிடையே இடம்பெற்ற உரையாடலை ஷேக் தம் நினைவுக்குறிப்புகளில் பதிவு செய்துள்ளார்:

நேரு: ஷேக் சாகப்! எங்களுடன் நீங்கள் தோளோடு தோள் நிற்கவில்லை என்றால், உங்கள் கழுத்தில் தங்கச் சங்கிலி மாட்டி விடுவோம்.

ஷேக் சிரித்துக் கொண்டே விடையளித்தார்: ஆனால் ஒருபோதும் அப்படிச் செய்து விடாதீர்கள். மீறிச் செய்தால் காசுமீரத்தைக் கைகழுவி விட வேண்டியதுதான்.

நேரு விளையாட்டாகச் சொல்லவில்லை என்பது அடுத்த ஆண்டே தெரிந்து விட்டது. 1953 ஆகஸ்டு 9ஆம் நாள் காசுமீர் அரிமா கூண்டிலடைக்கப்பட்டது. காசுமீர மக்களை இந்தியாவிடமிருந்து ஒரேயடியாக அயன்மைப்படுத்தி விட்ட நிகழ்ச்சி இஃதென்பது வரலாற்றாசியர் தம் கணிப்பு. அன்று தொடங்கி இன்று வரை இந்திய அரசின் அடுத்தடுத்த முடிவுகள் காசுமீர மக்களின் அயன்மைப்பாட்டை வளர்க்கவே உதவி யுள்ளன.

**தீர்வு நோக்கி**

காசுமீர் மக்கள் மறக்கவோ மன்னிக்கவோ முடியாத ஒரு நாள் 1953 ஆகஸ்டு 9. அன்றுதான் அவர்களின் தனிப் பெருந் தலைவர் ஷேக் அப்துல்லா தலைமையமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். அந்நாள் குல்மார்க்கில் கைது செய்யப்பட்டவர் 1958ஆம் ஆண்டு ஒரு சிறு இடைவெளி தவிர 11 ஆண்டு காலம் சிறையில் இருந்தார். தமிழ்நாட்டில் கொடைக் கானலில் சிறைவைக்கப்பட்டிருந்தார். இந்தியக் குடியரசின் வரலாற்றில் வழக்கு விசாரணையே இல்லாமல்

இவ்வளவு நீண்ட காலம் ஓர் ஆயுள் சிறைக் கைதியைப் போல சிறைவைக்கப்பட்ட அரசியல் தலைவர் வேறு யாருமில்லை. அவர் செய்த குற்றம் என்ன?

ஜம்மு-காஷ்மீரின் அப்போதைய ஆளுநர் கரன்சிங் ஷேக் அப்துல்லாவைப் பதவிநீக்கம் செய்வதற்குச் சொன்ன காரணம் அமைச்சரவையில் பிணக்குள்ளது என்பதே. கைது செய்து சிறையில் அடைப்பதற்குச் சொன்ன காரணம் ஜம்மு-காஷ்மீரைப் பாகிஸ்தானில் இணைக்கத் திட்டமிட்டார் என்பதே. அவர் துணைத் தலைமையமைச்சர் பக்சி குலாம் முகமது, அமைச்சர் டி.பி. தார் ஆகியோரைக் கைது செய்யவும், காசுமீரத்தை சுதந்திர நாடாக அறிவிக்கவும் திட்டமிட்டார் என்றொரு செய்தியும் பரப்பப் பட்டது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகள் எதுவும் ஒருநாளும் மெய்ப்பிக்கப்பட்டதில்லை.

ஷேக் அப்துல்லாவைப் பதவிநீக்கம் செய்து சிறையில டைத்து விட்டு அவரிடத்தில் பக்சி குலாம் முகமதுவைத் தலைமையமைச்சராக்கிய நடவடிக்கை காஷ்மீர் அதிரடி 1953 எனப்படுகிறது. இந்த அதிரடி நடவடிக்கையில் தனக்கு எவ்விதப் பங்கும் இல்லை என்பது போல் பண்டித நேரு காட்டிக் கொண்ட போதிலும் காஷ்மீர் மக்கள் இந்த நாடகத்தை நம்பினார் களில்லை.

உளவுப் பிரிவின் தலைவராக இருந்த பி.என். மல்லிக், தன் நினைவுக் குறிப்புகளில் (நேருவுடன் என் ஆண்டுகள்: காஷ்மீர்) ஷேக் அப்துல்லா மீதான குற்றச்சாட்டுகளை மறுக்கிறார். 1962 இந்திய-சீன எல்லைப் போர் குறித்து சொல்லப்படாத கதை என்ற நூலை எழுதிய லெப்டினண்ட்-ஜெனரல் பி.என். கவுல், நேருவின் சொந்தப் பிரதிநிதியாகக் காஷ்மீருக்கு அனுப்பப்பட்ட அஜித் பிரசாத் ஜெயின் ஆகியோரும் கூட தாம் எழுதிய நூல்களில் தில்லியின் கட்டளைப்படியே யாவும் நடைபெற்றன என்பதை உறுதி செய்கின்றார்கள்.

இந்தக் காசுமீர் அதிரடி-1953 நிகழ்ந்த போது இந்திரா காந்தி சுவிட்சர்லாந்து நாட்டின் சூரிச் நகரில் இருந்தார். ஷேக்கைச் சிறைப்படுத்தியதில் அவருக்கு உடன்பாடில்லை. பிற்காலத்தில் இந்திரா காந்திதான் அவரோடு 1974ஆம் ஆண்டு உடன்பாடு கண்டு அவரை ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சராக்கினார். கைம்மாறாக ஷேக் பொதுவாக்கெடுப்புக் கோரிக்கையைக் கைவிட்டார் என்பது வரலாறு.

காஷ்மீர் பள்ளத்தாக்கு, ஜம்மு, லதாக், பூஞ்ச், கில்ஜித் ஆகிய ஐந்து அலகுகளைக் கொண்ட கூட்டாட்சி அரசமைப்பதும், இதனை இந்தியக் குடியரசின் தன்னாட்சி அலகாக வைத்துக் கொள்வதுமே ஷேக்கின் அப்போதைய விருப்பம். ஆனால் காசுமீரை இந்தியாவுடன் நிரந்தரமாக இணைத்துக் கொள்ள நேரு காட்டிய அவசரம்தான் ஷேக்கைச் சிறைப்படுத்தியதன் மூலம் காசுமீர் மக்களை நிரந்தரமாக அயன்மைப்படுத்தி விட்டது.

தேசிய மாநாட்டுக் கட்சியின் செயற்குழு 1953 மே 18ஆம் நாள் தீர்வுக்கான வழிகளை ஆராய எண்மர் குழுவை அமைத்தது. ஷேக் அப்துல்லா, ஜி.எம். சாதிக், மவுலானா முகமது சயீத் மசூதி, சர்தார் புத் சிங், மிர்சா முகமது அப்சல் பெக், பண்டித கிர்தாரிலால் டோக்ரா, பக்சி குலாம் முகமது, பண்டித சாம்லால் சரஃப் இந்த எண்மரில் இருவர் பண்டிதர்கள், ஒருவர் சீக்கியர்! இந்த எண்மர் குழு முக்கியமாக அனைத்து வாய்ப்புத் தேர்வு களும் உள்ளடக்கிய பொதுவாக்கெடுப்பு என்று முன்மொழிந்தது. அதாவது இந்தியாவுடனோ பாகிஸ்தானுடனோ இணையலாம், அல்லது சுதந்திர நாடாக இருக்கலாம் என்பதற்கான பொது வாக்கெடுப்பு! நேருவுக்கு இது எரிச்சலூட்டியது. அவர் உடனே மவுலானா அபுல்கலாம் ஆசாதை சிறிநகருக்கு அனுப்பி இணைப்பை வலியுறுத்தச் செய்தார்.

காசுமீருக்கு அரசமைப்புச் சட்ட உறுப்பு 370 என்ற வடிவில் சிறப்புத் தகுநிலை வழங்குவது தவிர, பொதுவாக்கெடுப்புக்கோ தன்னாட்சி வழங்குவதற்கோ நேரு முன்வரவில்லை. ஷேக் அப்துல்லாவும் நேரு இழுத்த இழுப்புக்கு வர இயலாது என்று தெளிவாக்கி விட்டார். மக்களின் விருப்பம் கேட்காமலே காசுமீரை இந்தியாவுடன் இறுதியாக இணைப்பதற்கு ஷேக்கைத் தன் கையாளாக மாற்ற முடியாத நிலையில்தான் நேரு அதிரடியாக அவரைப் பதவிநீக்கம் செய்து சிறையில் தள்ளினார்.

இத்தனைக்குப் பிறகும், 1953 ஆகஸ்டு 20ஆம் நாள், அதாவது ஷேக்கை சிறைப்படுத்திய பதினோராம் நாள் பாகிஸ்தான் தலைமையமைச்சர் முகமது அலியுடன் சேர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் நேரு மீண்டும் உறுதியளித்தார்: காசுமீரில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும் என்று!

பலருக்கும் கசக்கக் கூடிய உண்மை என்னவென்றால், பண்டித ஜவகர்லால் நேரு காசுமீர் மக்களை ஏமாற்றினார்! ஷேக் அப்துல்லாவை ஏமாற்றினார்! பாகிஸ்தானை ஏமாற்றினார்! ஐநா அமைப்பையும் ஏமாற்றினார்! சிக்கலைத் தீர்ப்பதில் தோல்வி கண்டு தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டார்!

நேருவுக்கும் இந்துத்துவ ஆற்றல்களுக்கும் நோக்கம் ஒன்றுதான்! காசுமீரை எப்போது எப்படி விழுங்கலாம் என்ற அணுகுமுறையில் மட்டுமே வேறுபாடு! நேருவின் காசுமீர் அதிரடி 1953க்கு ஷேக் அப்துல்லா பிற்காலத்தில் விளக்க மளித்தார்:

1953இல் பண்டித ஜவகர்லால் என்னிடம் இந்திய இணைப்புக்கு காசுமீர அரசமைப்புப் பேரவையின் இசைவைப் பெறுமாறு சொன்ன போது எங்கள் உறவில் இறுதி முறிவு வந்துற்றது. அவரது போக்கில் ஏற்பட்ட இந்த மாற்றம் கண்டு நான் திகைத்தேன். ஏனென்றால் கடந்த காலத்தில் இப்படி எதுவும் செய்ய வேண்டாம் என்று எனக்கு அழுத்தமான அறிவுரை வழங்கியவர் அவரே. இதுதான் நான் காசுமீரத் தலைமையமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும், வழக்கு விசாரணை இல்லாமல் நீண்ட காலம் சிறையிலடைக்கப் படுவதற்கும் இட்டுச் சென்றது. (1970 ஜூன் 8ஆம் நாள் ஜம்மு-காஷ்மீர் மாநில மக்கள் பேரவையின் இரண்டாம் அமர்வில் ஆற்றிய உரை.)

அன்று காஷ்மீர மக்களின் நம்பிக்கையை இழந்த இந்தியாவால் இன்று வரை அதை மீட்க முடியவில்லை. சற்றொப்ப எழுபதாண்டுக் காலமாக ஜவகர்லால் நேரு முதல் நரேந்திர மோதி வரை காசுமீர் சிக்கலுக்குத் தீர்வு காண முடியவில்லை என்பதே உண்மை. பாகிஸ்தான் தரப்பிலும் ஜின்னா இம்ரான் கான் வரை யாராலும் காசுமீர் சிக்கலுக்குத் தீர்வு காண முடியவில்லை. ஏன்? ஏனென்றால் இந்தச் சிக்கலை இரு நாடுகளுக்கிடையிலான எல்லைச் சிக்கலாகப் பார்ப்பதே.

வங்கதேசம் 1971ஆம் ஆண்டு விடுதலை பெற்ற பின் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் முரண்பாட்டுக்கு ஒரே அடிப்படை காசுமீரம்தான். ஆனால் காசுமீர் சிக்கல் என்பது ஒரு தேசிய இனச் சிக்கலே தவிர எல்லைச் சிக்கல் அன்று.

சிக்கலை தேசிய இனச் சிக்கலாக இனங்கண்டு அதன் தீர்வில் காசுமீரத்துக்கு உரிய பங்கினை அறிந்தேற்பதுதான் முதல் நடைபடியாக இருக்க வேண்டும். ஆனால் வங்க தேச விடுதலைக்குப் பின் 1972ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் பாகிஸ்தான் பிரதமர் ஜுல்பிகர் அலி புட்டோவும் சிம்லாவில் சந்தித்துச் செய்து கொண்ட உடன்படிக்கை என்ன தெரியுமா? காசுமீர் சிக்கலை இந்தியாவும் பாகிஸ்தானும் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே. பேசித் தீர்த்துக் கொள்வது நல்லது தான். ஆனால் யாரும் யாரும்? காசுமீரை மூன்றாம் தரப்பாகக் கூட ஏற்றுக் கொள்ளாமல் காசுமீர் சிக்கலைத் தீர்ப்பது எப்படி?

காசுமீர் இந்தியாவின் உள்நாட்டுச் சிக்கல் என்று இப்போதைய ஆட்சியாளர்கள் தரப்பில் உரத்துச் சொல்கின்றனர். அதாவது காசுமீர் சிக்கலில் பாகிஸ்தானையும் கூட ஒரு தரப்பாகக் கருத மறுக்கின்றனர். இது எப்படித் தீர்வுக்கு உதவும்? இது வரை உதவ வில்லை, இனி ஒருபோதும் உதவப் போவதும் இல்லை. இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் பாகிஸ்தான் அதிபர் முசாரஃபும் ஆக்ராவில் சந்தித்துப் பேசியது காஷ்மீர் சிக்கல் தொடர்பாகவே என்பதை மறந்துவிடக் கூடாது.

இரண்டாவதாக காசுமீர் சிக்கலுக்கு ஜனநாயக முறையில் தான் தீர்வு காண முடியும். அதாவது காசுமீர் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். அந்த உரிமை யின் அடிப்படையில் அம்மக்கள் தாமே தம் எதிர்காலத்தைத் தீர்வு செய்து கொள்ளும் வகையில் காசுமீர் முழுவதிலும் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

வாக்கெடுப்புக்கு முன்னதாக, இப்போதே உடனடியாக இராணு வத்தை விலக்கிக் கொள்ள வேண்டும். பாகிஸ்தானும் இந்தியாவும் அந்தந்த அரசுகளின் பிடியிலுள்ள பகுதிகளிலிருந்து படைவிலக்கம் செய்ய வேண்டும். இது போன்ற சூழல்களில் நமீபியா, கிழக்கு திமோர், தெற்கு சூடான், கொசோவோ ஆகிய உலகின் வேறு பல பகுதிகளில் ஐநா வகித்த பங்கினை இங்கேயும் வகிக்க வேண்டும்.

இது காசுமீர் மக்களின் நலத்துக்காகவும் அமைதிக்காகவும் மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டம், தெற்காசியா ஆகிய வற்றின் அமைதிக்காகவும் பாதுகாப்புக்காகவும் அவசர அவசியமாகத் தேவைப்படும் தீர்வாகும். இந்திய-பாகிஸ்தான் போர் என்பது பன்னாட்டுப் படைக்கல வணிகர்களைத் தவிர வேறு யாருக்கும் நன்மை பயக்காது. கணக்கிலடங்காத உயிர்ச் சேதம், பொருட்சேதம் ஏற்படும்.

இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளும் அணு வல்லமை யோடு இருப்பது கருதினால், அவற்றுக்கிடையே போர் என்பது எண்ணியும் பார்க்க முடியாத பேரழிவைத் தோற்றுவித்து விடும் படியான ஆபத்து உள்ளது. ஹிரோசிமா, நாகசாகி போல் பல நூறு மடங்கு அழிவு நேரிடும்.

காசுமீர் தேசத்தின் துயரம் இந்தியாவின், ஆசியக் கண்டத்தின், மாந்தக் குலத்தின் துயரமாகி விடாமல் தடுக்க வேண்டும். இராணுவ வலிமை கொண்டு தீர்வு தேடுவதில்லை என்று எல்லாத் தரப்பினரும் உறுதி கொள்ள வேண்டும்.

காசுமீர் மக்களுக்கு நாம் சொல்ல விரும்புவது: நாங்கள் உங்கள் துயரத்தை உணர்ந்து உங்களோடு தோழமை கொண்டுள்ளோம். காசுமீருக்காக கன்னியாகுமரியும் கண்ணீர் வடிக்கிறது. உங்களுக்குள்ள அற வலிமை மகத்தானது. மக்கள் போராட்டத்துக்கு பயங்கரவாதத்தால் தீங்கு நேரிட இடமளிக் காதீர்கள். உறுதியாக அறவழி நின்று போராடுங்கள். புதிய காசுமீரம் அழகிய ரோஜா போல் பூத்துச் சிரிக்கும் நாள் விரைவில் வரும்!

**(முகநூல் பதிவு)**

## காஞ்சிபுரம் அறிவு வளர்ச்சி மன்றம் சார்பில் தந்தை பெரியார் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

காஞ்சிபுரம் அறிவு வளர்ச்சி மன்றம் சார்பில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா 22.9.2019 ஞாயிறு காலை 10 மணியளவில் காஞ்சிபுரம் வட்டாட்சியர் வளாகம் (மலைக்கொழுந்து இல்லத்தில்) நாத்திகம் நாகராசன் தலைமையில் நடைபெற்றது. அ.வெ. ஸ்ரீதர் வரவேற்புரை யாற்றினார். பெரியாரைப் போற்றுவோம் என்ற தலைப்பில் தோழர்கள் சி. நடராசன், ஆசிரியர் பா. கதிரவன், திருக்குறள் சோதி, காரை கு. அருளானந்தம், ஆ.திருமலை ஆகியோரும் அண்ணாவைப் போற்றுவோம் என்ற தலைப்பில், காஞ்சி அமுதன், சி.என். ஆனந்தன், ஆசிரியர் கேவி. ஜெனார்த் தனன் ஆகியோரும் உரையாற்றினர்.

கலைமாமணி விருது பெற்ற வை. ராகநிதி (கிராமிய இசைப் பாடகர்) அவர்களைப் பாராட்டியும், மொழிப் போர் காவலர் களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் சி.வி.எம்.அ. சேகரன், தமிழ்வளர்ச்சித் துறை மேனாள் இயக்குநர் திரு. கூ.வ. எழிலரசு ஆகியோர் சிறப்பு செய்தனர். நா. அறிவுமணி நன்றியுரையுடன் கூட்டம் மதியம் 2.00 மணிக்கு முடிந்தது.

# திருவள்ளுவர் 2050 ஆண்டுகள் - அடைவுகள்

## நூலைப் பற்றி

- இரா.பச்சமலை




நூலுக்குள் நுழையும் முன் நூலின் பொலிவான கட்டட அமைப்பும், நூலின் சிறப்பான எழுத்து வடிவமும் பக்கங்கள் முழுமைக்கும் செறிவாகவும் கருத்தியல் நிறைவாகவும் அமைக்கப்பட்டுள்ள, திருவள்ளுவர் 2050 - ஆண்டுகள், அடைவுகள் நூலினை நுகரத் தூண்டும் வகையில் உள்ளது என்பதை முதலில் பதிவு செய்திட வேண்டும். ஆயிரம் பக்கங்கள் கொண்ட இவ்வழகிய நூலை மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் பெரியார் உணர்வாளர்களின் கூட்டமைப்பு 12.8.2019 அன்று சென்னை தேனாம்பேட்டை காமராசர் அரங்கத்தில் நடத்திய திருக்குறள் மாநாட்டையொட்டி வெளியிட்ட நூலாசிரியர்களின் சிறப்பான அரும்பெரும் பணிகள் மிகப்பெரும் பாராட்டுக்குரியவை. இன்னும் இந்திய ஒன்றிய, தமிழ்நாடு அரசியல் பொருளியல் இடரான சூழல் நிழவும் இக்காலக்கட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள திருவள்ளுவம் நூல் இடர் நீக்கும் தீர்வுக்கு; குறிப்பாகத் தமிழகத்தை இட்டுச் செல்வதாக அமைத்துள்ளது எனலாம்.

தேர்ந்த 27 தலைப்புகளை அழகுற நிரல்படுத்தி நூலின் உள்ளடக்கமாகக் கொண்டு, அவற்றின்கீழ் துறை போன தமிழ் இலக்கியப் பேராளுமைகள், மொழி ஆய்வாளர்கள் வல்லுனர்களின் பொருள் பொதிந்த அரிய கட்டுரைகளை அடுத்தடுத்து இடம்பெறச் செய்துள்ளது ஆர்வத்துடன் தொடர்ந்து படித்திடத் தூண்டுவதாக உள்ளது.

தொல் பொதுமைச் சமூகத்திற்கு அடுத்த காலத்திற்கும், பின்னைய சித்தர் காலம் தொட்டு முகிழ்த்தெழுந்த பொதுவு டைமைக் கருத்தியல் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் நிலவிய தன்னுடைமை, சமூக உடைமை மற்றும் அரசர் உடைமை கொண்டதாக வள்ளுவர் காலச் சமூக நிலை இருந்திருக்கலாம். வள்ளுவம் பெரிதும் தனிமனித ஒழுக்கம், பண்புகள் பேசுவதும் சமூகத்திற்கான சில பொதுப் பண்புகள் குறித்தும் முடிவேந்தர்கள் பண்பு நலன்கள் குறித்தும் விவரித் துள்ளதைக் கட்டுரையாளர்கள் தக்க குறள்களை மேற் கோளிட்டு விரிவாக விளக்கியுள்ளது திருக்குறளின் பன்முகத் தன்மையை முறையாகப் புரிந்துகொள்ள முனைவோருக்கும் நல்ல வழிகாட்டு நூலாக இது உள்ளது.

நூலில் வள்ளுவர் பிறந்த காலம் குறித்தும் வள்ளுவர் படைத்த திருக்குறள் நூலின் பல்வேறு உரைகள் குறித்த ஆய்வுக் கட்டுரைகளிலிருந்தும் திருக்குறள் உலகெங்கும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதைக் காலவரிசையில் தெளிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதிலிருந்தும் திருவள்ளுவர், திருக்குறள் குறித்த தொன்மை வரலாற்றை அறிய முடிகின்றது.

குறிப்பாகப் பெரியார், திருக்குறள் தமிழுக்கும் தமிழனுக் கும் பெருமை சேர்க்கும் நூல் எனத் தெளிவுபடுத்தி நாடெங்கும் திருக்குறள் மாநாடுகள் நடத்தி பரப்புரைகள் மேற்கொண் டுள்ளது குறித்த கட்டுரைகள் விவரிக்கின்றன. மேலும் திருக் குறள் தமிழினத்தின் எக்காலத்துக்குமான வழிகாட்டி நூல் என்ற கருத்தை பெரியார் வலியுறுத்தி வந்துள்ளார் என்பதும் பெரியார் சில இடங்களில் திருவள்ளுவத்துடன் முரண்படும் அவர் கருத்துகளையும் இடம்பெறச் செய்ததும் போற்றுதலுக்குரியது.

மேலும் இறையியல் கோட்பாட்டைத் திருவள்ளுவர் அவர் தம் குறட்பாக்களில் முற்றிலும் புறக்கணிப்பதுடன் மானுட ஆற்றலையும். மேன்மையையும் நிறுவுகிறார் என்பதற்கான பெரியார் தந்துள்ள விளக்கவுரைகளையும் நூலில் இடம் பெறச் செய்யப்பட்டுள்ளது நூலுக்குச் சிறப்புச் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

அதேபோன்று பொதுவுடைமைத்தத்துவங்களை ஒட்டிய தன்மையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மார்க்சியத் திற்கு முன்னோடியாக அது தொடர்பான பல்வேறு கருத்தியல் களைத் தாங்கித் திருக்குறள் திகழ்வதாகக் கட்டுரையாளர்கள் சுட்டுகின்றனர். மேலும் பார்ப்பனிய, சனாதனத்திற்கு நேர் எதிரான "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்றும் "பகுத் துண்டு பல்லுயிர் ஓம்புதல்" எனச் சொல்லும் பல்வேறு குறட் பாக்களை மேற்கோளாகக் காட்டி நிறுவியுள்ளனர்.

மேலும் திருக்குறள் மென்மேலும் பெரும் சிறப்புகள் பெறுவதற்கும் உலகம் முழுமைக்குமான பொது நெறிகளை அளிக்கத்தக்கது என்பதற்கும் இன்னும் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதையும் வலியுறுத்திக் கட்டு ரைகள் பேசுகின்றன.

நூலின் உள்ளடக்கம் தமிழ்மொழி இலக்கியம் சார்ந்தோர் பயனுக்குக்கானது என்பது மட்டுமின்றி, பொதுவாகப் பல்துறை சார்ந்த கல்வியாளர்களும், குறிப்பாகச் சமூக அறிவியல், மானுடவியல் துறைக் கல்வியாளர்களும் விரிவாகப் படித்துப் பயன்பெறும் வகையில் உள்ளது. நூலின் பல கட்டுரைகள் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளத்தக்க தலைப்புகளைத் தரத்தக்கவையாக உள்ளன.

எனவே அனைத்துத்துறை மாணவர்கள், ஆசிரியர்கள் என அனைத்து மக்களும் படித்து பயன்பெற வேண்டிய நூலாகும். திருக்குறள் உலக நூலாக அய்க்கிய நாடுகள் அவையால் அறிவிக்கப்பட ஆவன செய்ய வேண்டும் என்ற அளவுக்கு இந்நூல் வலியுறுத்துவதாக உள்ளது. இந்திய ஒன்றியம் திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் இதற் கெல்லாம் முன்னோடியாகத் திருக்குறள் தமிழ்த் தேசிய

நூலாகத் தமிழ்நாட்டு அரசால் அறிவிக்கப்பட வேண்டும், இந்த இலக்கை முதலில் அடைவதற்குத் தமிழ்ச் சமூகம் ஒன்றிணைந்து தமிழ்நாட்டு அரசுக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும்.

திருவள்ளுவர் 2050 ஆண்டுகள் அடைவுகள் நூல் இன்னும் பல பதிப்புகளைக் காணும் அளவுக்குத் தமிழ் மக்கள், தமிழறிந் தோர் அனைவரும் இந்நூலுக்கு வரவேற்பளிப்பர் என்பது உறுதி.

தமிழ் இலக்கியம் குறிப்பாகக் குறள் இலக்கியம் படிப்போ ருக்கு இந்நூல் ஒரு துணை நூலாக அமையத் தக்கது. எனவே எளிதாக நூலை அடிக்கடி கையாண்டு படிக்கத்தக்க வகையில் ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஒரே தொகுப்பு நூலாக இருப்பதைக் காட்டிலும் இரு தொகுப்புகளாக அமைத்திடலாம். மேலும் இவ்வளவு சிறப்புக்களைக் கொண்ட இந்நூல் 1330 குறட்பாக்களையும் அதற்கான தேர்ந்த குறு உரையையும் கொண்டிருக்கலாம். முன்பே குறிப்பிட்டதுபோல் இந்நூலை மிகவும் குறுகிய கால இடைவெளியில் வெளியிட நேர்ந்து விட்டதால் ஆங்காங்கே அச்சுப்பிழைகள், சில ஒற்றுப் பிழைகள் காணப்படுகிறது. எனவே அடுத்த பதிப்புகள் வெளிவருவதற்கு முன் முழுமையாகவும் பொறுமையாகவும் மெய்ப்புப் பார்த்து முற்றிலும் பிழையே இல்லாத வகையில் வெளியிட ஆவன செய்து நூலுக்குச் சிறப்புச் சேர்க்கலாம்.

## மஞ்சை வசந்தனுக்கு விருது



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெரியார் உயராய்வு மையத்தின் மூலம் 17.9.2019 அன்று தந்தை பெரியாரின் 141வது பிறந்தநாளில் எழுத்தாளர் மஞ்சைவசந்தன் அவர்களுக்கு "பெரியார் சிறப்பு விருதும், "பெல் ஆறுமுகம் அவர்களுக்கு "பெரியார் பரிசு" மணச்சநல்லூர் பெரியார் பெருந் தொண்டர் அரங்கராசன் துணைவியார் அ.அனந்தம் மாள் அவர்களுக்கு "பெரியார் விருதும்" துணை வேந்தர் ப.மணி சங்கர் அவர்களால் விருதும், பண முடிப்பும் வழங்கப்பட்டது. பேராசிரியர் உ.பிரபாகரன். பேராசிரியர் ப.வேலம்மாள். விழாவில் சிறப்புரை யாற்றினார்கள். இவ்விழாவில் பேராசிரியர், அலு வலர்கள், மாணவர்கள், பெரியார்கொள்கை யாளர்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

செய்தி : திருச்சி **ந.கருணாகரன்**

## தோழர் திரு. இரா.குப்புசாமி ஐயா அவர்களின் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வு




தலைமை தோழர் திரு.நாகல்சாமி ஐயா அவர்கள் தோழர் குப்புசாமி ஐயா அவர்களின் மகன் அட்லாண்டிக் பேப்ரிக்ஸ் திரு ரவி அவர்கள் தோழர் குப்புசாமி ஐயா அவர்களின் மகள் திருமதி கல்பனா அவர்கள் இந்த நிகழ்வில் வழக்கறிஞர் குணசேகரன் ஏற்புரை வழங்கியவர் தோழர் குப்புசாமி ஐயா அவர்களின் மருமகன் அட்லாண்டிக் பேப்ரிக்ஸ் திரு தண்டபாணி அவர்கள் குமாரசாமி கல்லூரியின் தாளாளர் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் சிறப்புரையாற்றி படத்தை திறந்து வைத்தவர்கள்: தோழர் திரு இரத்தினவேல் ஐயா அவர்களும தோழர் திரு.கிருஷ்ணமாச்சாரி அவர்களும் நினைவேந்தல் உரை யாற்றியவர்கள்: சமூக கல்வி மேம்பாட்டு இயக்கத்தின் பொறுப்பாளர் திரு. மு. பழனிச்சாமி ஐயா அவர்கள். இயற்கை வாழ்வியல் மன்றத்தின் தலைவர் திரு. பொடாரன் ஐயா அவர்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினரும் சி.ஐ.டி.யு கரூர் மாவட்ட தலைவர் தோழர் திரு ஜீவானந்தம் அவர்கள் திராவிட கழகத்தின் நகர தலைவர் மானமிகு க. சதாசிவம் அவர்கள் திராவிட கழகத்தின் கரூர் மாவட்டத் தலைவர் மானமிகு குமாரசாமி அவர்கள் பெரியார் திராவிட கழகத்தின் கரூர் மாவட்டத் தலைவர் மானமிகு தனபால் ஐயா அவர்கள் சமூக கல்வி மேம்பாட்டுக் குழு பொறுப்பாளர் திரு. இராமசாமி ஐயா அவர்கள் மதிப்பிற்குரிய வழக்கறிஞர் பழனிச்சாமி ஐயா அவர்கள் மதிப்பிற்குரிய எல்.ஐ.சி கணேசன் ஐயா அவர்கள் அரசுக் கலைக் கல்லூரி முன்னாள் தொழிற்சங்கத்தின் தலைவர் தோழர் திரு. ஆறுமுகம் ஐயா அவர்கள் மற்றும் பாரதி மேல்நிலைப்பள்ளியின் முதல்வர் திரு. பிராபாகர் அவர்கள் நர்சரி பிரைமரி தலைமை ஆசிரியை திருமதி. மனோரஞ்சிதம் அவர்கள்பள்ளியின் நிர்வாக அலுவலர் மு.பாலா அவர்கள் இருபால் ஆசிரிய பெருமக்கள் மற்றும் மாணவ - மாணவிச் செல்வங்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

நன்றியுரை : திரு. ஆ.சசிகுமார்
தமிழ் ஆசிரியர் அவர்கள்

# கீழடி திமிரும் காளை

**சு. வெங்கடேசன்**
*சாகித்ய அகாடமி விருது பெற்ற காவல் கோட்டம் நாவலின் ஆசிரியர். நாடாளுமன்ற உறுப்பினர்.*

உலகெங்கும் உள்ள தமிழ்ச் சமூகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கிறது சென்ற வாரத்தில் தமிழக அரசின் தொல்லியல் துறை வெளியிட்ட கீழடி தொடர்பான அறிக்கை. கீழடியில் கிடைத்த கட்டுமான அமைப்புகள் முதிர்ச்சி பெற்ற சமூகத்தின் அடையாளம். எழுத்தறிவும், சிறந்த கைவினைத் தொழில் நுட்பமும், உள்நாடு மற்றும் வெளிநாடு வணிக வளமும் கொண்ட இந்நாகரிகத்தின் காலம் கி.மு. 600 என்று அது கூறுகிறது. அதாவது, கீழடியின் வயது 2600 என்று கூறும் அந்த அறிக்கை, அந்தக் காலக்கட்டத்திலேயே எழுத்தறிவு பெற்ற சமூகமாகத் தமிழ்ச் சமூகம் இருந்ததையும் விரிவான ஆதாரங்களோடு நிறுவ முயல்கிறது. ஆனால், தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேற்கண்ட முயற்சியின் விளைவு இது என்பதையும், கீழடியை அணுகும் விதத்தில் இனியேனும் மத்திய அரசு சிறப்புக் கவனம் அளிக்க வேண்டும் என்பதையும் இங்கு நாம் அழுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறது.

### மூன்று கட்ட ஆய்வுகள்

நான்காண்டுகளாகக் கீழடியில் ஆய்வு நடந்திருக்கிறது. மத்திய தொல்லியல் துறை முதல் மூன்றாண்டுகள் ஆய்வுகளை நடத்தியது. அதில் முதல் இரண்டு ஆண்டுகள் ஆய்வுகளை நடத்திய அமர்நாத் இராமகிருஷ்ணன் குழு 102 குழிகள் அகழ்ந்தது. அவற்றில் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில், 2017 பிப்ரவரியில் இடைக்கால அறிக்கை கொடுத்தார் அமர்நாத் இராமகிருஷ்ணன். தமிழகத்தில் முதன்முறையாக நகர நாகரிகத்துக்கான விரிவான கட்டுமானங்கள் கிடைத்திருக்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

விரைவிலேயே அவர் பணியிடம் மாற்றப்பட்டார். மூன்றாவது ஆண்டில் ஆய்வுகளை நடத்திய ஸ்ரீராமன், வெறும் 10 குழிகளை மட்டுமே அகழ்ந்தார். புதிய ஆதாரங்களோ, கட்டுமானத்தின் தொடர்ச்சியோ கிடைக்கவில்லை; புதிய சான்றுகளும் எதுவும் கிடைக்கவில்லை என்று ஒரு பக்க அறிக்கையை மத்திய அரசுக்கு அவர் அனுப்பினார். அந்த அறிக்கையின் அடிப்படையில் கீழடி ஆய்வை முடித்துவிட்டு வெளியேறியது மத்திய தொல்லியல் துறை.

இந்தக் கட்டத்திலிருந்துதான் நான்காம் ஆண்டில் சிவானந்தம் தலைமையில், தன்னுடைய அகழாய்வைத் தொடங்கியது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை. 34 குழிகளில் நடத்தப்பட்ட இந்த அகழாய்வில் கிடைத்த சான்றுகளை உயரிய ஆய்வு நிறுவனங்களின் பார்வைக்கு அனுப்பி, அவர்கள் அளித்த மதிப்பீட்டின்படியே தன்னுடைய அறிக்கையை அது சமீபத்தில் சமர்ப்பித்தது.

ஓர் ஆண்டில் கிடைத்த சான்றுகளே மறு ஆண்டும் கிடைக்கும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. முதல் ஆண்டில் விரிவான ஆதாரங்கள் கிடைத்து, மறு ஆண்டில் எதுவும் கிடைக்காமலும் போகலாம். ஆய்வு என்பது இவை அனைத்தையும் உள்ளடக்கியதுதான். இன்னும் துல்லியமாகச் சொல்லப்போனால், சான்றுகள் என்று எது கருதப்படுகிறதோ அது கிடைத்த இடத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறதோ அதே அளவு சம முக்கியத்துவம் பெற்றதுதான் கிடைக்காத இடமும். சான்றுகள் கிடைத்த இடத்துக்கும் கிடைக்காத இடத்துக்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றி தொல்லியல் அறிஞர்கள் விவாதிக்கட்டும். நாம் எழுப்ப வேண்டிய கேள்வி, இந்த அறிக்கைகள் அடிப்படையில் அரசு எடுக்கும் முடிவுகள் தொடர்பில்தான்.



### சர்ச்சைகளும் முடிவுகளும்

ஏற்கெனவே, கீழடி ஆய்வில் தீவிரமான ஆர்வம் காட்டிவந்த அமர்நாத் இராமகிருஷ்ணன் அங்கிருந்து பணிமாற்றம் செய்யப்பட்டது உள்ளூர் மக்களிடம் அதிருப்தியையும் சந்தேகத்தையும் உண்டாக்கிய நிலையில், புதிதாகப் பொறுப்பேற்ற ஸ்ரீராமன், கீழடி ஆய்வையே முடிக்கும் அளவுக்குக் கொடுத்த அறிக்கையையேனும் மத்திய அரசு கேள்விக்குட்படுத்தியிருக்கலாம். ஒரு வருஷம் முழுக்கவுமே வெறும் 10 குழிகள் அளவுக்கு மட்டுமே அகழாய்வு நடத்த முடிந்ததா? ஓராண்டில் இந்த ஆய்வுக்காகக் கொடுக்கப்பட்ட பணத்தில் மூன்றில் ஒரு பங்கைக்கூட நீங்கள் ஏன் செலவிடவில்லை? இன்னும் கொஞ்சம் முயன்றுபார்க்கலாமா? என்றுகூடக் கேட்காமல் ஸ்ரீராமன் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் அப்படியே கீழடியைக் கைவிட்டது மத்திய அரசு.

இப்போது மாநிலத் தொல்லியல் துறை நடத்தியிருக்கும் ஆய்வு கீழடியின் முக்கியத்துவத்தை ஒட்டுமொத்த நாட்டுக்கும் உணர்த்தியிருக்கும் சூழலிலேனும், கீழடியை இனி கூடுதல் முக்கியத்துவத்துடன் அணுக முற்பட வேண்டும். முழு ஆய்வையும் முடிக்காமல் ஒரு அதிகாரி கொடுக்கும் அறிக்கையின் அடிப்படையில் ஆய்வை முடித்துக்கொள்ளும் போக்கைக் கைவிட வேண்டும்.

கீழடியில் உள்ள தொல்லியல் மேடு என்பது தனித்த ஒன்றல்ல. 110 ஏக்கர் கொண்ட அம்மேட்டுக்குப் பக்கத்தில்

90 ஏக்கரில் இன்னொரு மேடு உள்ளது. கீழடியைச் சுற்றி கொந்தகை, மணலூர், அகரம் ஆகிய கிராமங்களும் இதே அளவு தொல்லியல் எச்சங்களோடு உள்ளவை என்று கருதப்படுபவை.

இவை அனைத்தும் ஒரே குவிமைய நிலப்பரப்பு என்பது இங்கு நாம் கவனிக்க வேண்டியதாகும். ஒரு பெரும் நீர்நிலையைச் சுற்றிய நிலவியல் அமைப்பாக இது இருந்திருக்கலாம். வைகையின் நீரைக் கால்வாய் வழியாக இரண்டு கி.மீ. தூரம் பிரித்து வந்து, நீர் தேக்கி வேளாண்மையில் ஈடுபட்டவர்களாக அங்கு வாழ்ந்தவர்கள் இருந்திருக்கலாம். ஆனால், இவையெல்லாம் தொடர் ஆய்வுகளில் நிறுவப்பட வேண்டியவை.

**இரு கோரிக்கைகள்**

ஆகவே, கீழடியைச் சுற்றியுள்ள இப்பகுதியைப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கும் பணி முதன்மையானது. உத்தரப் பிரதேசத்தில் பாக்பத்தில் உள்ள சனவுலி கிராமத்தில் 28.67 ஏக்கர் நிலத்தைப் பாதுகாக்கப்பட்ட நிலமாக சில நாட்களுக்கு முன் மத்திய தொல்லியல் துறை அறிவித்துள்ளதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். அங்கு கடந்த ஆண்டு மத்திய தொல்லியல் துறை நடத்திய அகழாய்வில் பழங்காலச் சவப்பெட்டிகளும் கல்லறைகளும் கிடைத்துள்ளன. அவற்றின் காலத்தைக் கணிக்கக் காலப் பகுப்பாய்வுக்கு மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ளன. **ஆனால், அவற்றின் முடிவுகள் வருவதற்கு முன்பே அவ்விடத்தைப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்திருக்கிறது மத்திய தொல்லியல் துறை.**

**ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகளாக 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொல்லியல் பொருள்களும் கட்டுமானச் சான்றுகளும் கண்டுபிடிக்கப்பட்டு, ஒன்றுக்கும் மேற்பட்ட முறை காலப் பகுப்பாய்வுக்கு மாதிரிகளை அனுப்பி, கால நிர்ணயம் செய்யப்பட்ட கீழடியின் ஆய்வுக்குரிய நிலம் இன்னும் பாதுகாக்கப்பட்ட நிலமாக அறிவிக்கப்படவில்லை.**

அடுத்து, கீழடியில் சர்வதேசத் தரத்தில் ஒரு அருங்காட்சியகமும் அமைக்கப்பட வேண்டும். கீழடியில் ஆய்வு தொடங்கப்பட்ட அதே காலக்கட்டத்தில், அகழாய்வு தொடங்கப்பட்டதும் பிரதமர் மோடியின் சொந்த நகரமான குஜராத்தின் வட் நகரில் இதுவரை கிடைத்த பொருள்களைக் கொண்டு, சர்வதேசத் தரத்தில் மெய்நிகர் அருங்காட்சியகம் அமைக்க சர்வதேச ஒப்பந்தப்புள்ளியை மத்திய தொல்லியல் துறை கோரியுள்ளதை இங்கு சுட்டிக்காட்டலாம். மத்திய அரசிடம் இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்துவது மாநில அரசின் கடமையும்கூட.

கீழடியில் கிடைத்த எலும்பை டெக்கான் கல்லூரிக்குப் பகுப்பாய்வுக்கு அனுப்பியதில், அது திமிலுடைய காளையின் எலும்பு என ஆய்வு முடிவுகள் கூறுவதாகச் சொல்கிறது தமிழக தொல்லியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கை. வைகை நதியிலிருந்து கீழடியின் வழியே மேலேறும் திமிலுடைய காளை தமிழின் குறியீடு!

- ***தமிழ் இந்து 26.9.2019***

## திருச்சியில் பெரியார் பிறந்தநாள் விழா



திருச்சியில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் மூலம் பெரியார், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா சிறப்புக்கூட்டம் 14.9.2019 அன்று நடைபெற்றது. விழாவில் மாவட்டத்தலைவர் தோழர் க.செகநாதன், சீனி.விடுதலை அரசு மற்றும் கோவை. கு.இராமகிருட்டிணன் சிறப்புரை. பொருளியல் வல்லுனர் ஜெயரஞ்சன் "இந்தியப் பொருளாதாரம் இன்றைய நிலை" என்ற தலைப்பில் உரையாற்றினார். பெரியார் இயக்கத் தொண்டர்கள் திரளாகக் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

செய்தி : **மங்களம் அரசன்**



திருச்சியில் தமிழ் நாடு முற்போக்குப் பெண் வழக்கறிஞர்கள் சங்கம் நடத்திய தந்தை பெரியாரின் 141வது பிறந்தநாள் கருத்தரங்கம். 21.9.2019 அன்று அருண் ஓட்டலில் நடைபெற்றது. சங்கத் தலைவர் த.பானுமதி தலைமையில் வழக்கறிஞர் அங்கயற்கண்ணி, முனைவர் இரா. செந்தாமரை, வழக்கறிஞர்கள் பெ.தமயந்தி, கு.பாரதி, பேராசிரியர் சுப. வீரபாண்டியன், கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இறுதியில் பொம்மலாட்டம் கலைக்குழு மூலம் அறிஞர் அண்ணா எழுதிய "நீதி தேவன் மயக்கம்" என்னும் நாடகம் பொம்மலாட்ட வடிவில் நடைபெற்றது.

செய்தி : திருச்சி **ந.கருணாகரன்**

# பெரியார் பிறந்த நாள் செப்டம்பர் 17

- பேராசிரியர் **த.செயராமன்** வரலாற்று ஆய்வாளர்

இன்று செப்டம்பர் - 17 பெரியாரின் 141-வது பிறந்த நாள். பெரியாரின் சிந்தனைகளும், செயல்பாடுகளும் தமிழ்ச் சமூகத்திலும், அரசியலிலும் பெருத்த மாற்றங்களைப் படைத் திருக்கின்றன. சமூகத் தளத்தில் பார்ப்பனியம் தாக்குதலுக்கு உள்ளானது. அரசியல் தளத்தில் இந்தியத் தேசியக் கட்சியிட மிருந்து தமிழகத்தில் அரசியல் அதிகாரம் பறிக்கப்பட்டது. பெரியாரைத் தவிர்த்துவிட்டு தமிழக அரசியலையும், சமூகத் தையும் பற்றிப் பேச முடியாது.

மிகுந்த போற்றுதலுக்கும், விமர்சனங்களுக்கும் உள்ளாகி யிருக்கும் தலைவர் பெரியார். மானுட விழுமியங்களைப் போற்றிய நீண்ட மரபுக்குத் தமிழகம் உரிமை உடையது என் றாலும் கூட, கடந்த நூற்றாண்டில் இந்தியத் துணைக் கண்டத் தின் ஏனைய பகுதிகளில் சாதிய-மத வெறி எவ்வாறு தலை விரித்தாடியதோ, அதே நிலையில்தான் தமிழகமும் இருந்தது. இன்று, இந்துத்துவ மதவெறி எதிர்ப்பில் தமிழகம் முதல் நிலையில் இருப்பதற்கும், இந்தி - சமஸ்கிருத எதிர்ப்பில் தமிழகம் முதன்மை வகிப்பதற்கும் பெரியார் முக்கியக் காரணம் ஆவார்.

சாதிய எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பில் ஒரு பொதுப்போக்கைக் கட்டமைப்பதில் பெரியாரின் பங்களிப்பு அளப்பரியது. பெயருக்குப் பின்னால் பின்னொட்டாக சாதியைப் போட்டுக் கொள்ளும் சாதி அடையாளத்தைப் பயன்படுத்துகிற வழக்கம் இன்று தமிழகத்தில் இல்லை. ஆந்திராவில் பெயருக்குப் பின்னால் விஷால் ரெட்டி என்று போட்டுக்கொள்ளும் நடிகர், தமிழகத்தில் வெறும் விஷால் என்ற பெயரோடு தோன்ற வேண்டியிருக்கிறது. ஏனென்றால், தமிழ்ச் சமூகம் சாதிப் பின்னொட்டுப் போட்டால் ஏற்காது என்ற உறுதியான உளவியல் உருவாகியுள்ளது. இன்று தமிழகத்தில், பெயருக்குப் பின்னால் சாதியைப் பின்னொட்டாகப் போட வெட்கப்படுகிறார்கள். இது பெரியார் இயக்கத்தால் ஏற்பட்ட நிலையாகும். சமூக விடுதலை, பெண் விடுதலை, இந்து மத மறுப்பு, இந்தியத் தேசிய மறுப்பு, தமிழ்நாடு விடுதலைக் கருத்தியல் ஆகிய தளங்களில் பெரியாரின் பங்கு மகத்தானது.

சாதி ஒழிப்பின் தேவைபற்றி பெரியார் அழுத்தமான பார்வையைக் கொண்டிருந்தார். தமிழர் ஓர்மையைக் கட்டுவதில் பெரியாரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. சாதி ஒழிப்பு பற்றிய தொடர் முயற்சிகளின் விளைவாக, குறிப்பிடத்தக்க அளவில் தமிழர் ஓர்மை உணர்ச்சி வளர்ந்தது. சாதி பற்றிப் பெரியார் இப்படிப் பதிவு செய்கிறார்: "முதலாவதாக, இந்தச் சாதி என்னும் சொல்லே தமிழ்ச் சொல் அல்ல. சாதிக்கு ஆதாரம் இந்து மதம் என்று சொல்வது. அந்த இந்து மதம் என்ற சொல்லும் தமிழ்ச் சொல் அல்ல. அதற்கு ஆதாரமாக உள்ள வேதமும், மனுதர்மமும் நமக்கு சம்பந்தப்பட்டவை அல்ல. அவைகள் நம் மொழியில் உள்ளவையும் அல்ல. நம் மக்களால் எழுதியவையும் அல்ல. எப்படியோ அவை நம் தலைக்கு வினையாக வந்து சேர்ந்திருக்கின்றன.

''இந்து என்ற சொல் எந்த மொழியிலும் இல்லை. ஆராய்ச்சிக் காரர்கள் அதை ஒரு நதியின் பெயர் என்கிறார்கள். சிலர் ஓரிடத்தில் வாழும் குறிப்பிட்ட மனிதர்களைக் குறிப்பது என்கிறார்கள். சிலர் பாரசீக மொழியில் திருடர்களைக் குறிப்பது என்கிறார்கள். அது மருவி வந்தது என்பார்கள் சிலர். மற்றபடி வர்ணாசிரம தர்மம் என்னும் சொல் கூட தமிழ்ச் சொல் அல்ல. நம் நாட்டில் அந்நியமம் இருந்திருந்தால், நம் மொழியில் அதற்கு வார்த்தை இருந்திருக்கும்... காப்பியைத் நம் தமிழ் மக்கள் ஆங்கிலேயர் வருவதற்கு முன்பு ஒரு பானமாக உபயோகிக்கவில்லை. அதனால் நம் தமிழ்மொழியில் அதற்கு ஒரு பெயரிடுவது இல்லாமல் போயிற்று. ஆதலால், நாமும் அதை அந்நிய நாட்டுப் பெயரால் 'காப்பி' என்றே அழைக்கின்றோம். வர்ணாசிரம தர்ம சாதிப்பாகுபாடு நம் தமிழ்நாட்டில் ஆரியர்கள் வருவதற்கு முன்பே இருந்திருந்தால் நம் மொழியில் அவற்றிற்கு தனிப்பெயர் இருந்துதான் இருக்கும்.'' (குடியரசு, 30. 10. 1927)

இதன் பொருள் சாதி என்ற சொல்லும் தமிழ் அல்ல; சாதி முறையும் தமிழர்களுடையது அல்ல என்பதுதான்.

மதம், புராணம், இதிகாசம், சாஸ்திரம், பண்பாடு என்று இன்று பல வடிவங்களில் மற்றும் பழக்கவழக்கங்களால் மக்களின் பொதுப்புத்தியில் பல நூற்றாண்டுகளாக ஏறி இருக்கக்கூடிய அடிமைத்தனத்தை மக்கள் மனதில் இருந்து அப்புறப்படுத்திவிட, பல நூறு ஆண்டுகளுக்கு மேலாக உருவாகியிருந்த தமிழ்ச் சமூகத்தின் பொதுப்புத்தியை மாற்றியமைக்கப் பெரியார் தொடர்ந்து போரிட்டார். மக்களின் உளவியலை மாற்றியமைக்க பெரியார் நடத்திய போர் மற்றவர்கள் நடத்தக்கூடிய போராட்டங் களிலிருந்து வேறுபட்ட ஒன்றாகும். சமூக விடுதலை, இந்தியத் தேசிய மறுப்பு, தனித்தமிழ்நாடு கோரிக்கை ஆகியவற்றில் மிகச்சரியாக இருந்த பெரியார், வியப்புக்குரிய வகையில், தமிழ் உணர்வாளர்களின் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி வருகிறார்.

தமிழ் உணர்வாளர்கள் எதன் அடிப்படையில் பெரியாரை விமர்சிக்கிறார்கள்? 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற முழக்கம் முன்வைக்கப்பட்டது. இந்த முழக்கத்தை முதலில் முன்வைத்தது தமிழறிஞர்களா அல்லது பெரியாரா என்ற கேள்வியை முன்வைக்கிறார்கள். இந்த கேள்விக்குப் பதிலாக இந்த முழக்கம் ஒரே காலத்தில் 1938-இல் தமிழ் அறிஞர்களாலும், தம்மாலும் முன்வைக்கப்பட்டது என்று பெரியாரே பதிவு செய்திருக்கிறார்.

'தமிழகத்தில் பிற மொழியினர்' என்ற நூலில் மா.பொ. சிவஞானம் ஒரு முக்கியப் பதிவை அளித்திருக்கிறார்:

"கட்டாய இந்தியை எதிர்த்து முதலில் மறைமலை அடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் கிளர்ச்சி

தோன்றியது. எதிர்ப்பியக்கம் நடத்துவதில் வல்லவரான ஈ.வெ.ரா.வின் தலைமை அதற்குத் தேவைப்பட்டது. அவரும் அதை ஏற்றுக் கொண்டார். தமிழ்ப் புலவர்கள் மட்டுமே நடத்திய தூயமொழிக் கிளர்ச்சியானது பெரியார் தலைமை காரணமாக அரசியல் வண்ணம் பெற்றது. தமிழ் - தமிழர் - தமிழ்நாடு என்ற சொற்கள் முன்னணிக்கு வந்தன. "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற உரிமைக் குரலும் பிறந்தது. வில், புலி, மீன் சின்னங்கள் பொறித்த தமிழ்க்கொடி இந்தி எதிர்ப்பு வீரர்களின் கையில் காட்சியளித்தது. சுயமரியாதைக்காரர்கள் எல்லாம் "தமிழ் வாழ்க" என்று வாய் மணக்க வாழ்த்தினர்."

ஆகவே, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஒரு பெரும் அரசியல் போராட்டமாகப் பெரியார்தான் மாற்றியமைத்தார். அதுமட்டு மன்றி, ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தங்கள் ஆவணங்களில், 1938- ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தை சுயமரியாதைக் காரர்களின் போராட்டமாகப் பதிவுசெய்துள்ளனர். "தமிழ்நாடு தமிழருக்கே" என்று முதலில் வைக்கப்பட்ட முழக்கம் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று பெரியாரால் மாற்றப்பட்டது. இதுவும் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

பெரியார் சென்னை மாகாணத்தைத் தன்னுடைய செயல் தளமாக கருதினார். அன்றைய செயல்பாட்டுத் தளம், வரலாற்றுச் சூழல், உடனிருந்து பயணிப்போரின் மொழிப் பிரிவுகள் - உள்ளிட்ட காரணங்களால் பெரியார் தம் கோரிக்கை முழக் கத்தை திராவிடநாடு திராவிடருக்கே என்று மாற்றியதாகக் கருதலாம். மேலும், அச்சொல் ஆரிய, பார்ப்பன எதிர்ப்புச் சொல்லாகவும் கருதப்பட்டது.

1956 நவம்பர் 1ஆம் நாள், மொழிவாரி மாநிலங்கள் அமைக் கப்பட்டன. அதன்பிறகு, திராவிட நாடு கோரிக்கை கைவிடப்பட்டு, தனித்தமிழ்நாடு கோரிக்கையைப் பெரியார் வலியுறுத்தத் தொடங்கினார். சென்னை மாகாணம் இல்லாதொழிந்ததும் திராவிட நாடு கோரிக்கையை மாற்றிக் கொண்டார். 1973 டிசம்பர் 24 ஆம் தேதி தம் இறப்புவரை இக்கொள்கையில் மாறாமல் இருந்தார்.

தம்முடைய இலக்கான சமூக விடுதலையை அடைய தனித்தமிழ்நாடு பெறுவதைத் தவிர வேறு வழி இல்லை என்று கருதினார். ஒரு இனத்தின் தேசியஇன விடுதலையை வென்றெடுக்க, இன ஒற்றுமையைக் கட்டமைப்பது மிக முக்கியமானதாகும். தமிழ்த்தேசியப் போருக்குத் தமிழ்த்தேசிய இன ஓர்மை என்பது மிகவும் அவசியம். சாதியால் பிரிந்து கிடந்த தமிழர்களை ஒன்றிணைத்து தமிழ்த்தேசிய ஓர்மையைக் கட்டுமானம் செய்யும் போக்கில் பெரியார் பெரும் பங்காற்றினார். தன் இறுதிக்காலம் வரை தமிழ்த்தேசிய ஓர்மைக்குத் தடையாக இருக்கக்கூடிய சாதியைத் தகர்ப்பதிலேயே கவனம் செலுத்தினார். இவ்வாறு தமிழ்த் தேசியப்போருக்குத் தமிழின ஓர்மையைக் கட்டமைத்துக் கொடுத்த பெரியாரைத் தமிழினத்தின் எதிரியாகக் காட்டுவது முரண் ஆகும்.

பெரியாருக்கு எதிராக முன்வைக்கப்படும் மிக முக்கியமான விமர்சனங்களுக்கான காரணங்களுள் ஒன்று , 1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றிய அவருடைய புரிதலும், அவர் நடந்து கொண்ட விதமும் ஆகும்.

1950 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்தியக் குடியரசு அரசமைப்புச் சட்டம், 1965 ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளிட்டு இந்தியா முழுமைக்கும் ஒரே ஆட்சி மொழி இந்தி விளங்கும் என்று விதித்திருந்தது. ஆனால், இச்சட்டத்தை எதிர்த்து, இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்த்துப்பெரும் போராட்டம் தொடங் கியது. 1938-இல் இந்தியை எதிர்த்துப் போராடிய பெரியார், 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டம் குறித்து ஒரு மாறுபட்ட பார்வையைக் கொண்டிருந்தார்.

1938-இல் கல்வி நிலையங்களில் கட்டாய இந்தி புகுத்தப் படுவதை எதிர்த்த பெரியார், 1965-இல் இந்தியா முழுமைக்கும் இந்தி ஒரே ஆட்சி மொழி என்று ஆக்கப்பட்டு இருப்பதை எதிர்த்துக் களம் காணவில்லை. மாறாக, இந்தி எதிர்ப்புப் போராட்டக்காரர்களைக் கடுமையாக விமர்சித்தார். தமிழக முதல்வர் பக்தவச்சலத்தின் காவல்துறையும், இந்திய ராணுவமும் மாணவர்களையும், பொதுமக்களையும் சேர்த்து 500 பேர் அளவில் படுகொலை செய்தன. ஆனால் இப்படுகொலையைப் பெரியார் கண்டிக்கவில்லை. மாணவர்களின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் காலித்தனம் என்று பெரியார் விமர்சித்தார். போராட்டங்களை அத்துமீறும் வன்செயல் என்று கண்டனம் செய்தார். போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டபோது, "பொள்ளாச்சியில் போராட்டத்தை ராணுவம் அடக்கியது; காலிகள் மீது சுட்டதில் 10 பேர் மாண்டனர் - என்று செய்தியாக வெளி யிட்டார். (விடுதலை, 13.02.1965)

1965 மார்ச் 3-ஆம் நாள், விடுதலை இதழில் பெரியார் இவ்வாறு பதிவு செய்தார்: "இன்றைக்கும் நான் இந்தியை எதிர்க்கிறேன். தமிழ் கெட்டுவிடும் என்பதால் அல்ல. தமிழ் கெடுவதற்குத் தமிழில் எதுவும் மீதி இல்லை. ஆங்கிலமே அரசியல் மொழியாக, சட்ட மொழியாக ஆக வேண்டும் என்பதற் காகவே இந்தியை எதிர்க்கிறேன்" என்றார் பெரியார்.

1960-இல் காமராசர் அமைச்சரவையில் இருந்த கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் உயர்நிலைக் கல்வியில் தமிழைப் பாட மொழியாகக் கொண்டு வர அறிவிப்பு செய்தபோது, அதைப் பெரியார் எதிர்த்தார். தமிழைப்பாட மொழியாக அறிவிக்கக் கோரியவர்களைத் தாய்ப்பால் பைத்தியங்கள் என்று அழைத்தார்.

இக்காரணங்களால் பெரியார் தமிழ் உணர்வாளர்களால் கடுமையாக விமர்சிக்கப்படும் நிலையில், பெரியார் பற்றாளர்கள் விமர்சனங்களுக்குப் பல வகைப் பதில்களை அளிக்கிறார்கள்.

1965-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பெரியார் எதிர்த்ததற்குக் காரணம் என்ன? காமராசரின் வழிகாட்டுதலில் நடைபெற்ற ஆட்சியின் மீது எரிச்சலடைந்த பார்ப்பனர்கள், பார்ப்பன ஏடுகள் இந்தி எதிர்ப்பை ஒரு வாய்ப்பாகப் பயன் படுத்தினர் என்றும், அது காமராசர் ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியாகப் பெரியார் கண்டார் என்றும், பார்ப்பனர் ஆட்சி அமைக்க இராசாசி தலைமையில் நடந்த முயற்சிதான் 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்றும், அது எந்த இலக்கும் இல்லாத வன்முறைக் கிளர்ச்சி என்றும் பெரியாரை ஆதரிப்பவர்கள் விளக்கம் அளிக்கின்றனர்.

இவ்வாறு, பெரியாருடைய மொழிப் பார்வைக்கும், இந்தி எதிர்ப்புப் பற்றிய அவருடைய பார்வைக்கும், உயர் கல்வியில் தமிழ் குறித்து அவர் கொண்டிருந்த பார்வைக்கும் விமர்சனங் கள் உள்ளன.

மேற்கண்ட காரணங்களுக்காகப் பெரியாரை ஒட்டு மொத்தமாக நிராகரித்து விட முடியுமா?

இந்து மத மறுப்பு, இந்திய மறுப்பு, இந்திய தேசிய மறுப்பு, ஆகியவற்றில் பெரியார் முன்னோடியாகத் திகழ்ந்தார். தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்திற்குத் தேவையான ஓர்மை-உளவியல் உருவாக்கத்தைப் பெரியார் அளித்தார் என்று கருதலாம். இருபதாம் நூற்றாண்டில், இந்தியத் தேசியத்தைப் பெரியார் மறுத்த அளவிற்கு வேறு எந்த தலைவரும் மறுத்த தில்லை. இந்தியத் துணைக் கண்டத்தில் அனைத்துத் தேசிய இன மக்களுக்குமான பொதுப் பிரச்சினை பார்ப்பனியமும் அதன் அரசியல் வடிவமான இந்தியத் தேசியமும் தான் என்பதைப் பெரியார் நன்கு அறிந்திருந்தார். அறிவியல் பூர்வமாக, மிகவிரிவான விளக்கங்களோடு, இந்தியத் தேசியத்தை அவர் கேள்விக்குள்ளாக்கினார்.

இந்தியா ஒரு நேஷனா? என்ற கேள்வியை 1937 லேயே அவர் முன்வைத்தார்:

"ஐரோப்பாவில் நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம், போர்ச்சுக்கல், கிரீஸ், ஆகிய நாடுகள் நமது 4 ஜில்லா, 3 ஜில்லா, 2 ஜில்லா போன்ற விஸ்தீரணம் உள்ளவை. இவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் நாட்டை தாய்நாடு என்பார்களே ஒழிய, ஐரோப்பாவைத் தாய்நாடு என்பார்களா? ஆகவே, அவர் கள் திராவிட மக்கள் எந்த காரணம் கொண்டு இந்தியாவைத் தாய் நாடு என்று கூற வேண்டும் என்பதும், எதற்காக இந்தியா பூராவும் எப்போதும் ஒரு குடையின் கீழ் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட வேண்டும் என்பதும் எனக்கு விளங்க வில்லை. முதலாவது, பாரதநாடு என்பதையும், நாம் எல்லாம் பரதர்கள் என்பதையும்கூட நான் ஒப்புக்கொள்ள முடியாது." (கொல்லம் பாளையத்தில் பெரியார் சொற்பொழிவு, 19.09.1939)

**1938-இல் பெரியார் இவ்வாறு எழுதினார் :**

"தமிழர் இழிநிலைக்குக் காரணம் இந்து மதத்தைத் தனது மதம் என்று கருதியதும், இந்தியா பூராவையும் தன் நாடு (தேசம்) என்று கருதியதும், இவ்விரண்டுக்கும் உழைக்கும் தொண்டே மக்கள் தொண்டு, தேசத் தொண்டு (தேசாபிமானம்) என்று கருதி வருவதுமே ஆகும். இந்திய தேச அபிமானம் என்பது தமிழன் பல நாட்டாரின் நலனுக்கு உழைத்து, பல நாடுகளுக்கு அடிமை யாய் இருப்பது என்பதாகும். இந்த நிலை அடியோடு அழியாமல் தமிழனுக்கு விடுதலை, சுதந்திரம், தன்மானம் என்பவை ஏற்படப்போவதில்லை." (குடி அரசு, 23.10.1938)

இந்தியாவின் கீழ் இருப்பதற்கும் இங்கிலாந்தின் கீழ் இருப்பதற்கும் என்ன வேறுபாடு என்பதே பெரியாரின் கேள்வி.

"தேடப்பட்டு திரட்டிய செல்வம் அனைத்தும் தமிழ் நாட்டை விட்டு வெளி நாட்டிற்குக் கடத்தப்படுகிறது. இந்தப்படி கடத்தப் படுவது, மேல் நாட்டுக்குப் போனால் என்ன, வடநாட்டுக்குப் போனால் என்ன ? அல்லது கீழ்நாட்டுக்குப் போனால் என்ன? அரசியல் துறையிலும் நாம் (தமிழன்) வேறு நாட்டுக்கு அடிமையாய் இருக்க வேண்டுமானால், அது மேல்நாட்டானுக்கு அடிமையானால் என்ன? வடநாட்டுக்கு அடிமையானால் என்ன? தமிழனின் செல்வம்தான் ஆகட்டும். தமிழ்நாட்டை விட்டு கடத்தித்தான் ஆகவேண்டுமானால், அது மேல் நாட்டுக்குப் போனால் என்ன? வடநாட்டுக்கு போனால் என்ன?"

இந்தியத் தேசியப் பற்று என்ற பெயரில் அடிமைத்தனத்தைப் போற்றுகிறவர்களைப் பார்த்து பரிதவித்துப் பேசுகிறார் பெரியார். "உதைக்கும் காலுக்கு முத்தமிட்டு பூஜை செய்கிறோம். மலத்தை முகருகிறோம். மானம் இழந்தோம், பஞ்சேந்திரியங்களின் உணர்ச்சியை இழந்தோம். மாற்றானுக்கு அடிமையாகி வணங்குகிறோம். இதற்குத்தானா உயிர் வாழவேண்டும்? நம்மை ஏய்த்து அழுத்தி நம் தலை மேல் கால் வைத்து ஏறி மேலே போக வடநாட்டான், தமிழர் அல்லாதவர்களுக்கு நாம் படிக்கல் ஆகி விட்டோம். இனியாவது "தமிழ்நாடு தமிழருக்கே," என்று ஆரவாரம் செய்யுங்கள். புறப்படுங்கள். தமிழ்நாட்டுக்குப் பூட்டப்பட்ட விலங்கை உடைத்து, சின்னாபின்னமாக்குங்கள் ! 'தமிழ்நாடு தமிழருக்கே ' (குடி அரசு, 23.10.1938; விடுதலை, 3. 12. 1957)

நாம் வேறு எந்த நாட்டையாவது இந்த நாட்டிற்கு வந்து ஆட்சி செய் என்று குறிப்பிடுவதாக இருந்தால் அது தேச துரோகம் ஆகும். ஒரு அமெரிக்கனை, ஜப்பான்காரனைக் கூப்பிட்டால் அது வேண்டுமானால் தேச துரோகம் ஆகும். ஆனால் நாம் இங்கே இருக்கிற அந்நிய ராஜ்ஜியத்தை வெளியே போ என்றால் அது எப்படி தப்பாகும்? எப்படி தேச துரோகம் ஆகும்? சொல்லட்டுமே யாராவது! நாங்கள் கூறுவது எல்லாம் எங்கள் நாட்டை எங்கள் ராஜ்ஜியத்தான் அல்லாத அந்நியன் யாரும் ஆளக்கூடாது. நாங்களே இந்த நாட்டை ஆளவேண்டும். வெளியில் இருப்ப வனுக்கு எவ்வித அதிகாரம், ஆதிக்கம் இருக்கக்கூடாது". (திருவல்லிகேணியில் பெரியார் சொற்பொழிவு, 25.02.1951; விடுதலை. 09.03.1951)

இந்தியத் தேசியம் என்பதே ஓர் ஏமாற்றுச் சொல் என்ற கருத்தில் பெரியார் தெளிவாக இருந்தார். இந்தியாவில் தேசியம்

என்ற சொல்லே அபாயகரமான ஒரு சொல் என்று கருதினார். அவர் தேசியம் என்று எந்த இடத்தில் பயன்படுத்தினாலும் அதை இந்தியத் தேசியத்தைக் குறிக்கவே பயன் படுத்தினார்.

தமிழனின் தாழ் நிலைக்குக் காரணங்கள் இந்துமதம், இந்தியத் தேசியம் ஆகியவைதான் என்றார். பெரியாரின் சமூகச் சிந்தனை வருணாசிரம-சாதி இழிவு மறுப்பு என்றால், அவருடைய அரசியல் சிந்தனை இந்தியத் தேசிய மறுப்பு ஆகும்.

தமிழகத்தின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு தமிழகம் இந்தியாவிலிருந்து வெளியேறுவதுதான் என்ற கருத்தை வலிமையாக முன்வைத்தார் பெரியார் :

"பந்தயம் வேண்டுமானாலும் கட்டுவேன். மத்திய அரசாங்கப் பிடியிலிருந்து திராவிட நாடு தனிநாடாகப் பிரியாவிடில், சுதந்திரமில்லை -சோறு இல்லை - மான வாழ்வு இல்லை. இது உறுதி! உறுதி! உறுதி! பந்தயம் வேண்டு மானாலும் கட்டுவேன்!" (விடுதலை அறிக்கை, 25-2-1949.)

தம் சமூக விடுதலை இலக்கை அடைய தனிநாடு பெறுவதைத் தவிர வேறு வழி இல்லை என்பதைப் பெரியார் பலமுறை பதிவு செய்திருக்கிறார். தமிழ்நாட்டு விடுதலை என்பதைச் சுற்றியே அவருடைய செயல்பாடுகள் அமைந்தன.

தம்முடைய இயக்க அமைப்பையும், அதை மனதில் கொண்டே வடிவமைத்ததாகத் தெரிகிறது. அது குறித்தும் அறிந்து கொள்வது அவசியம்.

**பெரியாரைப் பொருத்தவரை, சுயமரியாதை இயக்கமும், திராவிடர் கழகமும் வெவ்வேறு குறிக்கோளைக் கொண்டவை.பெரியார் இவ்வாறு பதிவு செய்கிறார்:**

"சுயமரியாதை இயக்கத்திற்கும், திராவிடர் கழகத்திற்கும் உள்ள தொடர்பு யாவரும் அறிந்ததே ஆகும். சுயமரியாதை இயக்கத்தில் திராவிடநாடு பிரச்சினையை எதிர்ப்பவர்கள் இல்லாவிடினும், அந்த பிரச்சினையை முன்னிறுத்தி, வற்புறுத்தி பிரச்சாரம் செய்து வருவதில்லை. அதேபோல், திராவிடர் கழகத்தில் மதவெறியர்கள், சாதிவெறியர்கள் இல்லை என்றாலும், திராவிட நாடு பிரச்சனைதான் அதிகமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. திராவிட நாடு கிடைத்த பிறகு திராவிடர் கழகம் கலைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆனால், கடைசி மூடநம்பிக்கைக்காரன் இந்த நாட்டில் இருக்கின்ற வரையில் சுயமரியாதைக்காரனுக்கு வேலை இருக்கிறது. சுயமரியாதைக் கொள்கைகளைக் காங்கிரஸ்காரர்களும் கூட பலர் பின்பற்றி வருகின்றனர். ஆனால் அவர்கள் திராவிட நாடு பிரிவதை ஆதரிப்பதில்லை. ஆதலால், சுயமரியாதை இயக்கம் கட்சி பேதம் அற்றது என்று கூடக் கூறலாம். குறிப்பாகக் கூறவேண்டுமானால் திராவிடர் கழகத்தில் தொண்டாற்று வதற்குத் துணிவில்லாத இவர்கள் யாவரும் சுயமரியாதை இயக்கத்தில் கலந்து தொண்டாற்றலாம். (விடுதலை - தலையங்கம், 21.10.1952)

பெரியாரின் விடுதலை தலையங்கத்துப் பதிவிலிருந்து, திராவிடர் கழகம் என்பது திராவிட நாட்டை வென்றெடுப்பதற் காகவே உருவாக்கப்பட்டது என்று பெரியார் கருதினார் என்பதை உணரலாம் . "நாம் இந்தியர் என்பதை விட்டு, மறுபடியும் இன உணர்ச்சியும் எழுச்சியும் பெற வேண்டும் என்று திராவிடர் என்னும் பெயரைக் கொண்டோம்." (குடியரசு, 09.12.1944), என்றும் குறிப்பிடுகிறார்.

திராவிடர் என்ற பெயரைக் கைக் கொண்டதற்கு இந்தியர் என்ற பெயரிலிருந்து விடுபடுவதற்கான வழி என்று பெரியார் கருதியதும் ஒரு காரணமாக இருந்திருக்கிறது . அது சரியானதா, தவறானதா என்பது குறித்து ஆய்வு செய்யத் தேவையில்லை. இந்தியர் என்ற அடையாளத்திலிருந்து விடுபடுவதில் அவர் குறியாயிருந்தார் என்பதை மட்டும் பிறர் உணர்ந்தால் போதும்.

திராவிடர் கழகத்தில் உறுப்பினராகச் சேர திராவிட நாட்டுப் பிரிவினையை ஆதரிப்பதும்,18 அகவைக்கு மேல் இருப்பதும் அடிப்படை விதிகள் என்று ஆக்கினார் பெரியார்.

திராவிடர் கழகத்தில் சேர்வதற்கு அடிப்படைத் தகுதி அவர் திராவிட நாடு விடுதலைக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்று விதிமுறை செய்தார் பெரியார். திராவிட நாட்டு விடுதலையை ஏற்காதவர்களுக்கு திராவிடர் கழகத்தில் இடமே கிடையாது.

சமூக இழிவுகளைப் பற்றிப் பேசிய பெரியார் "இந்த சாக்கிலே நம் நாடு நம்முடையதாக ஆகிவிடாதா, அவ்வளவுதான் " என்று சென்னை தியாகராயநகரில் சிந்தனையாளர் மன்றம் சார்பில் 19.12.1973 அன்று பெரியார் ஆற்றிய இறுதிச் சொற்பொழிவில் குறிப்பிடுகிறார். தமிழ்நாடு பிரிவினைக் கருத்தை வாழும் காலமெல்லாம் மிக வலிமையாக முன்வைத்த பெரியார் இறப்புவரை அக்கோரிக்கையை உயர்த்திப் பிடித்தார். பெரி யாருடைய இறப்புக்குப் பிறகு, பெரியாரியித்தினர் அக்கோரிக்கை யிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டார்கள்.

பெரியார் வாழ்ந்த காலத்தை விடவும் இன்று பார்ப்பனியம் பலம் வாய்ந்ததாக மாறி இருக்கிறது. பார்ப்பனியத்தின் அரசியல் வடிவமான இந்திய தேசியம் என்ற கருத்து இன்று வலுவாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. பார்ப்பனியம் இந்திய ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து தமிழ்நாட்டின் அரசியல் தலைமைகளை அனுமார் சேவையில் அமர்த்தியுள்ளது.

பார்ப்பனியம் இதுவரை தான் அணிந்து வந்த முக்காடு களான 'இந்திய பன்மைத்துவம்', 'வேற்றுமையில் ஒற்றுமை,' - அனைத்தையும் தூக்கிக் கடாசி விட்டது. ஒரே நாடு, ஒரே கொடி, ஒரே வரி, ஒரே தேர்வு முறை, ஒரே குடும்ப அட்டை, ஒரே பண்பாடு, ஒரே மொழி, என்று ஆரியப் பார்ப்பனியம் அதிகார வெறியோடு ஆர்ப்பரித்து வருகிறது. இதைத்தான் பெரியார் அன்றே சுட்டிக்காட்டி எச்சரித்தார். முகத்தில் இருக்கும் வாய் என்ற உறுப்பு பெரியாரை வானளாவப் புகழ என்றும், பெரியாரை வசைபாட என்றும் கருதிக் கொண்டிருப்பவர்கள், பெரியாரின்

பங்களிப்பைச் சரியாக மதிப்பீடு செய்து, ஏற்க இயலாதவற்றை மறுத்து, ஏற்க வேண்டியவற்றை ஏற்று, தமிழின உரிமைகளைப் பாதுகாக்கப் பெரும் போராட்ட வடிவங்களைக் கைக்கொள்ள வேண்டும். பெரியாரியியத்தினர் ஆனாலும் தமிழ்த்தேசிய வாதிகள் ஆனாலும் பதில் வேண்டி அவர்கள் முன் ஒரு கேள்வி காத்து நிற்கிறது. பிரச்சினைகளுக்குத் தீர்வாக பெரியார் முன் வைத்த, அவருடைய முகாமை இலக்கான தமிழ்நாட்டு பிரிவினைக் கோரிக்கையையே தலைமுழுகிய பின் பெரியாரியித்தினர் என்று தங்களை அழைத்துக்கொள்ள பெரியாரியியத்தினர் எப்படி உரிமை பெற்றவர்கள் ஆவீர்கள்?

பெரியார் குறித்து வசைமாரி பொழியும் தமிழ்த் தேசிய வாதிகளும் ஒரு கேள்விக்கு முகம் கொடுத்தாக வேண்டும். "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற முழக்கம் தமிழறிஞர்களைப் பொருத்தவரை, சென்னை மாகாணத்திலிருந்த தமிழ் மாவட்டங்களை மட்டும் பிரித்து, இணைத்து உருவாக்கப்படும் தமிழ் மாநிலத்தைக் குறித்தது. ஆனால் பெரியாருக்கு அது விடுதலைபெற்ற தமிழகத்தைக் குறித்தது.

1947 ஜூலை 1 ஆம் நாளை திராவிடநாடு பிரிவினை நாள் என்று நாடெங்கும் பெரியார் கொண்டாடினார். 15 ஆகசுத்து 1947யை விடுதலை நாளை துக்கநாளாக அனுசரித்தார். 1955-இல் இந்தித் திணிப்பை எதிர்த்து இந்தியக்கொடி எரிப்புப் போராட்டத்தை அறிவித்தார். இந்திய அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை 26 .11.1957- அன்று நடத்தி, பத்தாயிரம் பேர் அரசியல் சட்டத்தைக் கொளுத்தி, 3000 பேர் ஆறு மாதம் முதல் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றனர். பலருடைய குடும்பங்களும் தொழில்களும் சிதைந்து போயின.

1960-இல் தமிழ்நாடு பிரிவினை கோரி, தமிழ்நாடு நீங்கிய இந்தியத் தேசப் படத்தை எரிக்கச் செய்து பெரியார் கைதானார்.

1973 டிசம்பர் 19-ஆம் தேதி, தன் சொற்பொழிவில் தனித் தமிழ்நாடு கோரிக்கையை மீண்டும் வலியுறுத்திய பெரியார், மறுநாள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, 24-ஆம் தேதி இறந்தார்.

போராட்டக் களத்தில் பத்தாயிரம் பேருக்கு மேல் மக்களைத் திரட்டி, அரசமைப்புச் சட்டத்தை எரித்து, 3000 பேருக்கு மேல் தொண்டர்களுடன் சிறை புகுந்து, ஆறு மாதம் முதல் ஒன்றரை ஆண்டுகள் வரை தண்டனை பெற்ற பெரியாரை விடப் பெரும் போராட்டத்தை நடத்திய பிறகுதான் எவரும் பெரியாரைக் குறை கூற முடியும். பெரியார் வாழ்ந்த காலத்தை விட, தமிழ் மொழி - இன- நாட்டு உரிமை இன்று பேராபத்தில் இருக்கிறது. பெரியாரை விஞ்சிய போராட்டத் தலைவர்கள் இன்று தேவைப்படுகிறார்கள். பெரியாரைப் போற்றுகிறவர்கள், தூற்றுகிறவர்கள் - யாராக இருந்தாலும் தமிழின - மொழி - நாட்டு விடுதலைக்கான புதிய போராட்ட வடிவங்களைக் கைக்கொள்ளட்டும்.

இதைத்தான் பெரியாரியியலாளர்களும், தமிழ்த் தேசிய வாதிகளுக்கும் செப்டம்பர் - 17 நினைவூட்டுகிறது.

## புதுச்சேரியில் பெரியார் பிறந்தநாள் விழா



புதுச்சேரி மாநில மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி சார்பாகத் தந்தை பெரியார் 141ஆம் பிறந்தநாளையொட்டி 17.9.19 அன்று புதுச்சேரி வெங்கட்டா நகர் புதுவைத் தமிழ்ச் சங்க அரங்கில் "மார்க்சிய அம்பேத்கரிய பெரியாரிய தத்துவம் பற்றிய "கருத்தரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்வுக்கு புதுச்சேரி மாநில மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிச் செயலாளர் தோழர் பொறிஞர் இரா.திருநாவுக்கரசு தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் புதுச்சேரி மாநில மா.பெ.பொ.க. துணைச் செயலாளர் தோழர் இரா.மாசேதுங் வரவேற்புரை வழங்கினார். கடலூர் மாவட்டச் செயலாளர் தோழர் பா.மோகன், ‘‘மா.பெ.பொ.க. துணைப் பொதுச்செயலர் தோழர் தி.துரை சித்தார்த்தன்,விடுதலை வேங்கைகள் தலைவர் தோழர் இரா.மங்கையர் செல்வன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். இறுதியாகத் தமிழ்த் தேசியத் தன்னுரிமை இயக்க பொதுச் செயலாளர் தோழர் தியாகு சிறப்புரையாற்றினார்.

மொத்த நிகழ்ச்சியின் இடையிடையே விடுதலைக்குரல் கலைக்குழுவினருடன் தோழர் லெனின்சுப்பையா அவர்கள் எழுச்சிப் பாடல்கள் பாடினார். சிறப்புரை முடிந்ததும் ‘கேள்வி பதில்’ நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியின் முடிவில் பல்வேறு பட்ட சிந்தனை கொண்ட இளைஞர்கள் பங்கேற்று தோழர் தியாகு அவர்களிடம் அரசியல் கேள்வி கேட்டு பதில் பெற்றனர்.

இறுதியாகப் புதுச்சேரி மாநில மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி துணைச் செயலாளர் தோழர் சீனு.சந்திரசேகரன் நன்றியுரை வழங்கினார்.‘‘‘‘இது போன்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்துங்கள் என்ற இளைஞர்களின் கோரிக்கையுடன் நிகழ்ச்சி சிறப்பாக நிறைவுற்றது.

## பச்சையம்மாள் மறைவு

காஞ்சி வட்டம், கீழம்பி கிராமத்தில் வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் செயலாளராகப் பணியாற்றியவரும் மா.பெ.பொ.கட்சிக்கு ஆதரவாளருமான ஆரியம் பெரும்பாக்கம் கிராமத்தில் குடியிருக்கும் தோழர் வ. கிருஷ்ணன் அவர்களின் தாயார் பச்சை யம்மாள் 14.9.2019 சனி அன்று 11.00 மணி யளவில் தம் 86ஆம் வயதில் மறைவுற்றார். அன்னாரை இழந்து வாடும் மகன், அவர்தம் துணைவியார், பெயரன்கள் அனைவருக்கும் சிந்தனையாளன் ஆசிரியர் குழு சார்பாக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். காஞ்சி நகரச் செயலர் மு. செயப்பிரகாஷ், மாவட்டச் செயலாளர் சி. நடராசன், இரா.நாராயணமூர்த்தி, வ.வேதகிரி, மு.சந்திர மோகன், சி.பழனி இறுதி வணக்கம் செலுத்தினர்.

# பெரியார் 141ஆம் பிறந்த நாள் விழா
# ஜெயில் சிங் பற்றிய இந்தி மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா
# விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடு கருத்தரங்கம்

**செ**ன்னை சேப்பாக்கம் அரசினர் ஓமந்தூரார் தோட்டம் நிருபர்கள் சங்கத்தின் அரங்கில் 2019, செப்டம்பர் 22ஆம் நாள் மாலை 4 மணி முதல் இரவு 8.25 மணி வரை அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச்சிறுபான்மை யினர் பேரவையின் சார்பில் பெரியார் 141ஆம் பிறந்த நாள் விழா, வே.ஆனைமுத்து எழுதிய "ஜெயில்சிங் பிற்படுத்தப்பட்டோரின் உரிமைக் காவலர்" எனும் ஆங்கில நூலின் இந்தி மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா, உயர்சாதி ஏழைகளுக்கான 10 விழுக்காடு இடஒதுக்கீடு நீக்கப்பட்டு உயர்சாதியினர், பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் ஆகிய எல்லா வகுப்புகளுக்கும் விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடு கருத்தரங்கம் ஆகிய மூன்று நிகழ்ச்சிகள் தோழர் வே.ஆனைத்து தலைமையில் எழுச்சியோடு நடைபெற்றன.

நிகழ்ச்சியில் பேரவையின் பொதுச்செயலாளர் கலச. இராமலிங்கம் வரவேற்புரை ஆற்றினார். பேரவையின் மூத்த உறுப்பினர் இரூர் ச.இராதாகிருட்டிணன் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். "கியானி ஜெயில்சிங் பிற்படுத்தப்பட்டோரின் உரிமைக் காவலர்" என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் வே. ஆனைமுத்து எழுதிய நூலினை முனைவர் பிரேம்சந்த் பதஞ்சலி **பிச்டே வர்க் கே ரட்சக்** என்னும் தலைப்பில் இந்தியில் மொழியாக்கம் செய்து அளித்தார். அந்த இந்தி நூலினைப் பேரவையின் துணைத்தலைவரும் உத்தரப்பிர தேசம் லக்னோ மாநகர முன்னாள் மேயருமான முனைவர் தாவூஜி குப்தா வெளியிட்டார். புதுதில்லியில் செயல்பட்டு வருகின்ற பெரியார்-அம்பேத்கர் தொண்டு நிறுவனத்தின் உறுப்பினரும் வழக்குரைஞருமான லெனின் வினோபரும் இராணிப்பேட்டை பாரதமிகு மின் நிறுவனத்தின் சமூக நீதிப்பேரவையின் செயலாளரான வே.இராசேந்திரனும் இந்தி நூலின் முதற்படியினைப் பெற்றுச் சிறப்பித்தனர்.

பேரவையின் புரவலர் தலைவர் வே.ஆனைமுத்து அகவை 94 ஆண்டுகள்93நாள்கள் (பிறந்த நாள்.21.6.1925) நிரம்பப்பெற்று வழக்கமான தம் கணீரென்ற உரத்த குரலில் ஒங்கித் தம் தலைமை உரையை ஆற்றினார். ஆங்கில நூலினை இந்தி மொழியாக்கம் செய்தவர் முனைவர் பிரேம்சந்த் பதஞ்சலி ஆவர். அவர் பீகார் மாநிலத்தில் டி.எம்.பகல்பூர் பல்கலைக்கழகத்திலும் உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் VBS பூர்வாஞ்சல் பல்கலைக்கழகத்திலும் துணைவேந்தராகப் பணியாற்றியதுடன் வடஇந்தியாவில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பேரவையினை நிறுவி விகிதாசார வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கைக்குப் பாடுபட்டு வருகிறார். ஆனைமுத்து பதஞ்சலி யின் இல்லத்துக்கு ஒருமுறை சென்று வந்திருக்கிறார். அதன்பிறகு தில்லியில் ஆனைமுத்து நடத்திய எல்லாக் கூட்டங்களுக்கும் பதஞ்சலி தம் தோழர்களுடன் கலந்து கொண்டு சிறப்பித்திருக்கிறார்.

இடஒதுக்கீடு தொடர்பான பெரியாரின் எழுத்துகளையும் பேச்சுகளையும் இந்தியில் மொழிபெயர்க்கச் செய்து அந்த நூலினைத் தில்லியில் 1979 மார்ச்சு 23 ஆம் நாள் ஆனைமுத்து வெளியிட்டார்; அந்நிகழ்வின் 40ஆண்டுகள் 6 மாதங்கள் நிறைவடையும் இந்த நாளில் இந்தியில் இந்த இரண்டாம் நுலினை வெளியிடச் செய்துள்ளார். இந்தி மொழிபெயர்ப்பினை மனமுவந்து செய்த முனைவர் பிரேம்சந்த் பதஞ்சலி அவர் களுக்கு பேரவையின் சார்பில் பொன்னாலான வட்டவடிவில் ஜெயில் சிங்கின் முகத்தோற்றம் பதித்த கல்பதித்த கணை யாழியை வே.ஆனைமுத்து பதஞ்சலியின் வலது கைவிரலில் அணிவித்து அவரைப் பெருமைப்படுத்தினார். இந்தக் கணை யாழியின் எடை 8 கிராம் பொன்னும் 2.50 கிராம் கல்லும் கொண்டது. முன்னதாக வித்துவான் கேசவ சுப்பையா அவர் களால் நிறுவப்பட்டு அவருடைய தலைமையில் வளர்க்கப்பட்டு இன்று தக்கலை ப.நடராசன் அவர்களை மாநிலத்தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகின்ற தமிழ்நாடு விசுவகரும நண்பர்கள் சங்கத்தின் கன்னியாகுமரி மாவட்டமும் திருநெல் வேலி மாவட்டமும் சேர்ந்து தங்களுடைய சங்க நிதியிலிருந்து இந்தக் கணையாழியைச் செய்துகொண்டு வந்து வே.ஆனை முத்துவிடம் கொடையாக அளித்து பேரவையின் சார்பில் முனைவர் பிரேம்சந்த் பதஞ்சலிக்கு அணிவித்துச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். இந்த அமைப்பின் குமரி மாவட்டத்தின் சார்பில் தக்கலை ப.நடராசன், வெள்ளை மடம் ஆர்.சுப்பையா ஆகிய இருவரும் மற்றும் நெல்லை மாவட்டத்தின் சார்பில் நாங்குநேரி சு.சதாசிவம், இடைகால் ஈ.எஸ்.ஆறுமுகம், நெல்லை நகரம் எம்.ஆர்.மாணிக்கம், நெல்லை நகரம் கே.எஸ்.கைலாசம் ஆகிய நால்வரும் விழாவில் கலந்து கொண்டு கணையாழி அணி விக்கும் நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்கள்.

நிகழ்ச்சியின் மற்றுமொரு முத்தாய்ப்பாக மண்டல் குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்தக் கோரி 1990 பிப்ரவரி 25 ஆம் நாள் திருவண்ணாமலை மாவட்டம் கீழ்ப்பென்னாத்தூர் ஒன்றியத்தின் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மாவட்டச் செயலாளர் பொ.சுப்பிரமணியன் தலைமையில் முழுநாள் மிதிவண்டிப் பரப்புரைப் பயணத்தில் கலந்து கொண்ட தோழர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழும் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன.

திருவண்ணாமலைப் பகுதியில் ஒரு சிற்றூரில் பிறந்து சென்னை வந்து தொழில் வணிகம் செய்து முன்னேறி சிறப்பாக

வாழ்ந்து வருகின்ற இலக்கியப் புரவலர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் ஒடுக்கப்பட்டோர் பேரவயின் சார்பில் பரப்புரைப் பயணம் செய்த தோழர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்து உரையாற்றினார்.

தொடர்ந்து நிகழ்ச்சியில் முத்தரையர் வரலாற்று ஆய்வுப் பேரவையின் நிறுவுநர் கு.மா.சுப்பிரமணியன், மீனவர்விடுதலை வேங்கைகள் அமைப்பின் மாநிலத்தலைவர் புதுவை மங்கையர் செல்வன், தமிழ்நாடு விசுவகரும நண்பர்கள் சங்கத்தின் மாநிலத்தலைவர் தக்கலை ப.நடராசன், காஞ்சிபுரம் முற்போக்கு சமூக நீதிப்பேரவையின் நிறுவுநர் டாக்டர் விமுனாமூர்த்தி, மறைமலைநகர் பெரியார் சமூக நீதிப்பேரவையின் பொருளாளர் மு.அரங்கநாதன், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் பொன். சுப்பிரமணியன் ஆகியோர் புலே, பெரியார், அம்பேத்கர், லோகியா, ஆனைமுத்து, கியானி ஜெயில்சிங், வி.பி.சிங் முதலானோர் இடஒதுக்கீட்டுக்கு ஆற்றிய பங்களிப்பினை விவரித்து உரையாற்றினர்.

இந்தி நூலை வெளியிட்ட முனைவர் தாவூஜி குப்தா, இந்தி நூலை மொழியாக்கம் செய்த முனைவர் பிரேம்சந்த் பதஞ்சலி ஆகியோர் சிறப்புரையாற்றிய பின்னர் சிறப்பு விருந்தினர் சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி து.அரிபரந்தாமன் இந்திய அளவில் பிற்படுத்தப்பட்டோருக்கு ஆனைமுத்து ஆற்றிய பங்களிப்பினை விரிவாக எடுத்துரைத்ததுடன் உச்ச நீதிமன்றத் தின் தீர்ப்பு பிற்படுத்தப்பட்டோருக்கு மாபெரும் கேட்டினை விளைவித்துவிட்டு என்றும் ஆனைமுத்து கோருகின்ற எல்லா வகுப்புகளுக்குமான விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடுதான் இதற்கான ஒரே தீர்வு என்றும் பேசினார். உயர்சாதிக்கான 10 விழுக்காடு ஒதுக்கீடு அரசமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கா என்பது குறித்து அவையில் ஒருவர் எழுப்பிய வினாவுக்கு து.அரிபரந்தாமன், பெரியாரும் அம்பேத்கரும் லோகியாவும் ஆனைமுத்துவும் நீதிமன்றத்தை நாடவில்லை. அரசியல் தீர்வுதான் சரியானது, மக்களிடம் சென்று பாடுபடுங்கள் என்று கூறினார்.

ப.வடிவேலு நன்றி கூறினார். மறைமலை நகர் பெரியார் சமூக நீதிப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் மா.சமத்தவமணி நிகழ்ச்சித் தொகுப்புரை வழங்கினார்.

செய்தி : **கலசம்**

# அதிரன் தோற்றம்

மா.பெ.பொ.க. வேலூர் மாவட்டச் செயலாளர் மோ.சி.சங்கர்-கஸ்தூரி இணையரின் மகன் சி.கவுதமன்-பி.வாணி வாழ்க்கை இணைஏற்பு விழா தோழர் வே.ஆனைமுத்து தலைமையில் 23.8.2018 அன்று நடைபெற்றது. இவ்விணையர்க்கு 10.9.2019 அன்று ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு அதிரன் எனப் பெயர் சூட்டினர். இந்நிகழ்வின் மகிழ்வாக உருபா 5000/- சிந்தனையாளன் வளர்ச்சிக்காக அளிக்கப்பட்டது.

# இராசபாளையத்தில் பெரியார் பிறந்தநாள் விழா




மறக்கண்ணு திருமண மண்டபத்தில் 17-09-2019 காலை முதல் மாலை 4 மணி வரை பெரியார் பிறந்தநாள் விழா நடந்தது. அ.பன்னீர்செல்வம் தலைமை உரை யாற்றினார். தமிழாசிரியர் ஆ.நெடுஞ்சேரலாதன் வரவேற்புரையாற்றினார். கி.கிருட்டிணன் அறிக்கை வழங்கினார். எ.அரசகுரு கல்லூரிப் பேராசிரியர் சு.நல்லசிவன் கருத்துரையாற்றினார்கள். பகுத்தறிவுப் பா முழக்கம் அமர்வில் பாவலர் புகழ்ச்செல்வி இதழாசிரியர் பரணிப் பாவலனும் தளவை இளங்குமரனும் மூடநம்பிக் கைகளை ஒழிக்கப் பாடினர். பெரியார் நேற்று தேவைப் பட்டார். இன்று தேவைப்படுகிறார், நாளை தேவைப்படு வார்; எனச் செல்வப்பிரியா, தொ.சீனியம்மாள், இரமேசு மூவரும் கல்லூரிகள் சார்பாய் வந்து உரையாற்றினர். இதற்கு சு.நயினார் தலைமையேற்று நடத்தினார். மூன்றாம் அமர்விற்குக் கூட்டுறவுக் கல்லூரி முதல்வர் சி.காப்பித்துரை தலைமை தாங்கிப் பேசினார். 'நான் பெரியாரால் பகுத்தறிவு பெற்று, மானமும் அறிவும் பெற்றேன்'. என்னும் பொதுத் தலைப்பில் தொழிலாளர் ஆல.தமிழ்ப்பித்தன் வணிகர் பெரியார் குமார், வழக் கறிஞர் கு.பால்ராசு, கட்சியர் காதர் மைதீன், மருத்துவர் சாந்திலால் பங்கேற்றுப் பேசித் தன்னம்பிக்கை ஊட்டினர். இறுதி அமர்வில் 'பெரியாரியலாளர்' விருது பெற்ற தஞ்சாவூர் இராம.சந்திரசேகரனுக்குத் தஞ்சைப் புலவர் இரா.கலியபெருமாள் பட்டாடை அணிவித்தார். புலவர் மா.கந்தசாமி விருதுக் கேடயம் வழங்கினார். விருது பெற்ற இராம. சந்திரசேகரன் ஏற்புரையாற்றினார். பெரியாரியல் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு மறைந்த பெரியார் தொண்டர் கள் ஐவர் பெயரில் பரிசுகளும் சான்றுகளும் பெரியார் நூல்களும் வழங்கப்பட்டன. இரா.பாண்டிமுருகன் நன்றி கூறினார்.

## மண்டல் பரிந்துரையைச் செயல்படுத்தக்கோரி
## மிதிவண்டியில் பரப்புரைப் பயணம் - பாராட்டுச் சான்றிதழ்



**"மண்டல் குழு பரிந்துரையை உடனே அமுல்படுத்து!"**
**"தேவிலால் தலைமையிலான குழுவை உடனே கலைத்திடு"**

என முழங்கிக் கொண்டு நெடுங்காம்பூண்டி, மேட்டுப்பாளையம், கல்பூண்டி, தள்ளாம்பாடி, மேக்களூர், வழுதலங்குணம், கனபாபுரம், கழிக்குளம், நாரியமங்கலம், சிறுநாத்தூர் முதலான ஊர்களில் 25.2.1990 ஞாயிறு காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை எழுச்சிமிகு பயணத்தைத் தோழர்கள் மேற்கொண்டனர்; சென்ற ஊர்களிலெல்லாம் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டனர். நாரியமங்கலம் கிராமத்தில் க.ஆசைத்தம்பி குடும்பத்தினர் பரப்புரையினர் அனைவருக்கும் சிறப்பாக மதிய விருந்தளித்தனர். வளரும் தலைமுறையின் இந்தப் பரப்புரை அப்பகுதியில் வெகுமக்களிடையே மக்கள் நாயக உரிமைகளை அடைய வேண்டும் என்கிற விழிப்பை உண்டாக்கியது. பரப்புரையில் கலந்து கொண்ட தோழர்கள் வருமாறு:

1. **ப.இரவி,** த/பெ பரசுராமன், அண்ணா தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
2. **மா.ஆறுமுகம்,** த/பெ மாணிக்கம், அண்ணா தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
3. **ந.சுப்பிரமணியன்,** த/பெ நடேசன், அண்ணா தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
4. **பொ.சுப்பிரமணியன்,** த/பெ பொன்னுசாமி, அண்ணா தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
5. **கி.சுந்தரமூர்த்தி,** த/பெ கிருட்டிணன், பட்டித்தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
6. **மு.ஏழுமலை,** த/பெ முனுசாமி, அண்ணா தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
7. **செ.ச. முருகன்,** த/பெ. சக்கரவர்த்தி, சாலைத் தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
8. **ப.குமரன்,** த/பெ பரசுராமன், அண்ணா தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
9. **பி.முத்துசாமி,** த/பெ பிச்சாண்டி, அண்ணா தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
10. **எ.சிவசங்கர்,** த/பெ எல்லப்பன், அண்ணா தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
11. **சி.செயக்குமார்,** த/பெ சிவபெருமான், அண்ணா தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
12. **நா.கோ.ரமேஷ்,** த/பெ கோபால், அண்ணா தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
13. **கு.சந்தானம்,** த/பெ குப்புசாமி, நெடுங்காம்பூண்டி
14. **கி.ஏழுமலை,** த/பெ கிருட்டிணன், சாலைத் தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
15. **கி.இராமநாதன்,** த/பெ கிருட்டிணன், அண்ணா தெரு, கீழ்ப்பென்னாத்தூர்
16. **சு.காளியப்பன்,** த/பெ சுப்பிரமணி, சிறுநாத்தூர்

சென்னை அரசினர் தோட்டம், நிருபர்கள் சங்க அரங்கத்தில் 22-09-2019 ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்ற பெரியார் 141ஆம் பிறந்தநாள் விழாவில் தோழர்களின் தொண்டினைப் பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

(கலச. இராமலிங்கம்)
பொதுச் செயலாளர்

(மாம்பலம் ஆ. சந்திரசேகர்)
சிறப்பு விருந்தினர்

வே. ஆனைமுத்து
(வே. ஆனைமுத்து)
புரவலர் - தலைவர்

**அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச்சிறுபான்மையினர் பேரவை,** திருவல்லிக்கேணி, சென்னை.

## சென்னை உயர்நீதிமன்றப் பெண் வழக்கறிஞர்கள் சங்கத்தில் பெரியார் பிறந்தநாள் விழா



சென்னை உயர்நீதிமன்றப் பெண் வழக்கறிஞர்கள் சங்கத்தில் 17.09.2019 அன்று மாலை 4.30 மணி அளவில் பெரியார் ஈ.வெ.ரா. 141வது பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டடப்பட்டது. அரங்கம் நிறைந்து விழாக்கோலம் பூண்டது. சங்கத்தில் உள்ள பெரியார் படத்திற்குச் சந்தன மாலையும், ஊதாநிற நீள் முல்லைச்சரமும் அணிவித்தனர். இனிக்கும் பேரீச்சை பழம் அனைவருக்கும் வழங்கி மகிழ்ந்தனர். சங்க உறுப்பினர்கள் பெரும் திரளாக வந்து பெரியார் படத்துடன் நிழற்படங்கள் எடுத்துக்கொண்டனர்.

அன்றைய தலைவர் நளினி, அன்றைய செயலாளர் ஆதிலட்சுமி லோகமூர்த்தி, அன்றைய பொருளாளர் இராசலட்சுமி, அன்றைய செயற்குழு உறுப்பினர்கள் சசிலீ, முன்னாள் செயலாளர் கோவிராமலிங்கம், முன்னாள் தலைவர் டி.பிரசன்னா, தற்போதைய தலைவர் லூயிசால், தற்போதைய துணைத் தலைவர் என்.எஸ். ரேவதி, தற்போதைய நூலகர் துளசி, தற்போதைய முதுநிலை செயற்குழு உறுப்பினர் அபிராமி, தற்போதைய இளநிலை செயற்குழு உறுப்பினர் கயத்திரி, சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர்கள் சங்க மூத்த செயற்குழு உறுப்பினர் தாரா, வழக்கறிஞர்கள் இந்துமதி, வாசுகி, காந்திமதி, கவிதா திருமுகம், சாமுண்டீசுவரி, ஆர்த்தி, ரதிரேகா, மும்தாஜ், விசயலட்சுமி துரைக்கண்ணன், பர்வீன், நசீன் பானு, எஸ்.தனலட்சுமி, சுமதி, கிரிஜா வெங்கட்ராமன், டி.லட்சுமி, இராசகுமாரி கோட்டீசுவரன், காஞ்சனா, ஜெயரோகினி, பி.ஜெ.அனித்தா, என்.கோமதி, மணியம்மை, பொற்கொடி, கோ.ரா.சுந்தரகாந்தம், சங்க ஊழியர்கள், ஜோதி (தட்டச்சர்) ஆகியோர் கலந்துகொண்டனர். பின்னர் உயர்நீதிமன்ற ஆவின் வாயிலருகே மேற்சொன்னவர்களுடன் அன்றைய துணைத் தலைவர் ஜி.வி.சோபா மூத்த வழக்கறிஞர் வீரகேசரன், சந்திரசேகர், நளினி, விஜி, யமுனா, பெண் வழக்கறிஞர் சங்க முன்னாள் துணை தலைவர் தமிழரசி, ரமாதேவி ஆகியோரும் கேக் வெட்டி முழக்கங்களிட்டு உயரையாற்றி பெரியார் பிறந்தநாளைக் கொண்டாடினர். பெண் வழக்கறிஞர் சங்கக் கொண்டாட்டங்களைத் திருமதி. கோவிராமலிங்கமும் செல்வி. கோ. ரா.சுந்தரகாந்தமும் ஏற்பாடு செய்தனர். ஆவின் வாயிலருகே கொண்டாட்டங்களை செல்வி.மணியம்மை ஏற்பாடு செய்தார்.

**வாழ்க பெரியார் கொள்கை!**

செய்தி : **கோவிராமலிங்கம் – கோ.ரா.சுந்தரகாந்தம்**
வழக்குரைஞர்கள், சென்னை உயர்நீதிமன்றம்

### கோ.ரா.வெற்றியின் ஆங்கில மொழிபெயர்ப்பில்
## பெரியார் சிந்தனைகள்

சென்னையில் 22.9.2019இல் பெரியார் பிறந்தநாள் விழாவில் கலசம்-கோவி இணையரின் மகன் கோ.ரா.வெற்றி தாம் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்த பெரியாரின் சிந்தனைகளான பிறப்புரிமையும் அதன் தடைகளும் மற்றும் (இந்தியா ஒரு நேஷனா) என்னும் இரண்டு நூல்களை வே.ஆனைமுத்து முன்னிலையில் டாக்டர் பிரேம் சந்த் பதஞ்சலிக்கும் டாக்டர் தாவூஜி குப்தாவுக்கும் அளித்தார். அவற்றை அவ் இருவரும் படிக்கும் காட்சி.



*(இடமிருந்து அமர்ந்தவர்) :* வே.ஆனைமுத்து, டாக்டர் பிரேம் சந்த் பதஞ்சலி டாக்டர் தாவூஜி குப்தா *(இடமிருந்து நிற்பவர்) :* வே.இராஜேந்திரன், சி.மனோஜ்குமார், கலசம், கோ.ரா.வெற்றி

## குறள் நெறியில் புதுமனை புகுவிழா!



"ஜயன்பேட்டை மு.ஏழுமலை-ஏ.சங்கரி இணையர் புதிதாக கட்டியுள்ள தம் இல்லத்திற்கு திருக்குறள் நெறியில் புதுமனை புகு விழா நடத்தினர்."இவ்விழாவினை காஞ்சியில் கடந்த 21 ஆண்டுகாலமாக உலகப்பொதுமறை திருக்குறள் பேரவை என்கிற அமைப்பை நடத்திவரும் அதன் நிறுவனர் தோழர் குறள் அமிழ்தன், தலைவர்.புலவர் கு.பரமானந்தம், மற்றும் பேரவை மாணவர்களைக்கொண்டு திருக்குறள் ஓதி குறள் நெறியில் புது மனை புகு விழாவினை சிறப்பாக நடத்தினர்."விழாவிற்கு வந்திருந்த உறவினர்கள், நண்பர்கள் இது போல் நாமும் செய்யலாமே என்று கூறி பாராட்டிச்சென்றனர்.

"தமிழர் இல்லங்களில் குறள் நெறியில் விழாக்கள் நடத்த விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொடர்பு எண்கள் : **குறள் அமிழ்தன்-9364323915**
**புலவர்.கு.பரமானந்தம்-9894227612**

# அகழ்வாராய்ச்சிகளும் பெரியார் ஈ.வெ.ரா.நாகம்மை அறக்கட்டளையும்

மனிதன் தோன்றிய காலத்திலிருந்து அவனுடைய வாழ்க்கை முறை, வரலாறு, பண்பாடு, சமூக கலை பொருளாதாரக் கூறுகள், விவசாயம், அரசியல், உறவு முறைகள் பற்றி நாம் தெரிந்துகொள்ளப் பயன்படுபவையே அகழ்வாராய்ச்சிகள். நமக்குத் தெரிந்து நம் பாடநூல்களில் வெளிவந்த அரப்பா, மொகஞ்சதாரோ, சிந்து சமவெளி நாகரிகங்கள் ஆகியவற்றை இதுவரை படித்திருப்போம்.

இந்த நாகரிகங்களைவிடக் காலத்தால் முந்தைய நாகரிகம் நம் தமிழர் நாகரிகம்தான் என்பதைத் தற்போது கீழடியில் நடைபெற்றுவரும் ஆராய்ச்சிகளிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளில் அறியலாம். "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி தமிழ்க்குடி" என்று நம் தமிழ்க்குடி வரலாற்றைப் பதிவு செய்துள்ளார்கள்.

தமிழர் நாகரிகம் 2600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதும், கி.மு.6ஆம் நூற்றாண்டிலேயே தமிழர்கள் எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பதும் கீழடியில் நடந்த 4ஆம் கட்ட ஆய்வில் தெரிய வருகிறது. தமிழர்களின் தொன்மை வாய்ந்த எழுத்தறிவுக்கு முக்கியமான வரலாற்றுச் சான்றும், தமிழர் நாகரிகம் பெரும் பழமையான நாகரிகம் என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

கீழடியில் 4ஆம் கட்ட ஆய்வில் கிடைத்த 5000க்கும் மேற்பட்ட அரும்பொருள்களின் தேர்ந்தெடுத்த, மாதிரி சர்வதேச ஆய்வு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு, ஆய்வகச் சோத னைகளின் அடிப்படையில் அறிஞர் குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது. **அதன் அடிப்படையில் நம் தமிழ்நாடு தொல்லியல் துறை மூலம் "கீழடி வைகை நதிக்கரையில் சங்ககால நாகரிகம்" என்ற தலைப்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.**

கீழடி அகழ்வாய்வில் திமில் உள்ள எலும்புக் கூடு கிடைத்திருக்கிறது. அது நம் வேளாண்மைத் தொழிலையும், தமிழனின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்குரிய தொன்மையையும் எடுத்துக்காட்டுகிறது. வடநாட்டவர்கள் தமிழர்கள் மேல் உள்ள காழ்ப்புணர்ச்சியில் பல்வேறு நிகழ்வுகளின் ஆதாரங்களை மூடி மறைத்துவிட்டார்கள். இப்போதும் கீழடியில் 2015 முதல் 2017 வரை நடந்த 3ஆம் கட்ட ஆய்வுகளின் முடிவுகள் இதுவரை வெளியிடப்படாமலேயே உள்ளன.

சிந்து சமவெளி ஆய்வு நடத்தப்பட்ட ஆண்டு 1922. அதற்கு முன்பே 1876-இல் நடத்தப்பட்ட ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு பற்றி பலருக்கும் தெரிய வாய்ப்பில்லை.அந்த ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வைப் பற்றி உலகுக்கு உணர்த்தும் வகையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும், பெரியார் ஈ.வெ. இராமசாமி-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையும் இணைந்து "தமிழ்நாட்டுத் தொல்லி யல் ஆய்வுகள்; ஆதிச்சநல்லூர் சிறப்பும் எதிர்காலத் திட்டங்களும்" என்ற பொருளில் 2009 மார்ச் 4, 5, 6 தேதிகளில் தேசிய கருத்தரங்கமாகப் பல்வேறு அறிஞர்களை அழைத்து நடத்தின.

தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் தலைமையில் நடக்கும் இந்த அறக்கட்டளையின் பல்வேறு செயல்பாட்டிற்கு அனைவரும் ஊக்கமூட்டி, ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

**கு. தொல்காப்பியன்**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - அக்டோபர்-2019

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா.சோதிவாணன்** | சென்னை | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| **திருமதி. சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - அக்டோபர்-2019

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**